# காந்தள்




மட்/கமு/பேத்தாழை சந்திரகாந்தன்
வித்தியாலயம்

2011 - 2017

# காந்தள்

## 2017

மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன்
வித்தியாலயம்

# நூல் பதிப்பு விபரங்கள்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : காந்தள் |
| முத்து | : 01 |
| இதழாசிரியர் | : திருமதி.கலைவாணி வசந்தகுமார் |
| இணை இதழாசிரியர் | : திருமதி.செ.வாணிஸ்ரீ |
| பதிப்பும் வெளியீடும் | : 2017 |
| பிரதிகள் | : 300 |
| பக்கங்கள் | : xxii + 71 |
| பதிப்புரிமை | : மலர்க்குழு |
| | மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் |
| அட்டைப்படம் | : திரு. ச.கஜந்தன் (கஜானந்த் அச்சகம்) |
| கணனி வடிவமைப்பு | : திருமதி.க.வசந்தகுமார் (ஆசிரியை) |
| | திருமதி.ஜ.சதீஸ்குமார் (ஆசிரியை) |
| உதவி வடிவமைப்பு | : செல்வி.செ.ஷர்மியா (VTC பயிலுனர்) |
| கணனி நெறியாள்கை | : திரு.அ.ஸ்ரீதர் |
| அச்சுப் பதிப்பு | : தருண் பிரிண்டர்ஸ், வாழைச்சேனை - 076-6763507 |
| வெளியீடு | : மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் |

# மட்/கது/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்

## மகுட வாசகம்
## (MOTTO)

எண்ணித் துணிக கருமம்

## தூரநோக்கு
## (VISSION)

அறிவு, ஆளுமை, ஆன்மீக மேம்பாடுடைய சமூகம்

## பணிக்கூற்று
## (MISSION)

அரச, ஏனைய நிறுவனங்கள், சமூகத்திடமிருந்து கிடைக்கப் பெறும் வளங்களை உத்தம அளவில் பயன்படுத்தி கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஊடாகவும் பிள்ளைகள் விரும்பும் பாடசாலையாகவும் இயங்கச் செய்து அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் நிறைந்த மாணவர் பரம்பரையை உருவாக்குதல்.

# தமிழ் மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானமறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

# பாடசாலைக் கீதம்

வாழ்க வளமுடன் என்றும்
வாழ்க வளமுடன் என்றென்றும் வாழியவே
நம் பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம்
என்றென்றும் வாழியவே

கிழக்கின் மண்ணின் மீதே
மட்டு நகர் வடக்கே
வங்கக்கடல் மீதருகினிலே
வளங்கள் பல கொண்ட பேத்தாழை கிராமத்தில்
அமைந்த எங்கள் வித்தியாலயம்

(வாழ்க வளமுடன்)

செந்நெறி நிலையினில்
செழிப்புடன் விளங்க
ஒற்றுமை நிலையை உணர்த்திடவே
விழுமியங்கள் பேணி கீர்த்தி மிகு ஆசான்களை
நாடியும் பணிவுடன் கற்றிடுவோம்

(வாழ்க வளமுடன்)

செந்தமிழ் மொழியுடன் சிங்களம், ஆங்கிலம்
ஒருங்கிசைந்திடவே கற்றிடுவோம்
ஆக்கம், அழகியல், அறிவியல் சேர்த்து
கற்று நாமும் தேறிடுவோம்
அறிவை நாமும் பெருக்கிடுவோம்

(வாழ்க வளமுடன்)



# ஆசி மடல்

பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலய பேசரிய
மலராய் 'காந்தள்' மலர்வதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி
முத்தெடுக்கும் கடலோசையும் முகழ்ந்து வரும் தாழை மணமும்
சொத்தெனக் கொண்ட சுந்தர ஊர் தன்னில்,
வித்தகரை விழைவிப்பதற்காய் வித்தியாலயம் ஒன்று
வேண்டுமென விரும்பி பலர் வேட்கையுற
தத்துவத் தமிழ் முதல்வன் தனி நாமத்தில்
வளர்ந்த வித்தியாலயமது தானே காந்தளைப் பூக்கின்றது!

தலைக் கருவாய் காந்தளைச் சுமந்து பிரசவித்து
தாய்மைச் சுகத்தால் தானுயர்ந்த வித்தியாலயமே!
மலைத் தீபமாய் நீ மண்ணகத்தில் மணி ஒளி வீசுக!
மனமுவந்து வேண்டுகின்றேன் மாசற்றான் மலரடியை
கலையும் கல்வியும் உன் இரு விழியாமோ!
கால வெள்ளந்தான் உன்னை கரைக்க இயலுமோ
நிலையெடுத்து நிற்கும் நற்றமிழ் வித்தியாலய
நிகரிலாப் பணிகள் நீடுயர ஆசிக்கின்றேன்!

"உறு பசி ஓவாய் பிணி செறு பகை" எல்லாம்
வள்ளுவம் சொன்னவாறு சேராதிருக்க
பெறு பொருளெல்லாம் விட்டேனும் பெறுவீர்
பேதமிலாக் கல்வியை பெரியோர் புகன்றவாறு
நறு கனிச்சுவை தந்து நாளும் நீ வாழ்க! வளர்க!
நலமெலாம் வேண்டி நான் பணிகிறேன் இறையை
'சிறு மலரல்ல காந்தள் அது செந்தமிழர் அடையாளம்'
சிறப்புடன் மலர செம்மலரால் சேவிக்கின்றேன்.

என்றும் சிவப் பணியிலுள்ள

**கணபதி பூஜா துரந்தரர். சிவஸ்ரீ .மு. சண்முகம் குருக்கள்**

பேத்தாழை வீரையடி விநாயகர் ஆலய பிரதம குருக்கள்



# ஆசி மடல்

"நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்"


(உபாகமம் 28:12)

மட்/கது/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் பாடசாலையின் அதிபரான திரு.க.கதிர்காமநாதன் அவர்களை பல வருடங்களாக அறிந்திருக்கிறேன். அவர் வெளியிடும் இப்புத்தகத்திற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

இப்புத்தகத்தில் வரும் அனைத்து அம்சங்களும் மிகச்சிறப்பாக அமைந்திருப்பதோடு, இதை வாசிக்கின்ற அனைவரும் பயனடைய வாழ்த்துவதோடு, இன்னும் பல புதிய ஆக்கங்களை எதிர்வரும் காலங்களில் வெளியிட்டு மாணவ சமுகத்திற்கும் மற்றும் யாவருக்கும் பயனுடையதாக அமைய வேண்டுமென வாழ்த்துவதோடு கடவுளுடைய இறையாசியும் வழிநடத்தலும் எப்பொழுதும் கூட இருக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

நன்றி.

**அருட்பணி .P. தயாளன்**
பரி.யோவான் ஆலயம்,
வாழைச்சேனை.



# வாழ்த்துச்செய்தி

சிறையிலிருந்து கொண்டு என் சின்னஞ் சிறுசுகளின் முயற்சியை பாராட்ட இது ஒரு சந்தர்ப்பம் என்றே என் மனம் எண்ணிக் கொண்டு எழுதுகிறது. மட்/கது/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் இன்று வெளியிடுகின்ற 'காந்தள்' எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துரைப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இப் பாடசாலையின் மாணவ மணிகள் மற்றும் ஆசிரிய பெருந்தகைகளின் ஆக்கங்களையும் தாங்கி வருகின்ற இச்சஞ்சிகை பாராட்டுக்குரியது. இப்பணி சிறப்புற பாடுபட்ட உள்ளங்கள் அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகட்டும்.


"அறிவு மற்றும் விழுமியங்கள் நிறைந்த பரம்பரையின் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்" ஆரம்பக் கல்வியினது இலக்கும் கூட இதற்கு அடித்தளமிடுவதாகவே அமைந்திருக்கிறது. "மகிழ்ச்சிகரமான மாணவ பருவம் கல்வியின் மூலமே அர்த்தப்படுகின்றது" எனும் உயரிய சிந்தனைக்கு அமைவாக எனது தாய்மண்ணான பேத்தாழையிலே இச்சின்னஞ் சிறு குழந்தைகளுக்கான ஆரம்பப்பாடசாலை பிரதேச மக்களின் ஒப்புதலுடன் நிமிர்ந்து நிற்பதால் நானும் உளமார மகிழ்கின்றேன்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" எனும் மூதாதையரின் வாக்கிற்கு அமைய மாணவர்களின்இளம்பராயம்கல்வியில்அதிகம்செல்வாக்குச்செலுத்தும்பருவமாகும் என்பது உளவியலாளர்களின் கருத்தும் கூட அதற்கு உரம் சேர்த்தாற்போல் எனது சிந்தனையில் உருவான 'ஆரம்பப் பாடசாலை' எனும் எண்ணம் வெற்றி பெற்றிருப்பது மகிழ்ச்சியே. இப் பராயத்திலே அம் மாணவர்களின் உள்ளத்து உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களது கனவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் எமது ஆசிரியப் பெருந்தகைகளின் ஆற்றுப்படுத்தல் அமைவது சாலப்பொருந்தும் என்பது எனது எதிர்பார்ப்பும்கூட. அது செவ்வனே நிகழும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை.

எம் தமிழ் இனத்தின் இருப்பே கேள்விக்குறியாகியுள்ள நிலையில் வலுவான சமூகக் கட்டமைப்பைப் பேண வேண்டிய பொறுப்பு எம் போன்றவர்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தாது கற்றோர்களுக்கும் இதில் அதிக வகிபங்கு உண்டு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அரசியல், பொருளாதாரம், கலை கலாசாரம் மற்றும் கல்வி போன்றவற்றில் தற்போது எமது சமூகம் ஓரளவேனும் சாதிக்கக்கூடிய வழிமுறைகள் கல்வியின் பயனால் ஏற்படுவதேயன்றி வேறொன்றும் இல்லை. எனவே கல்வியே எமது இருப்பிற்கான அத்திவாரம் அதுவும் ஆரம்பத்திலே இருந்து பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அத்துணை பேரையும் சார்ந்ததாகும்.

"இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்" எனும் கூற்றிற்கு அமைய அவர்களினது முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டயமாகும். உண்மையிலே பாடசாலைகளிலே இது போன்ற வெளியீடுகள் மாணவர்களின் ஆக்கங்களை பெருமளவில் தாங்கி வெளிவருவது அவர்களது புறக்கிருத்திய செயற்பாட்டிற்கு புத்துயிர் அளிப்பதுடன் அவர்களது புத்தாக்க சிந்தனைகள் வலுப்பெறும் என்பதும் வெளிப்படையே. இவ்வாறான நல்லதோர் முயற்சியினை மேற்கொண்ட இச் சஞ்சிகை ஏற்பாட்டாளர்களுக்கும் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியப் பெருந்தகைகள், மாணவச் செல்வங்கள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கிராம மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றி கூறுவதுடன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**கௌரவ திரு. சிவ. சந்திரகாந்தன்**
முதல் முதலமைச்சர்
கிழக்கு மாகாணம்.



# வாழ்த்துச்செய்தி

கல்குடா கல்வி வலயத்தின் 83 பாடசாலைகளில் பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாடசாலையாகும். 383 மாணவர்களையும் 11 ஆசிரியர்களையும் கொண்ட எமது வலயத்தின் சிறந்த ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக இது விளங்குகின்றது.

நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தரும் பாடசாலை சமூகத்தினருக்கு தமது அனுபவப் பகிர்வு மூலமாகவும் சிறந்த செயற்பாடுகளை நிதர்சனமாக காண்பிப்பதன் மூலமாகவும் கல்குடா வலயத்துக்கு பெருமை சேர்க்கும் ஒரு சிறந்த பிள்ளை நேயப் பாடசாலையாக இவ்வித்தியாலயம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்குப் பொருத்தமான களநிலைமைகளை ஏற்படுத்தி நெறிப்படுத்தியது கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் எனினும் அதிபர் திரு.க.கதிர்காமநாதன் அவர்களது வினைத்திறனான தலைமைத்துவமும் திறமையான ஆசிரியைகளும் நேர்முகமான சமூகப் பங்களிப்பும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ. சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களது ஊக்குகைகளும் காரணமாகும்.

இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திக் குழுவினர் இணைந்து முதன் முதலாக வெளியிடும் 'காந்தள்' சஞ்சிகை இனிதே வெளிவர வாழ்த்துகிறேன். பாடசாலைகளால் வெளியிடப்படும் இத்தகைய சஞ்சிகைகள் காலத்தின் கண்ணாடிகளாக விளங்குகின்றன. இவை பாடசாலையின் நிலையையும் சமூகத்தின் நிலையையும் பிரதிபலிக்கின்றன. ஆதலால் இடம்பெறுகின்ற ஆக்கங்கள் முக்கியத்தும் மிக்கவையாகின்றன.

இவ்வகையில் 'காந்தள்' தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். இச்சஞ்சிகை வெளியீடு என்றும் போல் விமர்சையாகவும் வெற்றிகரமாகவும் நிகழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது வாழ்த்துக்கள். அத்தோடு இன்று (14-12-2017) நடைபெறும் சாதனையாளர் பாராட்டு விழாவையிட்டு எனது உளங்கனிந்த வாழ்த்துக்களை மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் என யாவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்
**தி.ரவி**
கல்குடா வலயகல்விப் பணிப்பாளர்



# வாழ்த்துச்செய்தி

மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் முதலாவது சஞ்சிகையான 'காந்தள்' வெளியீட்டுக்கு எனது மனமகிழ்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பேத்தாழைக் கிராமத்தில் குறுகிய காலத்தில் தோற்றம் பெற்ற இவ் ஆரம்பப்பிரிவு பாடசாலையானது, மிகவும் வேகமாக கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அபிவிருத்தி கண்டு வருகின்றது சிறப்பானதாகும். எவ்வாறான மாணவர்களையும் கல்வியில் சிறந்து விளங்க வைப்பது ஆரம்பக்கல்வியே ஆகும். அது மாணவர்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும்.

கல்வி மட்டுமல்லாது பழக்க வழக்கம், கலை, கலாசாரம் அனைத்தும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். முக்கியமாக மாணவர்களுக்குத் தனித்திறமைகள் எந்த வகையிலும் காணப்படலாம். அவை வெளிக்கொணரப்பட வேண்டும். பாடசாலைதான் அதற்குரிய மேடையாகும். எனவே இச்சஞ்சிகை வெளியீடானது பாடசாலை வளர்ச்சியையும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் காட்டுகின்றது. மாணவர்களின் ஆக்கபூர்வமான எண்ணங்கள் எழுத்துரு பெற்று மலரும் மலரை வாழ்த்துவதுடன் மேலும் அடுத்து வரும் காலங்களிலும் இச் சஞ்சிகை மலர்வதற்கும் எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இச்சஞ்சிகை வெளியீட்டுக்காக செயற்பட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

**"சிறப்பிதழ் ஆகட்டும் காந்தள்"**

**கௌரவ திரு. நாகலிங்கம் திரவியம்**
முன்னாள் மாகாணசபை உறுப்பினர்,
கிழக்கு மாகாணம், பேத்தாழை.



# வாழ்த்துச்செய்தி


கல்குடா கல்வி வலயத்திலுள்ள மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் வருடாந்த மலரான "காந்தள்"இன் முதலாவது இதழை வாழ்த்துச் செய்தியால் அலங்கரிக்க சந்தர்ப்பம் தந்தமைக்காக முதலில் நன்றியுடன் மகிழ்கின்றேன்.

கிழக்கின் முதலாவது முதலமைச்சர் திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் தூர நோக்குடனான சிந்தனையில் 24.01.2011 ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாடசாலை இன்று கல்குடா கல்வி வலயத்தின் அதிக மாணவர்களை கொண்ட ஆரம்பப் பிரிவு பாடசாலையாக திகழ்வது பெருமைக்குரியது.

இப்பாடசாலையின் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான அபிவிருத்திகளை வருடாந்தம் ஆவணமாக்குவது காலத்தின் தேவையாக உள்ளது. இவ்வகையில் மாணவர்களின், ஆசிரியர்களின், அதிகாரிகளின் சிந்தனைகளில் உருவான ஆக்கங்களைக் கொண்டு வருடாந்தம் சஞ்சிகை வெளியிடுவது இன்றியமையாததொன்றாகின்றது.

"காந்தள்" என்னும் பெயருக்கு அமைவாக இம்மலர் கார்த்திகை மாதத்தில் மலர்வது இவ்வெளியீட்டின் தனித்துவத்தை இரட்டிப்படையச் செய்கின்றது. இச்சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துவதோடு இவ்வெளியீட்டிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை சமூகத்தினர் அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

**திருமதி.எஸ்.குலேந்திரகுமார்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்)
கல்குடா கல்வி வலயம்.



# வாழ்த்துச்செய்தி

தொன்மை மிக்க பேத்தாழைக் கிராமத்தின் சிறார்களுக்குரிய ஆரம்பக் கல்வியை கடந்த 24.01.2011ஆம் ஆண்டு தொடக்கம் சிறப்பாக வழங்கி வரும் மட்/கது/ பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் கன்னி வெளியீடாக மலரும் "காந்தள்" சிறப்புச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதற்கு கிடைத்த வாய்ப்பினையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வித்தியாலயத்தின் ஸ்தாபகத் தலைவராகிய முன்னாள் கிழக்கின் முதலமைச்சரான கௌரவ திரு.சி.சந்திரகாந்தன் அவர்களின் பெயரைத் தாங்கி செயற்பட்டு வரும் இக்கல்வி நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக பல சாதனைகளை படைத்து வருவது பாராட்டுக்குரியது. ஏற்கனவே மிகவும் கோலாகலமான முறையில் பல தடவைகள் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாக்கள் நடந்தேறியுள்ளன. இவை அனைத்திலும் பங்கேற்கும் வாய்ப்புக்கள் எனக்கும் கிடைத்தது. இருப்பினும் இவ்வருடம் முதன் முதலாக ஒரு சிறப்புச் சஞ்சிகையும் இவ்விழாவில் வெளியிடுவது பாராட்டுக்குரியது.

எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இப்பிரதேச பெற்றோர்கள் எப்போதும் பாடசாலையுடன் ஒன்றிணைந்து கூட்டாகச் செயற்படுவது ஒரு தனித்துவமான சிறப்பம்சமாகும். சமூகப் பங்களிப்பின்றி எந்தவொரு பாடசாலையும் தனித்து இயங்க முடியாது. அபிவிருத்திப் பாதையில் அரசியல் தலைவர்கள், பாடசாலை முகாமைத்துவம், பெற்றோர்கள், அதிகாரிகள் நலன்விரும்பிகள் என அனைவரும் கைகோர்த்துச் செயற்படும்போதே வெற்றியடைய முடியும்.

அந்த வகையில் 'காந்தள்' சஞ்சிகை வெளிவருவதற்கு உந்து சக்தியாகவிருந்து உழைக்கும் அதிபர் திரு.க.கதிர்காமநாதன் அவர்களுக்கும், மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திக் குழுவினருக்கும் பெற்றோர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.நா.குணலிங்கம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கோறளைப் பற்று வாழைச்சேனை



அதிபரின் உள்ளத்திலிருந்து...

# வாழ்த்துச்செய்தி

சீர்புகழ் இயற்கை எழில் மிக்க ஆறு, கடல், சூழ் நெய்தல் நிலப்பரப்பையுடைய பேத்தாழைக் கிராமத்தில் அமையப் பெற்ற மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் 24.01.2011 இல் ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருடம் நிறைவு பெறும் இக்காலப்பகுதியில் கம்பளி, செம்பு விழாவினை கொண்டாடும் இந்நிலையில் "காந்தள்" எனும் நாமம் தாங்கி முதல் முதலாக மலரொன்று வெளியீடுவது இவ்வித்தியாலயத்தின் பெருமைக்கும் சிறப்புக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

சமகாலத்தில் பாடசாலை சமூகத்தில் ஆக்கத்திறன்களை வெளிக் கொணரும் வகையிலும், அருகி வரும் கற்றல் குவிப்பை ஏற்படுத்தி சிறந்த தேடல்களை உருவாக்கி கற்போரினை நல் நிலைக்கு ஆளாக்கி நவீன கல்வித் தொடர்பாடல் இலக்குடையதும் நவீன வேலை உலகிற்கு மாணவர் பரம்பரையை உருவாக்கும் சிறந்ததோர் களமாக சஞ்சிகைகள் விளங்குகின்றன. இந்நிலையில் எமது சின்னஞ்சிறு பாலகர்களினதும், ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் இச்சஞ்சிகை வெளிவருவது மாணவர்களின் இளமைக்காலத் தேடல்களுக்குத் துணைபுரியும் என நம்புகின்றேன்.

ஏற்கனவே உதயம், கதிர்ப்பு, காந்தள் என்ற பெயர்களைத் தாங்கி வருடந்தோறும் கையெழுத்துச் சஞ்சிகையாக போட்டியிட்டு வந்த நிலையில் தற்போது அச்சுப்பெற்ற சஞ்சிகை முழுமை பெற்ற மலராக வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும். கல்குடா கல்வி வலயத்தின் பெருமை மிக்க பாடசாலைகளில் எல்லோராலும் விரும்பப்படும் ஒரு வித்தியாலயமாக குறுகிய காலத்தில் வெற்றி நடைபோட்டு வரும் இப்பாடசாலை மேலும் ஒரு முன்மாதிரியான பாடசாலையாக திகழ வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் சஞ்சிகை வெளியீடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் அதிபர் என்ற வகையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

**"எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு"**

**திரு.கயிலாயபிள்ளை கதிர்காமநாதன்**
அதிபர்



உப அதிபரின் உள்ளத்திலிருந்து...

# வாழ்த்துச்செய்தி

கோறளைப்பற்று கல்விப் பிரதேசத்தில் சிறப்புற்று விளங்கும் எமது வித்தியாலயமானது பாடசாலைக்குரிய பல்வேறு விழாக்களை நடாத்தி வருகின்றது. பரிசளிப்பு விழா மூலமாக மாணவர்களின் கலை ஆற்றல் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் மாணவர்களின் எழுத்தாக்கங்களை கையெழுத்துச் சஞ்சிகைகளாக வெளியிடப்பட்டு வந்தது. தற்போது முதல் முறையாக 'காந்தள்' எனும் பெயரில் மாணவர்களின் ஆக்கங்களை சுமந்து அச்சுப் பதிப்பாக வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இம் முயற்சி மென்மேலும் வளரவும் இச் சஞ்சிகை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

**திருமதி. ம. தயாளகுணதாஸ்**
உப அதிபர்



பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி

மட்/ககு/பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் ஆரம்பக் கல்வி பாடசாலையாகும். இப்பாடசாலையிலிருந்து தொடர்ந்து சிறப்பான முறையில் பரிசளிப்பு விழா நடைபெற்றுக் கொண்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும். இவ்வருடம் முதன்முதலாக சஞ்சிகை ஒன்றினை வெளியிடும் பணியில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

இன்று மனிதனை முழு மனிதனாக்குவதில் பெரும்பங்கு வகிப்பவை நூல்கள் ஆகும். மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றன. இக்காலத்தில் பாடசாலை மட்டத்தில் சஞ்சிகைகளை வெளியிட்டு மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை தூண்டும் வகையில் மேற்கொள்ளப்படும் இம்முயற்சி பாராட்டுக்குரிய விடயமாகும். எதிர்காலத்திலும் இது போன்ற செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் எனவும் பாடசாலை மேலும் முன்னேற்றம் பெறவேண்டும் எனவும் இறைவனை பிரார்த்திப்பதுடன் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சி.மோகனதாஸ்**

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில்
திக்கெட்டும் தன் புகழ் பரவி
தித்திக்கும் மழலைகளின் மாடம்.
பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தில்
புதுப்பொலிவுடன் முதல் இதழ் விரித்து
கலையிலக்கியங்களின் படைப்பிற்கு
களமாக கைகளில் தவழும் 'காந்தள்'
கல்வி ஞானத்தின் திறவுகோல்!

ஆளுமை நிறை ஆற்றலுடைய அதிபரின்
அன்பாய் அறிவைப் போதிக்கும் ஆசிரியர்களின்
அடிப்படைக் கல்வியை பதிக்கும் மாணவர்களின்
அகத்தில் ஆரவாரம் செய்த சிந்தனைகளின்
ஆக்க மலராக மலர்வதே காந்தள்!

வரமென எண்ணி பலமான முயற்சியில்
சிரமெனக் கொண்டு எழுத்துருக்களாக்கி - நம்
கரங்களில் கன்னி மலராக தவழும்
காந்தளை குற்றம் களைந்து வாசிப்பதற்கு
வழிவிட்டு அகம் மகிழ்கின்றேன்!

**திருமதி. கலைவாணி வசந்தகுமார்**
ஆசிரியை

## மலர்க் குழு

காப்பாளர் ஆலோசகர்

திரு.க.கதிர்காமநாதன் அதிபர்

## இதழாசிரியர்

திருமதி.க.வசந்தகுமார் ஆசிரியை

## இணை இதழாசிரியர்

திருமதி.செ.வாணிஸ்ரீ

## செயலாளர்

திருமதி.த.ஜீவானந்தம்

## இணைச் செயலாளர்

திருமதி.ஐ.சதீஸ்குமார்

## பொருளாளர்

திருமதி.ம.தயாளகுணதாஸ் (உப அதிபர்)

## ஆலோசனைக் குழு

திருமதி.ப.சின்னத்தம்பி

திருமதி.லோ.ஜெயாபரன்

திருமதி. ஜெ.அருளப்பு

## வெளியீட்டுக் குழு

திருமதி.ற.சுபேந்திரகுமார்

திருமதி.தி.பாஸ்கரன்


திருமதி.சு.சந்திரகுமார்

# Our Staff

| | |
|---|---|
| Mr. K.Kathirgamanathan | SLPS III, Trained in Tamil, B.A.PGDE |
| Mrs.M.Thayalagunathas | Trained in Primary |
| Mrs.T.Jeevanantham | Trained in Primary, B.A |
| Mrs.J.Arulappu | Trained in Primary |
| Mrs.S.Vanisri | Trained in Primary |
| Mrs.K.Vasanthakumar | Diploma in Teach. Primary, B.A |
| Mrs.J.Satheeskumar | Trained in English, B.A |
| Mrs.L.Jeyaparan | Trained in Primary |
| Mrs.B.Sinnathamby | Trained in Primary |
| Mrs.R.Supendrakumar | Diploma in Teach. Primary, B.A |
| Mrs.S.Chandrakumar | Trained in Primary |
| Mrs.T.Paskaran | Trained in Primary |


# பாடசாலைச் சின்னம்

# Our Principal




திரு.க.கதிர்காமநாதன் - அதிபர்

# Our Staff



இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்:
திருமதி.ப.சின்னத்தம்பி, திருமதி.சோ.ஜெயாபரன், திரு.க.கதிர்காமநாதன் (அதிபர்), திருமதி.ம.தயாளகுணதாஸ், திருமதி.த.ஜீவானந்தம்.
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்:
திருமதி.ஜெ.அருளப்பு, திருமதி.வா.கோணேஸ்வரன், திருமதி.தி.பாஸ்கரன், திருமதி.க.வசந்தகுமார், திருமதி.ஜ.சதீஸ்குமார்,
திருமதி.ற.சுபேந்திரகுமார், திருமதி.த.சந்திரகுமார்.

# உப அதிபர்



திருமதி.ம.தயாளகுணதாஸ்

# முன்னாள் உப அதிபர்கள்



திருமதி.வ.விஜயராகவன்
(2011-2016)



திருமதி.த.யோகேந்திரன்
(2017)

# பகுதித் தலைவர்கள்



திருமதி.த.ஜீவானந்தம்



திருமதி.க.வசந்தகுமார்

# மலர்க்குழு



இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்:
திருமதி.வா.கோணேஸ்வரன், திரு.க.கதிர்காமநாதன் (அதிபர்), திருமதி.ம.தயாளகுணதாஸ்
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்:
திருமதி.க.வசந்தகுமார், திருமதி.த.ஜீவானந்தம், திருமதி.ஜ.சதீஸ்குமார்

# பாடசாலை அபிவிருத்திக் குழு



இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்: திரு.த.நித்தியானந்தன், திரு.க.கதிர்காமநாதன் (அதிபர்), திரு.சி.மோகனதாஸ்,
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்: திருமதி.சா.சதீஸ்குமார், திருமதி.பி.ரகுநாதன், திருமதி.சு.செல்லத்தம்பி,
திருமதி.க.வசந்தகுமார், திருமதி.த.ஜீவானந்தம், திருமதி.ஜெ.அருளப்பு, திருமதி.மே.சிவபாலன்,
திருமதி.தி.சந்திரசேகரம், திருமதி.வா.ரஞ்சித்



# பாடசாலையின் படிமுறை வளர்ச்சிப் படிகள்

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா வலயத்தில் கோறளைப்பற்று பிரதேசத்தில் இயற்கை எழிலை தன்னகத்தே கொண்ட பேத்தாழை கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையே மட்/ககு/ பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயமாகும். இப்பாடசாலையானது, அருகிலுள்ள தாய்ப் பாடசாலையான மட்/ககு/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்திலிருந்து "இசுறு" பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளையும் நலனையும் கருத்தில் கொண்டு 24.01.2011ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு கிழக்குமாகாண முதமைச்சராக இருந்த கௌரவ. திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் பாடசாலையை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். பாடசாலை கட்டிட அமைவிற்கு நிலத்தேர்வினை மட்/ககு/பேத்தாழை விபுலானந்த வித்தியாலய அதிபர் திரு.த.சந்திரலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் ஓய்வுபெற்ற அதிபர் திரு.தா.இராசநாயகம் அவர்கள் உட்பட திரு.செ.கதிர்காமத்தம்பி, திரு.ஆ.அருமைநாயகம் ஆகியோர் கொண்ட குழு ஒன்றின் ஊடாக பல்வேறு இடங்கள் பார்வையிடப்பட்ட போதும் இறுதியாக தற்போது பாடசாலை அமைந்துள்ள காணியானது வேப்பமரச் சோலையுடன் நிழல்பரப்பி பசுமையுடன் காணப்பட்ட இக்காணி தெரிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக காணி உரிமையாளரான பேத்தாழைக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. உமா அற்புதம் அவர்கள் முழுமனதுடன் முன்வந்ததுடன் இவருடைய கணவரான திரு.முருகுப்பிள்ளை அற்புதம் அவர்களும் முழுமனதுடன் சம்மதத்தை தந்து ஒத்துழைப்பு வழங்கியதுடன், இவரது சகோதரியான திருமதி.ராசமணி செல்வராசா என்பவரும் பாடசாலை அமைவிடத்திற்கு தனது காணியை வழங்கினர். இதற்கமைய காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக்காணி வழங்கப்பட்டதாக அறியக் கிடைக்கின்றது.

கிழக்குமாகாண முதலமைச்சர் கௌரவ.திரு.சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் 31.10.2009இல் பாடசாலைக் கட்டிடத்திற்கான அடிக்கல்லினை நட்டு கட்டிட வேலையை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வின் போது பேத்தாழைக் கிராமத்தின் அனைத்து சமூக ஆர்வலர்களும் ஏராளமாக கலந்து கொண்டு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். மேலும் இக்கட்டிடத்தின் ஒப்பந்தக்காரராக திரு.சா.பஞ்சலிங்கம் அவர்கள் பொறுப்பு ஏற்றிருந்தார். அத்துடன் அதிபர் என்ற வகையில் நானும் கிராமத்தின் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு நடைபெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு நெறிப்படுத்தியிருந்தேன்.

"இசுறு" பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான ஊட்டப் பாடசாலையாக கிழக்கு மாகாணத்திலே முதன் முறையாக திறந்து வைக்கப்பட்ட பெருமை இப்பாடசாலையையே சாரும். கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக திகழ்ந்த கௌரவ. திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ. திரு.ஜவாஹிர் சாலி அவர்களும் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி அவர்களும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.ஞானராஜா அவர்களும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. நா.குணலிங்கம் அவர்களும் பொறியியலாளர் திரு.கே.கிருஸ்ணதாசன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இவ்விழாவினை மட்/ககு/பேத்தாழை விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.த.சந்திரலிங்கம் அவர்கள் தலைமை ஏற்று நடத்தியிருந்தார். இவ்விழாவில் உதவி பிரதேச செயலாளர், அயல் பாடசாலை அதிபர்கள், கிராம பிரமுகர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இவ்வித்தியாலயத்தின் முதல் அதிபராக திரு.கயிலாயபிள்ளை கதிர்காமநாதன் ஆகிய நான் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். தரம் 1 தொடக்கம் தரம் 3 வரை 220 மாணவர்களும் 6 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். அந்த வகையில் இப்பாடசாலையில் திருமதி. வசந்தி விஜயராகவன், திருமதி.மரியஸ்ரெலா தயாளகுணதாஸ், திருமதி.தனுசியா ஜீவானந்தம், திருமதி.கிரிஜாமல்லிகை ஜெகதீஸ்வரன், திருமதி.சிவாஜினி வசந்தகுமார், திருமதி.ஜெயராணி முரளி ஆகிய ஆசிரியர்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது கடமையைப் பெறுப்பேற்றுக் கொண்டனர். இவர்களுள் சிரேஸ்ட ஆசிரியரான திருமதி.வசந்தி விஜயராகவன் அவர்கள் உபஅதிபராக செயற்பட்டார்.

இவ்வித்தியாலயமானது மட்/ககு/பேத்தாழை கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இக்காலத்தில் அங்கத்துவம் பெற்ற மாணவர்களினது பெற்றோர்களின், நலன்விரும்பிகளின் ஏகோபித்த முடிவு காரணமாக 31.01.2011ஆந் திகதி எடுக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்ட முடிவின் பிரகாரம் 20.07.2011 அன்று தொடக்கம் மட்/ககு/ பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயம் எனப் பெயர்மாற்றம் பெறும் அனுமதி மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. இப்பாடசாலையின் அதிபர் என்ற வகையில் பல்வகைப்பட்ட ஆவணங்களை சேகரித்து பெயர் மாற்றத்தை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இருப்பினும் கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் தனது பெயரில் இவ்வித்தியாலயம் அமைவதில் விருப்பம் காட்டவில்லை. எனினும் பெற்றோர்கள்,

சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், நிறுவனங்கள் எனப் பலரும் கேட்டுக் கொண்டதன் பிரகாரம் தனது சம்மதத்தை தெரிவித்திருந்தார். இவ்விடயத்தில் திரு.ப.தவேந்திராஜ் அவர்களும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வளர்ச்சிப் படிகள்

இப்பாடசாலை முதல் முதலாக 90x25 சதுர அடி கொண்ட கட்டிடம் ஒன்றுடன் ஆரம்பிக்கப்பட்டது. தரம் 1 தரம் 3 வரை கற்பதற்கான தளபாட வசதிகள் மட்/ககு/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. 142 பெற்றோர்களின் பங்கு பற்றுதலுடன் முதலாவது பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் 31.01.2011ஆந் திகதி கூட்டப்பட்ட போது பெற்றோர் சார்பாக செயலாளராக திருமதி. புனிதா ஈவேரா தெரிவு செய்யப்பட்டதுடன் பொருளாளராக திருமதி. வசந்தி விஜயராகவன் ஆசிரியர் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 10 உறுப்பினரைக் கொண்ட பாடசாலை அபிவிருத்திக் குழு ஒன்று பாடசாலையின் முன்னேற்றப் பாதைக்கு செயற்பட்டது.

இக்காலத்தில் பாடசாலை வரைபடம், பாடசாலை சின்னம், பாடசாலைக் கீதம், கழுத்துப்பட்டி போன்றவை அதிபர் என்ற வகையில் என்னால் வடிவமைக்கப்பட்டது. அத்துடன் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு போட்டோப் பிரதி இயந்திரம், கணினி, பிரிண்டர் போன்ற உபகரணங்களை வழங்கியிருந்தார். புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். அந்தவகையில் தரம் 3ஐச் சேர்ந்த செல்வி தி.ஜதுர்சிக்கா என்ற மாணவி ஆங்கில மொழித்தினப் போட்டி கவிதை கூறுதல் நிகழ்ச்சியில் கோட்ட, வலய மட்டப் போட்டியில் வெற்றி பெற்று மாவட்ட மட்டம் வரைக்கும் கலந்து கொண்டார். இவருக்கான பயிற்சியினை ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஓய்வு பெற்ற அதிபர் திருமதி.A.A.தாஸ் அவர்கள் வழங்கியிருந்தார். அதே போல் தரம் 3ஐச் சேர்ந்த செல்வி ச.அஜேந்தினி என்ற மாணவி திருக்குறள் மனனப் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றார். இவை பாடசாலையின் முதல் வெற்றிகளாகும்.

முதலாவது பரிசளிப்பு விழா "ஊக்குவிப்பு விழா" என்ற பெயரில் 01.12.2011 அன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ.திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் பிரதம அதிதியாகவும் மாகாண சபை உறுப்பினர், கௌரவ திரு.பூ.பிரசாந்தன் அவர்களும், கல்குடா கல்விப்பணிப்பாளர் திருமதி.சுபா சக்கரவர்த்தி அவர்களும், கோட்டக் கல்விப்பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர், கணக்காளர், ஏராளமான பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குபற்றுதலுடன் வெகுசிறப்புடன் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் மூன்று மாத கால தற்காலிக இடமாற்றம் பெற்று வந்த திரு.ந.சுரேந்திரகுமார் ஆசிரியர் அவர்களும் இப்பாடசாலையில் இணைந்து செயற்பட்டார்.

2012ஆம் ஆண்டு திருமதி எஸ்.வாணிஸ்ரீ, திருமதி.கலைவாணி வசந்தகுமார், திருமதி.ஜெமினேஸ்வரி அருளப்பு, செல்வி.சின்னத்தம்பி ஜனனி போன்ற 4 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று இணைந்து கொண்டதுடன் ஆசிரியர் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்தது. தரம் 1 - தரம் 4 வரை என வகுப்புக்கள் உயர்ந்தன. மாணவர்களின் தொகையும் 283 ஆக அதிகரித்தது. இதனால்

இடவசதிப் பற்றாக்குறை ஏற்பட்ட போது வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் அ.ஜெயஜீவன் அவர்கள் அதிபராக கடமையாற்றிய வடமுனை அ.த.க.பாடசாலையில் இருந்து 60x20 அடி தகரக் கொட்டில் வழங்கியிருந்தார். இதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்பினரான திரு.சு.சின்னத்தம்பி அவர்கள் உதவி புரிந்திருந்தார். மாணவர்களது தளபாட பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு திரு.சா.பாலச்சந்திரன் அவர்கள் அதிபராக கடமையாற்றிய, மட்/ககு/வாகனேரி கோகுலம் வித்தியாலயத்திலிருந்து B, Cவகை மேசைகளும் கதிரைகளும் வழங்கியிருந்தார்.

இக்காலப்பகுதியில் முதலாவது வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் திரு.நா.திரவியம் அவர்களும் கல்குடா வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.தினகரன் ரவி அவர்களும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.நா.குணலிங்கம் அவர்களும் முறைசாரா உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.ப.சின்னத்தம்பி அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இக்கிராமத்தின் இயற்கை வளத்தை அடிப்படையாக கொண்டு தாழை, கோடை, கார்த்திகை ஆகிய பூக்களில் அழகையும் சிறப்பையும் எடுத்துக் காட்டும் வகையில் தாழை இல்லம், கோடை இல்லம், கார்த்திகை இல்லம் என மூன்று இல்லங்களுக்கான பெயர்கள் சூட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.








இவ்வாண்டு முதலாவது ஒரு நாள் கல்விச் சுற்றுலா திருகோணமலைக்கு மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு பட்டதாரிப் பயிலுனராக வாழைச்சேனை பிரதேச செயலகத்திலிருந்து செல்வி.கி.ரஜித்தா என்பவர் ஒரு வருட கால சேவைக்காக நியமிக்கப்பட்டார். எமது பாடசாலை மாணவச் செல்வங்கள் சிறுவர் நாடகம் மூலம் வெற்றி பெற்று பாடசாலையின் பெயரை தக்கவைத்துக் கொண்டனர். இவர்களுடைய வெற்றிக்கு பயிற்சி அளித்த திருமதி.ம.தயாளகுணதாஸ், திருமதி.த.ஜீவானந்தம் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

ஐயாயிரம் ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தில் எமது பாடசாலை அழகுபடுத்தும் திட்டத்தினை கல்குடா வலய நிருவாகத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் அவர்களின் பங்குபற்றலுடன் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிகழ்வு நடாத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் மத்திய அரசின் கல்வி அமைச்சின் அதிகாரிகள் வலயக்கல்விப் பணிப்பாளருடன் வருகை தந்து, வித்தியாலய வேலைத்திட்டங்களை பார்வையிட்டதுடன் பாடசாலையின் குறுகியகால வளர்ச்சியையும் கவின்நிலையையும் பார்த்து ஆச்சரியப்பட்டு அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டியதுடன் அதிபர் அவர்களுக்கு சிறந்த அதிபருக்கான

விருது கிடைப்பதற்கான விண்ணப்பப் படிவத்தினை வழங்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

21.11.2012 வாழைச்சேனை ஹற்றன் நஷனல் வங்கியினால் நூலகத்திற்கான நூல்களும், புத்தகத்தட்டுகளும், கணினிகளும் கணினி மேசைகளும் வழங்கப்பட்டு நூலக திறப்பு விழாவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் செ.ஆறுமுகம் அவர்களும் வாழைச்சேனை முகாமையாளர் திரு.ஆர்.பீற்றர் அவர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர். தொடர்ந்து இவ்வங்கி உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

2013ஆம் ஆண்டில் திருமதி.லோகினி ஜெயாபரன், திருமதி.தவலெட்சுமி யோகேந்திரன் ஆகிய ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று இணைந்து கொண்டனர். எமது பாடசாலையில் ஆசிரியர் வளம் 12 ஆக அதிகரித்தது. அதே போல் தரம் 5 வரை வகுப்புக்கள் உயர்ந்து மாணவர்களின் எண்ணிக்கை 380 ஆகக் காணப்பட்டது. கற்றல் கற்பித்தல் செயலொழுங்குகளும் செவ்வனே சிறப்பாக நடைபெற்றது. இக்காலப்பகுதியில் பாடசாலை மேம்பாட்டுத்திட்ட வலய பிரதி நிதியாக கல்குடா வலய நிருவாகத்திற்கு பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் அவர்கள் நியமிக்கப்பட்டதன் பயனாக அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் மேலும் வளர்ச்சிப் போக்கிக்கான வழியேற்பட்டது.

2013.08.12 அன்று முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களால் சிறுவர்களுக்கான மேலைத்தேய வாத்தியக்கருவிகள் வழங்கப்பட்டதனால் மாணவர்கள் Band வாத்தியக் குழுவாகவும் திறமைகளை வெளிக்காட்டத் தொடங்கினர். இவ்வருடம் மாவட்டமட்ட ஆங்கில மொழித்தினப் போட்டி பிரதிபண்ணல் நிகழ்ச்சியில் செல்வி.ஆ.டிலக்சினி என்ற மாணவி தெரிவு செய்யப்பட்டார். இவரை செல்வி.சி.ஜனனி ஆங்கிலப்பாட ஆசிரியை வழிப்படுத்தியிருந்தார். **"உதயம்"** என்ற பெயரில் உதயமான முதலாவது கையெழுத்துச் சஞ்சிகை வலய மட்டத்தில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டு பாராட்டினை பெற்றது. இதனை திருமதி. தவலெட்சுமி யோகேந்திரன் ஆசிரியர் தொகுத்திருந்தார். இதுவும் பாடசாலையின் பெயர் வெற்றிப் பாதையை நோக்கிச் சென்றதை தெளிவுபடுத்துகின்றது. 2013.10.11இல் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட கௌரவ முதலமைச்சருடன் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களும் மாவட்ட திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் அவர்களும் பிரதேச செயலாளர் அவர்களும், இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் செயற்பாடுகளை பாராட்டிச் சென்றனர்.



இவ்வருடம் முதல் முதலாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றினர். அவர்களில் செல்வி.ஆ.டிலக்சினி, செல்வன்.ஸ்ரீ.மேனுதரன், செல்வன்.ப.தினோஜ் போன்ற 3 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று தகைமை அடைந்திருந்தனர். இவர்களை திருமதி. எஸ்.வாணிஸ்ரீ, திருமதி.கலைவாணி

வசந்தகுமார் போன்ற ஆசிரியர்கள் வழிப்படுத்தினர். இவர்களை இக்காலப்பகுதிக்குரிய வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.செ.ஸ்ரீகிருஸ்ணராஜா அவர்கள் நேரடியாக விஜயம் செய்து பாராட்டிருந்தார். இவ்வருடத்தில் 50x25 அடி நீளமான கட்டிடம் ஒன்று முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களது முயற்சியில்



அமைத்துத் தரப்பட்டதுடன் பாடசாலை சுற்றுமதில் வேலைத்திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டு பாடசாலை பௌதீகவளச் செயற்பாடுகளுடன் பாதுகாக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு 393 ஆக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. திருமதி. பவானி சின்னத்தம்பி ஆசிரியை அவர்கள் இடமாற்றம் பெற்று இணைந்து கொண்ட போது ஆசிரியர் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது. இவ்வாண்டும் எம் மாணவர்கள் தமிழ்மொழித் தினம், ஆங்கில மொழித்தினம், நூறு சதுரக்கணித்தல் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வெற்றியைப் பெற்றுக் கொண்டனர். செல்வி.ஜெ.புவேதா பாவோதல் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொண்டார்.

2014 மே மாதம் கிண்ணியா வலய கல்விப்பணிப்பாளர் திரு.எம்.ஐ.சேகுஅலி அவர்கள் தலைமையில் அதிபர்களும் ஆசிரியர்களும் வருகை தந்து எமது பாடசாலையின் சுற்றுப்புறச்சூழல், வகுப்பறைகளின் கவின் நிலை பேணல், அதிபர் அலுவலக ஆவணங்கள் கோவைப்படுத்தல் முறை, வகுப்பறை முகாமைத்துவ விடயங்கள், வகுப்பறை கற்றல் வளங்களின் பயன்பாடு, கற்பித்தல் நுட்பங்கள் என்பவற்றைப் பார்வையிட்டுச் சென்றனர்.

எமது பாடசாலையிலே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடாத்துவதற்கு கல்வி அமைச்சினால் 2014.08.14 ஆந் திகதி கடிதத்தின் பிரகாரம் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 9 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் தகைமை பெற்று பாராட்டுக்களைப் பெற்றனர். இவர்களை திருமதி.லோகினி ஜெயாபரன், திருமதி.தனுசியா ஜீவானந்தம் போன்ற ஆசிரியர்கள் வழிப்படுத்தினர்.

இவ்வருடம் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வியமைச்சினால் வழங்கப்படும் "பிரதிபா பிரபா" விருது கல்குடா வலயத்தில் சிறந்த ஆசிரியராக தெரிவு செய்யப்பட்ட எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. வசந்தி விஜயராகவன் அவர்களும் சிறந்த அதிபருக்கான விருதினை திரு.க.கதிர்காமநாதன் ஆகிய நானும் பெற்றுக்கொண்டோம். கடின முயற்சியின் வெற்றி என்பதனை என்னால் உணரமுடிகின்றது.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணம் வலிகாமத்தைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் 31 ஆசிரியர்கள் வருகை தந்து இப்பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், கவின்நிலை, அலுவலக நேர்த்தி பயன்பாடு, மாணவர்கள் ஒழுக்க விழுமிய செயற்பாடுகளை

பார்வையிட்டு பாராட்டி வாழ்த்திச் சென்றனர். இவ்வருடமும் நான்காவது பரிசளிப்பு விழா எவ்வித தடையுமின்றி இறை ஆசியால் சிறப்பாக நடைபெற்றது.

2015 ஆம் வருடம் 390 ஆக மாணவர் எண்ணிக்கை காணப்பட்டது. இவ்வருடம் உலக வங்கி நிபுணர் குழுவினர், மாகாண வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தலைமையில் எமது பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலை செயற்பாடுகள் முன்னேற்றப்படிகளை பார்வையிட்டு கலந்துரையாடி பாராட்டிச் சென்றனர்.

இவ்வருடம் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் பாலர் மேற்பிரிவில் **"கதிர்ப்பு"** கையெழுத்துச் சஞ்சிகையும், பாலர் கீழ்ப்பிரிவில் **"காந்தள்"** கையெழுத்துச் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இதில் **"காந்தள்"** சஞ்சிகை வலய மட்டத்தில் முதலாம் இடத்தில் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டத்திற்கு அனுப்பப்பட்டு அதிலுள்ள ஆக்கங்கள் கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **"எண்ணத்தூறல்"** என்னும் சஞ்சிகையில் வெளியிடப்பட்டது. திருமதி. கலைவாணி வசந்தகுமார் ஆசிரியை கையெழுத்துச் சஞ்சிகையை வடிவமைத்து தொகுப்பாக வழங்கியிருந்தார்.

இவ்வருடம் 6 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தகைமை பெற்றிருந்தனர். இவர்களில் செல்வன்.ஜெ.கர்ஜிதன் என்ற மாணவன் 190 புள்ளிகளைப் பெற்று மாகாண, மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்று வாழ்த்துக்களைப் பெற்றார். மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைவர் மத்தியிலும் புகழ்ந்து பேசப்பட்ட பெருமைக்குரிய பாடசாலை எமது வித்தியாலயமாகும். இவ்வருடம் திருமதி.தவலெட்சுமி யோகேந்திரன், திருமதி. பவாணி சின்னத்தம்பி, திருமதி.ஜெயராாணி முரளி போன்ற ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்தினார்கள். இவ்வருடமும் எமது வித்தியாலய ஆசிரியர் திருமதி.தவலெட்சுமி யோகேந்திரன் அவர்கள் சிறந்த ஆசிரியருக்கான பிரதிபா பிரபா விருதினைப் பெற்றிருந்தார்.

2016ஆம் ஆண்டு 376 ஆக மாணவர்களின் எண்ணிக்கை காணப்பட்ட போதிலும் இரு ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் செல்ல, திருமதி றஜனி சுபேந்திரகுமார் என்ற ஆசிரியர் இணைந்து கொண்டார் ஆசிரியர் எண்ணிக்கை 12 ஆக காணப்பட்டது 50X25 அடி அளவுள்ள மூன்றாவது கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கல்குடா வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.செ.ஸ்ரீகிருஸ்ணராஜா அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இவர்களுடன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் அவர்களும் கோட்டக் கல்விப்பணிப்பாளர் மற்றும் அயற்பாடசாலை அதிபர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 3 மாணவர்கள் பெற்று பாராட்டப்பட்டனர். இவர்களை திருமதி. எஸ்.வாணிஸ்ரீ ஆசிரியர் அவர்கள் வழிப்படுத்தியிருந்தார். எமது வித்தியாலய ஆசிரியர் திருமதி. கலைவாணி வசந்தகுமார் அவர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான பிரதிபா பிரபா விருதினைப் பெற்றிருந்தார்.

2017ஆம் ஆண்டு 383 மாணவர்களின் எண்ணிக்கை காணப்பட்ட போதிலும் இரு ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் செல்ல, திருமதி திராவிடமலர் பாஸ்கரன், திருமதி.சுகுனா சந்திரகுமார் ஆகிய ஆசிரியர்கள் இணைந்து கொள்ள ஆசிரியர் எண்ணிக்கை 12 ஆக காணப்பட்டது. இக்காலத்தில் திருமதி.த.யோகேந்திரன் ஆசிரியர் உப அதிபராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து மார்ச் மாதம் இப்பாடசாலைக்கு கல்வி ராஜாங்க அமைச்சர் கௌரவ. திரு.V.இராதாகிருஸ்ணன் அவர்கள் வருகை தந்திருந்தார். இக்காலப்பகுதியில் கல்வி அமைச்சின் ஆலோசகர் பேராசிரியர் திரு.குணபால நாணயக்கார அவர்களும் N.I.E. கற்றல் வள ஆலோசகர் திரு.A.சிவநேசராஜா அவர்களும் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.ரவி அவர்களும் கலந்து கொண்டனர். 2017.04.28ஆந் திகதி எமது பாடசாலையிலிருந்து ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்றதனால் தற்போது ஆங்கிலப்பாட ஆசிரியர் உட்பட 11 ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். தற்போது திருமதி. மரியஸ்ரெலா தயாளகுணதாஸ் ஆசிரியர் உப அதிபராக செயற்படுகின்றார்.

இக்காலப்பகுதியில் TSEP நிதியில் நிர்மாணிக்கப்பட்ட 5025 அடி கட்டடத்தினை மிக எளிமையான முறையில் மாணவரின் கற்றல் கற்பித்தலை கருத்தில் கொண்டு, கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளராக பதவியேற்று முதன் முதலாக கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.தினகரன் ரவி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) திரு.த.அனந்தரூபன் அவர்களும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.நா.குணலிங்கம் அவர்களும் பொறியியளாளர் திரு.A.H.M.ஹக்கீம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர்களின் வசதி கருதி அவர்களுக்கான கைகழுவும் தொட்டி, மற்றும் நடைபாதைகள் என்பன இப்பாடசாலையில் சிறப்புற அமைக்கப்பட்டது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் முதல் முதலாக சிறுவர் உடலியக்கச் செயற்பாட்டினை மேம்படுத்தும் வகையில் வருடாந்த சிறுவர் விளையாட்டு விழா இவ் வித்தியாலயத்திலே ஆசிரியர்களின் உபகரண வடிவமைப்பின் பயனாக சிறப்பாக நடத்தப்பட்டிருந்தது. இக்காலகட்டத்தில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு கௌரவ சி.சந்திரகாந்தன் அவர்கள் தனது மாகாணசபை நிதியில் இருந்து ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் தனது தாயார் ஊடாக விளையாட்டு விழாவில் வழங்கி வைத்திருந்தார். அத்துடன் மாணவரது கல்வி மேம்பாடு கருதி கற்றல் கற்பித்தல் உபகரணங்களை வழங்கியதுடன் 2013 தொடக்கம் 2017 வரையிலான காலப்பகுதியில் புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெறும் அனைத்து மாணவர்களுக்கும் துவிச்சக்கர வண்டியினை வழங்கி மாணவரை ஊக்கப்படுத்தியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை மக்கள் வங்கியின் தற்போதைய முகாமையாளர் மாணவர்களின் நலன் பொருட்டு உதவி புரிந்து வருவதும், இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்றவை மாணவர்களின் சேமிப்பு கணக்கினைப் பேணி வருகின்றது. பொது சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த தூய்மையான சுகாதார பழக்க வழக்கமுள்ள பாடசாலைத் தெரிவில் எமது பாடசாலை கோறளைப்பற்றுப்

பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்று பரிசினைப் பெற்றதுடன் மாவட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திருமதி. பவானி சின்னத்தம்பி ஆசிரியையின் வழிகாட்டலுக்கேற்ப பாடசாலை சுகாரதாரக்குழு சிறப்பாக இயங்கி வருகின்றது. அத்துடன் பேண்தகு பாடசாலைத்திட்டம், அருகிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை என்ற திட்டத்திலும் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றது.


பாடசாலை திறந்து வைக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை தொடராக தரம் 1 மாணவர்கள் வரவேற்பு விழா, சிறுவர் விளையாட்டு விழா, மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட கண்காட்சி நிகழ்வுகள், மாதிரி சந்தை நிகழ்வு, சிறுவர் தினம், ஆசிரியர் தினம், சமய விழாக்கள், பரிசளிப்பு விழா போன்றன ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள், பாடசாலை நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் இவ்வித்தியாலயத்தில் இடையறாது சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வித்தியாலயத்தைப் பொறுத்தமட்டில், கல்குடா வலய கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர், ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்களின் ஆலோசனை வழிகாட்டல்களுக்கேற்ப அதிபர் என்ற வகையில் எனது ஆலோசனை வழிகாட்டல் செயற்பாட்டிற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள், எல்லோரும் விரும்பும் வகையில் பாடசாலை முகாமைத்துவம் செயற்படுவதுடன் பாடசாலை, வகுப்பறை கவின்நிலையுடன் பராமரிக்கப்பட்டு வருவதும் சிறப்பான அம்சமாகும். இவ்வித்தியாலயத்தில் ஒன்றுகூடல் மண்டபம், மாடிக்கட்டிடத்துடனான செயற்பாட்டறைத் தொகுதி, மலசலகூட வசதி, நிலையான நீர்த்தாங்கி, முகப்பில் அலங்கார வளைவு, ஆசிரியர், மாணவர்களுக்கான தளபாட வசதி என்பவற்றுக்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திட்டங்களுக்கமைய விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.

இப்பாடசாலையில் கல்வி கற்கின்ற ஒவ்வொரு மாணவர்களும் அன்போடு அரவணைக்கப்பட்டு கல்வியறிவு விருத்தியாக்கப்பட்டவர்களாகவும், கலைத்திறன் மிக்கவர்களாகவும், ஒழுக்கமுடையோர்களாகவும், வளப்படுத்தப்பட்டு, தாய்ப்பாடசாலைக்கு அனுப்பப்படுவதால் அதிபர் ஆசிரியர்கள் என்ற வகையில் அகம் மகிழ்கின்றோம். இங்கு கல்வி கற்கின்ற பிள்ளைகளின் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் பாடசாலைப் பற்றுணர்வுடன் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவுவதுடன் பாடசாலையின் செயற்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒத்துழைப்புடன் உதவுவதால் பாடசாலையின் வளர்ச்சிப் படிகளில் பெற்றோர்களின் பங்களிப்பு அபரிமிதமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு செல்லும் பட்சத்தில் இப்பாடசாலையானது இவ்வலயத்தில் சிறந்த முன்னோடிப் பாடசாலையாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**திரு.க.கதிர்காமநாதன்**
அதிபர்

# தாழைக் கிராமத்தின் இயற்கை வளங்களும் சிறப்புக்களும்





பேத்தாழைக் கிராமமானது நீர்ச் சுனைகளும் ஆறுங் கடலும் பசுமையான மரஞ்செடி கொடிகளும் கொண்ட இயற்கை எழிலோடு காட்சி அளிக்கின்றது. கிழக்கே வங்காளக் கடலும் மேற்கே வாழைச்சேனையும் வடக்கே மாதுறு ஓயாவும் தெற்கே விநாயகபுரமும் புகையிரதப் பாதையும் ஏனைய கிராமங்களும் சூழப்பெற்று அமைந்த மிகப் பெரிய கிராமமாகும்.

எங்கு பார்த்தாலும் பயன் தரு மரங்களும் மணம் பரப்பும் மலர்களும் சுவை மிக்க பழங்களும் பேத்தாழைக் கிராமத்தின் மண் வளத்தை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றது. ஆற்றங்கரையை அண்டிய பிரதேசத்தில் ஓங்கி வளரும் தென்னை, பனை, கண்ணாப்பற்றை, தில்லை மரம் உட்பட பல்வேறு மரங்கள் காணப்பட்ட போதிலும் அக்காலத்தில் ஆற்றங்கரை ஓரத்தில் பசுமை பரப்பி தழைத்து வளர்ந்தோங்கிய தாழைமரத்தின் ஓலையானது பேய்கள் தலைவிரித்தாற் போல இரவு நேரங்களில் பயங்கரமான காட்சியளித்தமையால் அக்காலத்து மக்கள் அதனை "பேய்த்தாழை" என அழைத்தனர். (பேய்கள் என்பது அக்காலத்தில் செவி வழியாக வந்த கதை) பின்னர் மருவி "பேத்தாழை" என அழைக்கின்றனர். தாழை மரத்தின் அழகுச்சோலை இன்றும் ஆற்றங்கரையோரத்தில் கண்ணைக்கவரும் காட்சியாக கண்டு இரசிக்கக்கூடியதாக உள்ளது.

இக்கிராமத்தில் தனித்துவத்தைக் காக்கும் தாழம்பூ, கோடைப்பூ, கார்த்திகைப்பூ, அல்லி மலர், ஒல்லி மலர், ஆம்பல் மலர், திருக்கொன்றை மலர், நெருப்பு வாகை மலர், வேங்கை மலர், கரையாக்கன் மலர், அடம்பன் கொடி மலர், குல வாழை மலர், பட்டிப்பூ போன்றன தன்னகத்தே வாசனையைக் கொண்டு மக்கள் மனதில் நிறைந்தவையாக திகழ்கின்றன. கோடை மலர் தனித்துவத்தை காக்கும் மலராக பொங்கல் விழாவிற்கு இன்றியமையாத பூவாக இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது அத்தோடு ஔடத பூ பயன்பாட்டில் உள்ள தாழை மரங்களில் பூத்துக்குலுங்கும் தாழம்பூ, கார்த்திகைப்பூக்களை கூறலாம். அக்காலத்தில் நுளம்புகளை விரட்ட லாக்கடைப் பூவில் இருந்து எடுக்கப்பட்ட ஒருவகைப் பிசின் எடுக்கப்பட்டது.


"கொவ்வைப்பழம், சப்பாத்துக்கள்ளிப் பழம், தவிட்டம்பழம், சுரவணப்பழம், மருங்கைப்பழம், மோதிரக்கண்ணிப்பழம், நாவல்ப்பழம், காரப்பழம், உலுந்தம்பழம், வீரப்பழம், கிளாப்பழம், பாலைப்பழம், முந்திரியம்பழம்,

தண்ணிச்சோத்துப்பழம், வில்வம்பழம், நறுவிழிப்பழம், கிண்ணம்பழம், மீனாட்சிப்பழம், சூரப்பழம், பிரப்பம்பழம், கறுக்காய்ப்பழம், மயிர்க்கொட்டிப்பழம், சடவக்கம்பழம், வெண்ணிச்சம்பழம், துரட்டிப்பழம், விளாம்பழம், மகிழம்பழம், பனிச்சம்பழம், ஈச்சம்பழம், கடலாச்சிப்பழம், நாயுண்ணிப்பழம்" போன்ற பல்வேறு பழ வகைகள் இம் மண்ணில் பழுத்து பலன் கொடுக்கும் கனி வளமிக்க அழகிய கிராமமாகும். இக்கனிகள் மக்கள் பசி போக்கும் பழங்களாக இக் கிராமத்தில் காணப்பட்டது. உண்டுகளித்த மகிழ்ச்சியால் புள்ளினங்கள் கானம் பாடுவது மட்டுமல்ல அவற்றின், புதுராகங்கள் எமக்கு புத்துணர்வை அளிப்பவையாகவும் காணப்பட்டது. இப் பழவகைகளை உண்டு திருப்தியடைந்த குரங்குகளும் அணில்களும் மரங்களில் தாவித்திரியும் காட்சி இயற்கை அழகுமிக்க பேத்தாழைக் கிராமத்திற்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது.

அக்காலத்தில் நீர் நிலைகளான ஆறுகளிலும் குட்டைகளிலும் வளரும் மீனினங்கள் சிறப்பு வாய்ந்தமையாகும். கெண்டை, கெழுத்தி, பனையான், சுங்கான், செத்தல், செல்வன், விறால், கொக்கிச்சான், மீசைப்பனையான், செங்கனையான், பொட்டுச்செத்தல், பொட்டியான், ஆக்கனான்கெழுத்தி (ஏறு கெழுத்தி), குறத்தை, உழுவை, தத்தக்குறத்தை, அயிர, விலாங்கு, மசறி, கனையான், மொங்கான் இவை போன்ற இன்னும் பல மீனினம் இக்கிராமத்திலுள்ள குளத்தினை வளம்படுத்தியவையாகும்

ஆற்றுமீன்களாக சிலுந்தல் (தற்போது அருகி விட்ட நிலையிலுள்ளது) செத்தல், ஒட்டி, ஓரா, பலவகையான மணலை மீன், கயல்மீன், சிறையா மீன், தேறல் மீன், நெத்தலி, சாப்பான், உதடன், பாரை, வெடியரசன், கிளத்தி, பேத்தை, விளல், கொடுவா, கலவா, முரல், சூடை, கீரி, கருமுரல், கொய், சாளை, லாகன், காரல், கூரல், கணவாய், சுண்ணாம்பு வாளை, முள்ளுவாளை, பன்னா, அஞ்சாளை, சீலா, பூஞ்சக்கண்ணி, பரட்டை, கெழுத்தி, திருக்கை, அதக்கை, மண்ணா, எறியாள், பாலமீன், பலவகை இறால், பல வகை நண்டு, கௌவாட்டி, மட்டி, பன்னல், கண்ணாமட்டி, என நாமறியாத உண்ணாத மீனினங்கள் இம்மக்களின் வாழ்வை வளப்படுத்துவதில் துணைபுரிந்தன.

இக்கிராமத்தில் பறந்து திரிந்த பறவைகளாக கிளி, மணிப்புறா, மாடப்புறா, மைனா, வௌவால், காகம், கிக்கிலிப்பேய், கருங்குருவி, மரங்கொத்தி,கொண்டைக்கழுத்தான், பூக்குடிச்சான், கொட்டப்பாக்குக்குருவி, ஊர்க்குருவி, ஆலா, மாம்பழக்குருவி, வயல்கோழி, பருந்து, கானாங்கோழி, காட்டுச்சேவல், ஆக்காண்டி, மீன்கொத்தி, நீர்க்காகம், வக்கா, அண்டன்காகம், கொக்கு, செண்பகம், மழைக்குருவி, குயில், குவாக்கோழி, சிந்தாமணிக்குருவி, களனிக்குருவி (புளுனி), சில்லித்தாரா, வானம்பாடி, என்பனவும் வாழ்ந்து வந்தன.




மருத்துவக்குணமிக்க நன்னாரி, லாமிச்சை, நெல்லி, பிரண்டை, கீழ்காய், பல்பிடாகம், வட்டக்கத்தரி, கண்டங்கத்தரி, முடக்கொத்தான்,

முடிதும்பை, சித்திரப்பாலாவி, சிறுநெருஞ்சி, நத்தைச்சூரி, தொட்டாச்சுருங்கி, ஆனைநெருஞ்சி, ஆனைத்தகரை, தகரை, ஆமணக்கு, வேலிப்பருத்தி, தூதுவளை, சீதேவியார் செங்கழுநீர், தேங்காப்பூக்கீரை, நீர்முள்ளி, நாயுருவி, எருக்கலை, குப்பைமேனி, நொச்சி, கையாந்தகரை, பாலறுகு, ஆடாதோடை, வாதராணி, பொன்னாவரசு, கருந்துளசி, சாத்தாவாரி, குன்றிமணி, கற்பூரவள்ளி, போன்ற மருத்துவக் குணமிக்க இன்னும் பல செடி கொடிகளும் காணப்பட்டது.

விளையாட்டு வகைகளை எடுத்து நோக்கும்போது, வட்டக்காவடி, வாரோட்டம், பிள்ளையார் கட்டை, கிளித்தட்டு, கிட்டிப்புள், பசுவும் புலியும், குண்டடித்தல், நொண்டி விளையாட்டு, கொத்திருக்காக் கொத்து, கண்ணாம் பூச்சி, கருவாட்டு விளையாட்டு, கீச்சுமாச்சுத்தம்பளம், சுரக்காய் இழுத்தல், யாரடா இந்தக் கோயிலுக்குள்ளோ, ஊஞ்சல் விளையாட்டு, முட்டியடித்தல், கிடுகு பின்னுதல், கயிறு இழுத்தல், தேங்காய் துருவுதல், தலையணைச்சமர், வழுக்கு மரம் ஏறுதல், ஆலா பற பற, டக் டிக் டோஸ், குளம்கரை, கிள்ளிக் கிள்ளிப் பிராண்டி போன்ற விளையாட்டுக்ள் கிராமிய விளையாட்டுக்களாக இருந்தாலும், பிள்ளைகளின், ஞாபக சக்தி கிரகித்தல் திறன் கணித விருத்தி அக்காலத்தில் மேலோங்கியிருந்தது.

கலைகளாக நாட்டுக்கூத்து இதில் வடமோடி, தென்மோடி, மகுடி, கதைப்பாட்டு நாடகங்கள், நாட்டார் பாடல்கள், அம்மன் பாடல்கள், தொழில் பாடல்கள் என்பன காணப்பட்டன. வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புவதற்காக கால்நடை வளர்ப்பு, சிறுவியாபாரம், சேனைப் பயிர்ச்செய்கை, வேளாண்மை, காட்டுத்




தொழில்களான தேன் எடுத்தல், இறைச்சி அட்டுவம் போடுதல், மீன் அட்டுவம் போடுதல், கவலைக் கிழங்கு, கட்டுவிழாக் கிழங்கு, ஒல்லிக் கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, கருணைக்கிழங்கு, ஒல்லி அரிசி என்பன எடுக்கப்பட்டதுடன் இறுங்கு, குரக்கன், எள்ளு, சோளம், பயறு, நிலக்கடலை, நாட்டுப்புற மரக்கறி என்பன அக்காலத்தில் செய்யப்பட்டன. கைத்தொழில்களாக கிடுகு பின்னுதல், பாய் இழைத்தல், மட்பாண்டங்கள் வடிவமைத்தல், கைப்பைகள், பெட்டிகள், அகப்பைகள் வடிவமைத்தல், இரேந்தை பின்னுதல், கயிறு திரித்தல், தும்புத்தடி, ஈர்க்குத்தடி, மர உரல், மரத்தோணி, கட்டுமரம், மரத்தளபாடம் என்பவற்றை வடிவமைத்தல்.

இவ்வாறான இனிய நினைவுகளை இப்போது அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் மூலமாக கேட்கும்பொழுது மனதுக்கு மகிழ்ச்சியும் இயந்திரம் இல்லாச் சுறுசுறுப்பான வாழ்க்கை அக்கால மக்கள் வாழ்ந்ததினால் நோயற்ற வாழ்க்கைக்கு ஆதாரமாக திகழ்ந்திருக்கிறார்கள்.

**திருமதி. திராவிடமலர் பாஸ்கரன் - ஆசிரியை**

# இந்து மதத்துடன் இணைந்த மனித வாழ்க்கை



இந்து சமய வாழ்க்கை முறையிலே மனித வாழ்க்கை முழுவதும் இறைவழிபாட்டோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. வாழ்க்கையை நேசித்து வாழச் சொல்கிறது. அன்பைப் பெருக்கி ஆன்மீகத்தை வளரச் செய்கிறது. உலகத்தில் காணப்படுகின்ற அனைத்தும் இறைவனின் வெளிப்பாடு என்பது இந்து மதத்தின் கோட்பாடு. ஆனால் இன்பம் வேண்டும் என்பதற்காக இறைவனின் ஏற்பாடுகளைச் சீர்குலைத்து விடாது, இறைவன் அளித்துள்ள இன்ப வாய்ப்புக்களை படிக்கட்டுக்களாக பயன்படுத்தி ஆன்மீக நிலைக்கு உயர்ந்து இறைவனை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இந்துமதம் செய்துள்ள ஏற்பாடு இந்த அடிப்படையில் தான் இந்து சமூக வாழ்க்கையும் அமைந்துள்ளது.

இந்து சமய வாழ்க்கை முறையானது கோயிலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதனை 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' போன்ற முதுமொழிகள் உணர்த்துகின்றன. மனித உடலுக்கு கேந்திரமானது இருதயம் அது போலவே ஒவ்வொரு ஊருக்கும் கேந்திரமான இடம் திருக்கோயிலாகும்.

மானிடப் பிறவியெடுத்த அனைவருக்கும் இறை வழிபாடானது இன்றியமையாதது. ஏனெனில் மனிதனுக்குத் தேவையான விழுமியப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு ஆலய வழிபாடானது சிறந்ததொரு வழிமுறையாக அமைகின்றது. அத்தோடு ஆலயங்களில் இடம்பெறுகின்ற கிரியைகள், பூசைகள், விழாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்கின்ற போது உணர்வு பூர்வமாக இறையின்பத்தை உணர முடியும்.

மேலும் இந்துக்களின் நற்பண்புகள் வளர்க்கப்படுகின்ற இடமாக வீடு அமைகின்றது. வீட்டின் ஓர் அறை தெய்வ வணக்கத்திற்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கே தெய்வங்களின் படங்களோ விக்கிரகங்களோ வைக்கப்பட்டிருக்கும். வீட்டார் காலை எழுந்தவுடன் நீராடி, வீட்டையும் சூழலையும் சுத்தம் செய்து, வாசலில் கோலமிட்டு, காலையும் மாலையும் திருவிளக்கேற்றி தெய்வங்களுக்குத் தூபமிட்டு, நறுமலர் தூவி, தோத்திரம் பண்ணி, விபூதி சந்தனங் குங்குமந் தரித்துக் கொள்வர். நறும் புகையும் மலர் வாசனையும் சந்தனச் சேற்றின் தெவிட்டா நறுமணமும் தெய்வீக எண்ணங்களை உருவாக்குஞ் சாதனங்கள். அவை மனதை, அது அறியாமலே சாந்தி நிலைக்கு கொண்டு வரும்.

பொழுது சாயும்பொழுது இல்லத்திலுள்ள சுமங்கலி ஒருத்தி குத்து விளக்கேற்றி இறைவழிபாடு செய்வாள். குத்து விளக்கில் காணப்படும் ஐந்து முகங்கள் பெண்களின் அன்பு, மனவுறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை ஆகிய ஐந்து குணங்கள் ஐந்து முகங்களில் பிரகாசிப்பது போல் குடும்பப் பெண்கள் திகழ வேண்டும் என்பதனை விளக்குகின்றது. ஆனால் தற்காலத்தில் மேற்கூறப்பட்ட இந்து இல்லங்களை காண்பது

அரிதாகவுள்ளது. சில பெண்கள் நெற்றியில் சிவப்பு நிற ஸ்ரிக்கர் பொட்டு அணிந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

கணவனும் மனைவியும் இணைந்து இனிதே இல்லறம் நடாத்தும் பொழுது தம் பிள்ளைகளிடத்தே மிகுந்த அன்போடு நடந்து கொள்வர். பிள்ளைகளிடத்தே கொள்ளும் காதல் சிறிது சிறிதாக வளர்ந்து உற்றார் உறவினர், ஊரவர், நாட்டவர், உலக மக்கள், அனைவரிடத்திலும், ஏன் உயிர்க் குலம் அனைத்திடத்துமே பரவும். இது இல்லற நிலையிலிருந்து பூரண துறவு நிலை வரை படிப்படியாக உயர்ந்து ஆன்ம விடுதலைக்கு வழிவகுக்கும்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்தி நற்பண்புகளை எடுத்துக் கூறி சமயப் பழக்க வழக்கங்களோடு பிள்ளைகளை வளர்க்க வேண்டியது அவசியமாகும். தற்காலத்தில் எமது சமயப் பண்புகள் சரியான முறையில் சமூகத்தில் பேணப்படாமையினாலேயே வன்முறைகள், தற்கொலைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற பாதகமான செயல்கள் இடம்பெற்று வருகின்றன. எனவே வீட்டில், சமயச் சூழல் சரியான முறையில் அமைகின்ற போது உலகை உய்விக்கவல்ல உத்தமர்கள் உருவாகுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அடுத்து சமயப்பண்புகள் வளர்க்கப்படும் இடமாக விளங்குவது பாடசாலையாகும். இங்கு சிறந்த முறையில் சமயக் கல்வியைப் போதிப்பதோடு வாழ்வியலுக்குத் தேவையான அறக்கருத்துக்களை எடுத்துக் கூறி வழிப்படுத்துவதும் அவசியமாகும். பாடசாலைகளில் நடைபெறுகின்ற விழாக்களை மங்களகரமாக நிறைகுடம் வைத்து குத்து விளக்கேற்றி, தேவாரம் இசைத்து இறை வணக்கத்துடன் ஆரம்பிப்பதும் இந்துப் பண்பாடே ஆகும். அத்துடன் பாடசாலைகளில் நவராத்திரி விழா கலை அம்சங்களுடன் கலையுணர்ச்சி பெருக கொண்டாடப்படுவது வாழ்க்கைக்கு தேவையான வீரம், செல்வம், கல்வி போன்ற இறை அருளை வேண்டியே ஆகும்.

அன்பு, பக்தி, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம், பிறருக்கு உதவுதல் போன்ற நற்பண்புகளை சமயத்துடன் இணைந்ததாக வளர்க்கப்படும் இடமாக பாடசாலைகள் திகழவேண்டும். தற்காலத்தில் எமது நாட்டில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதுடன் அறநெறிப் பாடசாலைகளும் இயங்கி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இருந்த போதிலும் மாணவர்கள் உணர்வு பூர்வமாக சிரத்தையுடன் கற்கின்றபோது மட்டுமே உன்னதமான உயர்விற்கு மதம் வழிகாட்டும் என்பது உறுதி.

மேலும் சமுதாயத்தில் நடைபெறும் விழாக்கள், அனுஷ்டிக்கப்படும் விரதங்களும் வழிபாடுகளும் இந்து சம்பிரதாயங்களோடு சார்ந்ததாகவே அமைகின்றன. எனவே இந்து சமயமானது வாழ்க்கை நெறி, ஒழுக்கம், பண்பாடு அனைத்தையும் அளிப்பதோடு அமைதியையும் கொடுக்கின்றது. எனவே ஒவ்வொரு இந்துவும் தன் வாழ்க்கையில் தெய்வ நம்பிக்கை, அன்பு, இனிமை, சுதந்திரமான ஆழ்ந்த சிந்தனை, பிறர் உளப்பாங்கை மதித்து நடத்தல், கலையில் ஈடுபாடு, நன்றியறிதல் போன்ற ஒழுக்கங்களை பின்பற்றி உணர்ந்து இந்து மதத்துடன் இணைந்து வாழ்ந்தால் வாழ்வு சிறப்பாக அமையும் என்பது தெட்டத்தெளிவாகும்.

**திருமதி. வ.விஜயராகவன்**
ஆசிரியை



# மருத்துவம் பற்றிய வசனங்கள்


- நெஞ்சுப் பலத்துக்கு நறுவிழி.
- நாய்க்கடிக்கு கட்டிச் சுண்ணாம்பும் கத்தரி இலையும்.
- வேலிப்பருத்தி வேளைக்கு உதவும்.
- குதிகால் வாதத்திற்கு வேலிப்பருத்தி ஒத்தடம்.
- வாதராணி வாதத்தைப் போக்கும்.
- பித்தம் குறைக்க அகத்திக் கீரை.
- சீரகம் உண்ண ஜீரணம் ஆகும்.
- பாம்பு கடித்தால் பத்தியம் பேணல்.
- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
- நோயைக் கட்ட வாயைக்கட்டு.

**ர.தவேஸ்காந்துஜன்** – தரம் 4C




# அறுசுவை

சுவைகள் ஆறு அறிந்திடுவோம்
சுவைத்துப் பார்த்து உணர்ந்திடுவோம்
தேனைத் தொட்டு நக்கிப் பார்
தெரியும் சுவை தான் இனிப்பு!



மிளகாயை எடுத்து கடித்துப் பார்
உறைப்பு சுவை என்பாய்
புளியங்காயை பறித்து தின்று பார்
புளிப்பு என்று புகழ்வாய்

பாகற்காயை சமைத்து சாப்பிட்டுப் பார்
கசப்பு என்று ஒதுக்கிடுவாய்
உப்பை உணவில் சேர்த்துப் பார்
உவர்ப்பு என்று சுவைத்திடுவாய்



பாக்கை நறுக்கி சப்பிப் பார்
துவர்ப்பு என்று அறிந்திடுவாய்
உணவை சுவைத்து உண்ணுவோம்
உடலின் உறுதி பேணுவோம்

உயிரை பிணியில் காத்திடுவோம்
உலகத்தார் அறிந்த அறுசுவையால்..............

**செ.ரிஸ்மிதன்**
தரம் 5C

# உலகம் புகழ நில்



பள்ளி தினமும் செல்!
பாடம் நன்கு கல்!
உண்மை தினமும் சொல்!
ஊக்கம் மிகவும் கொள்!

இனிய வார்த்தை சொல்!
இறைவனை வணங்கிக் கல்!
உயர்வை நாடிச் செல்!
உலகம் புகழ நில்!

**ம. ஹேஷாந்,**
தரம் 1 A

# ஆசிரியத்துவமும் மெய்யியல் சிந்தனைப் புலமும்

பாடசாலைக் கல்வியானது பிள்ளை மையம், வாழ்க்கை மையம், செயற்பாட்டு மையம் என்ற பல்வேறு பரிமாணங்களை கொண்டது. ஆனால் ஒரு வகுப்பறையின் கலைத்திட்ட முகாமையாளர் ஆசிரியராகவே காணப்படுகின்றார். தற்காலத்தில் ஆசிரியர்கள் மாணவர்களின் முன்மாதிரி நிலை அருகிக்கொண்டு செல்கின்றது. "ஆசிரியர்கள் ஞானவிளக்குகள் அறிவுப் பரத்தையர்கள் அல்ல" என்ற சோக்கிரட்டீஸின் கருத்தை ஒவ்வொரு ஆசிரியரும் தன்னில் வளர்த்துக் கொள்ள வேண்டும். "ஊரார் பிள்ளை தலை தடவத் தன் பிள்ளை தானே வளரும்." என்ற உண்மையை அடிக்கடி ஞாபகத்திற்கு கொண்டு வந்து அக்கருத்தினை ஆசிரியர்கள் வகுப்பறையில் நுழையும்போது முன் நிறுத்தி செயற்பட வேண்டும். "ஆசிரியர், இயேசு கிறிஸ்து போன்று இரக்கமுடையவராக இருக்க வேண்டும்" என்ற ரூஸோவின் கருத்தை என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் தனது பாடசாலையைச் சூழவுள்ள கிராமத்தை அல்லது நகரத்தை முற்றிலும் உணர்ந்தவராகச் செயற்பட வேண்டும். "நான் கற்பிக்கின்றேன்" என்று எண்ணாது மாணவனது, உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து "மாணவனது இயற்கை அறிவையும், ஆற்றலையும் துலங்கச் செய்யும் தூண்டியாக உள்ளேன்" என்று சிந்திக்க வேண்டும். ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையிலான அன்புப் பிணைப்பு பற்றுறுதி வாய்ந்ததாக இருக்க வேண்டும். ஆசிரியர் தன்னிடத்தே காட்டும் கல்விச் சிகரத்தை ஒருபோதும் உதாசீனம் செய்ய முடியாது என்ற நிலைக்கு மாணவனைத் தயார்படுத்த வேண்டும்.

வகுப்பறையில் பாடசாலைச் சூழலில் ஏற்படும் பிரச்சினைகள் தடங்கல்கள் அனைத்தையும் நீக்கும் வடிகான்களாக ஆசிரியரை மாணவன் மனதில் நிலை நிறுத்திக் கொள்ளச்செய்ய வேண்டும். மாணவனது சுயசிந்தனைக்கு முற்றிலும் வழி திறந்து விடுபவராகவும் மாணவனின் உயர்ந்த எண்ணங்களையும் சிக்கல்களையும் களைபவராகவும் இருக்க வேண்டுமேயன்றி அதனைத் தோற்றுவிப்பவராக இருக்கக்கூடாது.

ஆசிரியரிடத்தே சிறந்த வாழ்க்கைத் தத்துவம் காணப்படவில்லையெனின் அதனை எவ்வாறு மாணவனிடத்தே எதிர்பார்க்க முடியும் என்ற உண்மையை ஆசிரியர் ஒவ்வொரு நொடியிலும் தன்னிடத்தே கேட்கத்தக்க நிலையில் அவர் மெய்யியல் சிந்தனை பெற்றவராக இருக்க வேண்டும். "மாணவரிடத்தே கற்கும் திறன்களையும் கற்பதற்கான ஆர்வத்தையும் வாழ்நாள் முழுவதும் பெற்றுக் கொள்ளச் செய்பவர் ஆசிரியர்களே" என்ற பீற்றர் டிரக்கரின் கருத்தை ஆசிரியர் தன்னோடு இணைத்துக் கொண்டு செயற்படவேண்டும்.

கல்விப் பின்னடைவு இன்று பாடசாலைகளில் நிலவுகின்றதெனில் அங்கு ஆசிரியர் மாணவர் உறவு சீராக இல்லையென்பதே பொருள் எனலாம். கல்வி மெய்யியல் வளராத காலத்தில் சமூகத்தில் ஆசிரிய மாணவ உறவு புனிதமாக இருந்தது. இன்று தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக அவ்வுறவு சீர்குலைந்தாலும் அவ்வுறவை நிலைநிறுத்தும் மனப்பாங்கு ஆசிரியரிடமிருந்து ஒரு போதும் அகலக்கூடாது. தாய், தந்தை, நண்பன், ஆலோசகர், வழிகாட்டி, முன் மாதிரி, கடவுள் என்ற பல்வேறு பாத்திரங்களை ஆசிரியர் ஏற்றுள்ளார். இப்பாத்திரங்களாக அவன் நடமாட செயற்பட அவனிடத்தே மெய்யியல் சிந்தனைப்புலம் வலுவாக நிறுவப்பட்டிருத்தல் அவசியம் ஆகும்.

**திருமதி. சுகுணா சந்திரகுமார்**

ஆசிரியை

# அம்மா

பத்து மாதம் கருவறையில்
என்னை சுமந்தாய்
பெற்றெடுத்த பின்
என்னை காத்தாய்
உதிரத்தை பாலாக்கி
என்னுடலை வளர்த்தாய்
பிஞ்சு விரல் பிடித்து

நடை பயில வைத்தாய்
கல்வி பெற
பள்ளியில் சேர்த்தாய்
ஞாபகம் பெற
பாடத்தை
மீட்டறிவிப்பாய்
ஞாலத்தில் நீயே - என்
தெய்வம் அம்மா!



**சா.பிருந்திக்கா** - தரம் 3A

# எங்கள் பாடசாலை

எங்கள் நல்ல பாடசாலை
எமக்கு பிடித்த பாடசாலை
உயர்வான பாடசாலை
உள்ளம் கவரும் பாடசாலை

அருமையான பாடசாலை
அழகான பாடசாலை
வர்ணம் பூசிய பாடசாலை
வடிவான பாடசாலை

ஆக்கம் உள்ள பாடசாலை
ஆசையான பாடசாலை
கண்ணைக் கவரும் பாடசாலை
கற்று உயரும் பாடசாலை

**ரா.சிரோமி** - தரம் 5B

# பாடசாலை சீருடை

சீருடையாம் சீருடையாம்
எங்கள் பள்ளிக்கூட சீருடையாம்
வெள்ளை நிற சீருடையாம்
கண்ணைப் பறிக்கும் சீருடையாம்

நாட்டில் மாறாத சீருடையாம்
நாங்கள் அணியும் சீருடையாம்
தினந்தோறும் குளித்து நாம்
சுத்தமாக அணியும் சீருடையாம்

அரசு வழங்கும் வவுச்சரில்
அழகன் கடையில் வாங்கியதாம்
வெள்ளை நிறத் துணியிலே - நம்
அழகி அக்கா தைத்த சீருடையாம்

அம்மா போட்டனுப்பிய சீருடையாம்
அணிந்தாலே அழகு தரும் சீருடையாம்
அனைவரும் சமம் என்று
அறிவாய் பாடம் சொல்லும் சீருடையாம்

**பு.அஷானி** - தரம் 3A


# தெரிந்து கொள்வோம் பதினாறு பேறுகள்

1. புகழ்
2. கல்வி
3. ஆற்றல்
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்லூழ்
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பெருமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. ஆயுள்



**அ.அதுர்சிக்கா**
பழைய மாணவி 2013

# ஆரம்பக்கல்வியும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வாக்கு செலுத்தும் நுண்ணறிவும்



"யாவருக்கும் கல்வி" என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு, நாட்டில் சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக பாடநூல்கள், இலவசமாக சீருடை, பௌதீக வளங்கள், ஆசிரியர் வளங்கள் என கற்றல் வசதிகளை ஏற்படுத்தி மாணவர்களை சிறந்த பிரஜையாக உருவாக்குவதற்கு செயற்படுகின்றது. அந்த வகையில் ஒரு பிள்ளை, முறை சார்ந்த ஆரம்பக் கல்வியை ஆறு வயதிலிருந்து பாடசாலையில் கற்கத் தொடங்குகின்றது. முறை சார்ந்த ஆரம்பக்கல்வி ஐந்து ஆண்டுகளைக் கொண்டமைந்துள்ளது. அதாவது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை ஆரம்பக்கல்வியான அடிப்படைக் கல்வியை கசடறக் கற்கவேண்டும்.

ஆரம்பக் கல்விப்புலம், கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது,


முதன்மை நிலை 1 - தரங்கள் 1 உம் 2 உம்
முதன்மை நிலை 2 - தரங்கள் 3 உம் 4 உம்
முதன்மை நிலை 3 - தரம் 5 என்ற நிலைகளாகும்.

மொழி, கணிதம், சமயம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என பாட விடயங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மற்றும் தரம் 3 முதல் தரம் 5 வரை முறைசார்ந்த ஆங்கில மொழியும் இரண்டாம் தேசிய மொழியும் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் இடம்பெறுகின்றன. அத்தோடு மாணவர்களின் ஆற்றல்கள், திறன்களை வளர்த்தெடுக்கும் முகமாக வாரத்தில் ஒரு நாள் 30 நிமிடங்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் 2007ஆம் ஆண்டு முதல் முதன்மை நிலை ஒன்றுக்கு இரண்டாவது தேசிய மொழியும், செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலமும், ஆரம்பக்கல்வி மாணவர்களின் உடல் உள நலன் கருதி உடலியக்கச் செயற்பாடுகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எமது நாட்டில் ஆரம்பக் கல்வி கலைத்திட்டமானது தேர்ச்சி மைய கலைத்திட்டமாக உள்ளது. பொதுக்கல்வி நிலையில் இறுதியில் மாணவர்கள், விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித்திய மட்டத்தை அடைந்திருத்தல் வேண்டும். அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி என்பது வகுப்பறை ஒன்றில் பல்வேறு திறன் மட்டங்களில் இருக்கும் மாணவர்களுக்கு பொருத்தமான விதத்தில் இலகுவானது போன்றே சிக்கலானதுமான தேர்ச்சிகள் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சகல மாணவர்களாலும் அடைய வேண்டும் என எதிர்பார்க்கும்

தேர்ச்சிகளை அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் என அழைக்கின்றோம். இவை அடிப்படைத் தேர்ச்சிகளுக்கு பொருத்தமானதாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாணவர்கள், 2016ஆம் ஆண்டு புதிய கலைத்திட்டத்திற்கேற்ப முதன்மை நிலை 1இல் 48 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளிலும் 2007ஆம் ஆண்டு புதிய கல்வி சீர்திருத்த கலைத்திட்டத்திற்கேற்ப முதன்மை நிலை 2 இல் 52 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளிலும் முதன்மை நிலை 3 இல் 55 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளிலும் பாண்டித்திய மட்டத்தை அடைந்திருத்தல் வேண்டும்.



அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியில் பாண்டித்திய மட்டம் என்பது ஒரு தேர்ச்சியில் உள்ளடக்கப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு தொடர்பான உயர் மட்ட இயலுமையை ஒரு மாணவன் தனது வயதுக்குப் பொருத்தமாக வெளிக்காட்டுவாராயின் அவர் குறித்த தேர்ச்சியில் பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் என்பதனை முறைசாரா தொடர் கணிப்பீட்டுத் தகவல்களைக் கொண்டு தீர்மானிக்க முடியும். மற்றும் தொடர் கணிப்பீட்டு தகவல்களுக்கு மேலதிகமாக ஒரு இறுதிக் கணிப்பீடு மூலமாகவும் தீர்மானம் எடுக்க முடியும். இதற்கான கணிப்பீடுகளை ஆசிரியர்கள் திட்டமிட்டு செயற்படுத்துவதுடன் அதற்கான அறிக்கைகள், படிவங்களை பேணுவதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறாக ஆரம்பக் கல்வியில் புதிய கல்வி கலைத்திட்டம் காணப்பட்ட போதிலும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் "தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை" வினைத்திறனான விளைத்திறனின் வெளிப்பாடாக உள்ளதுடன் ஐந்து வருடக் கல்வியின் உச்சப் பெறுபேறாகவும் ஆரம்பக் கல்வியில் ஓர் உறுதிப்பாடான திட்டமாக அமைந்துள்ளது. 1952ஆம் ஆண்டு வறுமையான திறமை மிக்க மாணவர்களின் நலன்கருதி புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமானது. இதனடிப்படையில் **"மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமான பரீட்சை"** என்னும் நோக்கோடு தரம் 5 மாணவர்களுக்கு வருடந்தோறும் ஆகஸ்ட் மாதம் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

உண்மையிலே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சவாலான பரீட்சையாகவுள்ளது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையானது வினாத்தாள் I, வினாத்தாள் II என்ற இரு பகுதி வினாத்தாள்களைக் கொண்டது. வினாத்தாள் IIஇற்கு ஒரு மணித்தியாலம் பதினைந்து நிமிடங்களில் விடையளிக்க வேண்டும். வினாத்தாள் IIஇல் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிலுள்ள கலைத்திட்டத்திற்கு அமைவாக மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆங்கிலம், இரண்டாம் தேசிய மொழி போன்றவற்றை அடிப்படையாக கொண்ட வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் வினாத்தாள் I, மாணவர்களது கற்றல் திறன்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் (Learning Abilites & Potentialities) அளவிடுவதாக அமைந்துள்ளது. இவ்வினாத்தாள் 40 வினாக்களை உள்ளடக்கியது. 45 நிமிடங்களில் விடையளிக்கவேண்டும். இந்த நாற்பது வினாக்களும் நுண்ணறிவு திறன்களான 14 திறன்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது.

அதாவது,

1. பிரதியீடு செய்தல் - Substitution
2. பொருள் உரைத்தல் - Interpretation
3. எதிர்வு கூறல் - Prediction
4. மொழி பெயர்த்தல் - Translation
5. பிரச்சினை தீர்த்தல் - Problem Solving
6. தொடர்பு காணல் - Seeing Relationships
7. காரண காரியங்களை இனங்காணல் - Identification of cause and effect
8. தகவல்களை ஒழுங்குபடுத்துதல் - Organisation of Information
9. புலக்காட்சி - Perception
10. அவதானிப்பு - Observation
11. உள்ளடக்க இடைத்தொடர்பு - Inter relation
12. நியாயப்படுத்தல் - Reasoning
13. தூல வெளித்தொடர்புகளை இனங்காணல் - Seeing Spatial relationships
14. அறிவுத்தல்களைப் பின்பற்றுதல் - Following Instructions

நுண்ணறிவை ஆங்கிலத்தில் Intelligence என்று கூறுவர். இவ் ஆங்கில சொல்லானது நுண்மதி, விவேகம், உளத்திறன், உள ஆற்றல், உளச்சார்பு, புத்திக்கூர்மை, அறிதிறன் என பலவாறு பொருள்படுகின்றது. உளவியலில் நுண்ணறிவானது மனித திறன்கள் என்றும் எல்லோரிடத்தும் காணப்படுகின்றது என்றும் அதே சமயம் அது தனி நபர்களது அறிவு, திறன், மனப்பாங்குக்கேற்ப வேறுபட்டும் காணப்படுவதோடு அவனது உளச்செயற்பாடுகள், உளத்திறன்கள் அனைத்திலும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதை அறியலாம்.

உண்மையிலே மனிதனின் திறமைகளை நிர்ணயிக்கின்ற முக்கிய காரணிகளில் ஒன்றாக நுண்ணறிவின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் காணப்படுகின்றது. குறிப்பாக நுண்ணறிவானது மனிதனது கல்விசார் நடவடிக்கைகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனது அனைத்து வகையான செயற்பாடுகளிலும் வெற்றி வாய்ப்புக்களிலும் நுண்ணறிவு முக்கிய இடத்தைப் பெறுகிறது. தனிநபர்களது அறிவு, திறன், மனப்பாங்குக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த வகையில் ஆரம்பக்கல்வி வகுப்பறையில் காணப்படும் மாணவர்கள் ஆளுக்காள் வேறுபட்ட அறிவு, திறன், மனப்பாங்குகளைக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். அவர்களை இனங்கண்டு தனியாள் வேறுபாட்டிற்கேற்ப கற்பித்தல் நடவடிக்கைகளை கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிடமே உள்ளது என்று கூறுவதில் ஐயமில்லை.

மேலும் ஒருவருடைய நுண்ணறிவு வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. அந்த வகையில் பரம்பரையும் சூழலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. வகுப்பறைகளில் சில மாணவர்கள் சிறுவயதில் அதீத திறன்கள் ஆற்றல்களை வெளிப்படுத்துவர் இவற்றுக்கு காரணம் பரம்பரையாக பெற்றோர் மூதாதையர் வழியாக அமையும் உயிரியல் காரணிகளாகும். ஆக ஒரு மாணவனுடைய நுண்ணறிவைத் தீர்மானிப்பதில் அவனது பரம்பரைக் காரணியும் பங்கு வகிக்கின்றது எனலாம்.


ஒரு மனிதனது வளர்ச்சியையும் நடத்தை முறையினையும் அவற்றுக்குப் புறத்தேயிருந்து கட்டுப்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் செய்யும் பல்வேறு ஏதுக்களே சூழலாகும். ஒரு பிள்ளைக்கு சூழல் ஒழுங்காக அமைத்துக் கொடுக்கப்படுமாயின் அப்பிள்ளையின் நுண்ணறிவும் சிறப்பாக வளர்ச்சியடையும். அந்த வகையில் ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் பாடசாலை சூழலும் வீட்டுச் சூழலும் சிறப்பாக அமைதல்

வேண்டும். இதன் பொருட்டு பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி வகுப்பறைகள் கவின்நிலையுடனும் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயலொழுங்குகள் மூலமும் மகிழ்ச்சிகரமான வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் அறிவைத் தூண்டும் வகையிலும் கற்றல் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் பொருட்டு நுண்ணறிவு சார்ந்த விடயங்களை மேலதிக வகுப்புக்கள் மூலம் இயல்பாகவே நுண்ணறிவை பெற்றிராத மாணவர்களுக்கு பல்வேறு சிறப்பு கற்பித்தல் நுட்ப முறைகளில் ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். எனவே பிள்ளையின் கற்றல் செயல்பாட்டில் சிறந்த சூழலை அமைத்தல் வேண்டும்.

இன்னுமொரு விடயமான குடும்பமும் குடும்ப சமூக பொருளாதார நிலையும் ஒரு மனிதனின் நுண்ணறிவு வளர்ச்சியில் பங்காற்றுவதாகும். அதாவது தாழ்ந்த சமூக, பொருளாதார நிலையிலே வளரும் குழந்தைகளை விட உயர்ந்த சமூக பொருளாதார நிலையில் வளரும் குழந்தைகளில் நுண்ணறிவாற்றல் மிகையாக இருப்பதும் கண்டயறிப்பட்டுள்ளது. ஏனெனில் தாழ்வான சமூக பொருளாதார நிலையில் வாழும் பிள்ளைகளின் கவனம் அடிப்படைத் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்யலாம் என்ற விடயத்தில் குவிந்திருப்பதால் ஏனைய விடயங்களில் சிந்தனைகளில் அவர்களது கவனத்தை செலுத்த முடியாத நிலை ஏற்படும். மாறாக உயர்ந்த பொருளாதாரத்தில் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் எவ்வித தடைகளுமின்றி நிறைவேற்றப்படுவதால் இவர்கள் பல்வேறு துறைகளில் தமது கவனத்தை செலுத்துவதன் மூலம் நுண்ணறிவை வளரச் செய்கின்றனர். உண்மையிலே பின்தங்கிய கஷ்ட பிரதேசங்களில் காணப்படும் மாணவர்களை விட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகமானோர் பொருளாதாரத்தால் பாதிக்கப்படாத பிள்ளைகளே வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றவர்களாக இருப்பார்கள். இருப்பினும் பொருளாதாரத்தினால் பின் தங்கிய சில மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் அதிக புள்ளிகளை பெற்ற சாதனைகளும் உள்ளன. காரணம்,"ஒருவரது நடத்தையும் உடலியற் பண்புகளும் அவரது பரம்பரை இயல்புகளிலும் அவர் வாழும் சூழலினாலும் உருவாக்கப்படுகின்றன" என ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே நுண்ணறிவு வளர்ச்சி பரம்பரையில் மாத்திரமன்றி சூழலிலும் தங்கியுள்ளது எனலாம்.

எனவே ஆரம்பக்கல்வியில், மாணவர்களுக்கு உதவ வேண்டிய பெற்றோர்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு நல்ல சூழலை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் அறிவை விருத்தி செய்வதில் ஆர்வத்துடன் செயற்பட வேண்டுமே தவிர பிள்ளைகளுக்கு கல்வி புகட்டும் பொருட்டு அதிகளவான சுமைகளைக் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். அதே போல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது ஆரம்பக் கல்வியில் சிறந்ததொரு மதிப்பீடாக காணப்படுகின்றது என்பதனை கருத்தில் கொண்டு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் மாணவர்களின் நுண்ணறிவு ஆற்றலைக் கண்டறிந்து கல்வித் தரத்திற்கேற்ப அவர்களுக்கேற்ற வகையில் கற்பித்தல் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல் செயலொழுங்குகளை திட்டமிட்டு அர்ப்பணிப்புடன் எதுவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் கல்வியை பாடசாலைகளில் பூரணமாக வழங்க செயற்பட வேண்டும். மாணவர்களும் தமது கல்வியில் தேர்ச்சிகளைப் பெற முயற்சியுடன் கற்று பரீட்சையை முகம் கொடுக்கும் போது சாதகமான விளைவுகளைப் பெறமுடியும்.

**திருமதி. கலைவாணி வசந்தகுமார்**
ஆசிரியை



# நோய் தீர்க்கும் மருத்துவ மூலிகைகள்



"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம்மருந்து போல் வாரும் உண்டு"

துளசி:- மூலிகையில் துளசியை எடுத்தால் இது நான்கு வகை. கருந்துளசி, செந்துளசி, நாயத்துளசி, மலைத்துளசி எனவும் இது 64 நோய்களை குணமாக்கும். கருந்துளசியில் சாற்றை பிழிந்து பெரியவர்கள் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிடலாம். குழந்தைகளுக்கு 10 துளி கொடுத்தால் நெஞ்சில் உள்ள சளி குறையும். இதயத்திற்கும் ஈரலுக்கும் நல்ல வலிமையும் பசியும் தரும். இரத்தத்தில் உள்ள கிருமியை அளிக்கும். தீராத வாய்வுக்கு இஞ்சிச் சாறும் துளசிச் சாறும் சமனாய் தேன் கலந்து குடித்தால் இடுப்பு வலி, மூச்சுப்பிடிப்பு, கழுத்துவலி என்பன தீரும். இது தொடர்ந்து ஆறு நாட்கள் குடிக்க வேண்டும்.

அருகம்புல்:- உலகிலே தோன்றிய முதல் மூலிகை அறுகம்புல் ஆகும். இது பால் அறுகு, யானை அறுகு என்பனவாகும். சூரிய வெப்பத்தை தாங்கி கிரகித்துக் கொள்ளும் சக்தி உண்டு. வாதம் பித்தம் தீர்க்கும். உடலில் உள்ள விஷத்தை தீர்க்கும், உடலில் உள்ள ஒவ்வாமையை நீக்க கசாயம் வைத்து குடிக்க வேண்டும். பச்சையான உயிர்ச்சத்துக்களும் தாது உப்புக்களும் புரதமும் உள்ளது. சாற்றினை நாள் தோறும் குடித்தால் கொதி, வரட்சி, மயக்கம், களைப்பு நோய்கள் தீரும். கண் நோய் தீர சாற்றை இட வேண்டும். அருகம் வேருடன் வெண்மிளகு சேர்த்து கசாயம் இட்டு பசு நெய் சேர்த்து குடித்தால் மூலக்கடுப்பு, நீர்க்கடுப்பு உண்டான நோய் தீரும்.

வெற்றிலை:- வெற்றிலை குரலை இனிமையாக்கும், வாய் நாற்றம் தீரும், உமிழ் நீர் சுரப்பை அதிரிக்கும், காலையில் வெற்றிலையுடன் பாக்கு சேர்த்து உண்டால் நன்றாக மலம் கழியும், மதியம் சுண்ணாம்பு சேர்த்தால் பசி உண்டாகும், வெற்றிலையுடன் கசப்பு சேர்த்தால் பற்கள் இறுகும். வெற்றிலை சாற்றினை காது மூக்கில் விட்டு வந்தால் தலைப்பாரம், காதுவலி தீரும். தொண்டை அடைப்பு, குரல் கம்பல் போன்றவற்றிற்கு வெற்றிலையும் சாம்பிராணியும் சேர்த்து உண்ண வேண்டும். வெற்றிலைச் சாறும் இஞ்சி சாறும் சேர்த்து குடித்தால் நுரையீரல் நோய் தீரும். வெற்றிலைச் சாற்றுடன் நீர்த்த சுண்ணாம்பு சேர்த்து பூசினால் தொண்டைப்புண், கல்லீரல் வீக்கம் தீரும் .

**திருமதி. சிவாஜினி வசந்தகுமார்**
ஆசிரியை



# வறுமையிலும் கல்வி

அது அந்திப் பொழுது மேற்கு வானில் செந்நிறப் படலமாய் ஆதவன் மறையும் நேரம் விஜய், தனுஷ் ஆகிய இரு நண்பர்களும் மிகவும் சந்தோசமாக ஆடை அணிந்து அவர்கள் எங்கே செல்லப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த மாலை நேரத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கான விழா. அங்குதான் இருவரும் செல்லப் போகிறார்கள்.

அந்த விழாவின் போது விஜயின் நண்பனான தனுஷ் தன்னைப் பற்றி கூறுகையில் எனது நண்பனான விஜய் தான் நான் இந்த நிலைக்கு வரக்காரணம் எனக்கு சிறு வயதிலிருந்தே படிப்பு என்றாலே வெறுப்புதான். ஆனால் ஏனோ தெரியவில்லை, விஜய் மட்டும் படிப்பு என்றால் உயிராக இருந்தான். அவன் மாலை நேர வகுப்புகளுக்குச் செல்லும் பொழுது அவனுடன் நானும் செல்வேன் படிப்பதற்கல்ல, பொழுதைப் போக்குவதற்கு. ஆனால் அவனுக்கு வகுப்பிற்கு பணம் கூட கொடுக்க முடியாத நிலை. அவனது வீட்டில் வறுமை அதிகம். அவனது தந்தை ஒரு கூலித்தொழிலாளி. ஆனாலும் அவன் படிப்பை தன் உயிர் போன்று நினைத்து கற்று வந்தான்.

ஆனால் எனது தந்தையோ ஒரு முதலாளி, ஆனாலும் எனக்கு படிக்க விருப்பமில்லை. அன்றுதான் நான் படிப்பின் அருமை புரிந்தேன். அன்று விஜய் எனது வீட்டிற்கு வந்திருந்தான். எனது தந்தையிடம் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுக்கும் நாள். எனது தந்தை ஒரு தொகைப் பணத்தை வைத்துக் கொண்டு அனைத்து தொழிலாளர்களுக்கும் சமனாக பகிர்ந்து கொடுக்க கஷ்ரப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் விஜயோ அத்தொகையை இலகுவாக பிரித்து அனைத்து தொழிலாளர்களுக்கும் சமனான சம்பளத்தை கொடுத்தான். அன்று எனது தந்தையின் மானத்தைக் காப்பாற்றினான். பின்பு என்னையும்

அவனுடன் மாலை வகுப்பிற்கு கூட்டிச் சென்றான். அன்றும் அவன் வகுப்பிற்கு பணம் கட்டவில்லை. அதனால் அவனை வகுப்பை விட்டு வெளியே துரத்தி விட்டார்கள். ஆனாலும் அவன் வகுப்பிலிருந்து சென்று வெளியில் நின்று வகுப்பில் நடக்கும் பாடங்களை வெளியே நின்றபடியே அவதானித்துக் கற்றான்.

மறுநாள் மாலையும் வகுப்பிற்கு பணம் இல்லாமலே வந்தான். அன்றும் அவனை வெளியில் துரத்தி விட்டார்கள். அவன் அன்றும் வெளியில் நின்றபடியே கற்றான். முதல் நாள் கற்ற விடயத்தில் ஆசிரியர் கேள்வி கேட்டார். அந்த வகுப்பில் இருந்து கற்ற எனக்கோ மற்ற மாணவர்களுக்கோ கேள்விக்குப் பதில் தெரியவில்லை. ஆனால் வகுப்பிற்கு வெளியில் நின்ற விஜய்க்கோ கேள்விக்கு பதில் தெரிந்தது. அவன் விடையை சரியாகச் சொல்லி ஆசிரியரிடமும் பாராட்டைப் பெற்றான். அன்றிலிருந்து அவனை அந்த ஆசிரியர் பணம் இல்லாமலே பாடம் படிக்க அனுமதித்தார்.

இவ்வாறு நான் பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கும் அவன்தான் காரணம். அவனோடு சேர்ந்ததால் தான் நான் இவ்வாறு கற்றேன். அவன் ஏழ்மையானவன் என்று நினைத்து அவனைவிட்டு நான் விலகி இருந்திருந்தால் இவ்வாறு படித்தவன் ஆகியிருக்க மாட்டேன். கற்க விருப்பமில்லாமல் இருந்த என்னையும் அவன்தான் கற்றலின் அருமையையும், கற்கும் ஆர்வத்தையும் கொடுத்து இவ்வாறு உயர்த்தியிருக்கிறான்.

அவன் நினைத்திருந்தால் பணம் இல்லாமல் வகுப்பிற்கு செல்ல முடியாது என தனது தாய் தந்தையிடம் கூறி தனது படிப்பை அப்படியே நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அவனது குடும்ப கஷ்டத்தையும் தாண்டி படிப்பிற்கு முன்னுரிமை கொடுத்து பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடத்தைப் பெற்றுள்ளான். நான் இந்த நிலை பெறக் காரணமும் அவன்தான் என தெரிவித்தான் தனுஷ். அடுத்து விஜய் தனது நிலை பற்றி கூறுகையில், எனது இந்த வெற்றிக்கு காரணம் எனது தாய் தந்தை மற்றும் என்னை பணமில்லாமல் மாலை வகுப்பில் கற்க அனுமதி தந்த ஆசிரியருமே எனக் கூறினான். பின்பு தனுஷ், வறுமை ஒரு மனிதனின் கல்வியை தடை செய்யாது என்பதற்கு எனது நண்பன் விஜய் ஒரு உதாரணம். அவனது வீட்டிலும் வறுமைதான் ஆனாலும் அவன் தன் படிப்பைத் தன் உயிர் போன்று கற்று முன்னேறியுள்ளான்.

கல்வி ஒரு மனிதனை பூரணப்படுத்தும். அது விஜயின் வாழ்க்கையில் நடந்துவிட்டது. நாமும் சலிக்காமல் படித்தால் வாழ்கையில் முன்னேற்றமடையலாம்.

**மோ.விகாஷன்**
பழைய மாணவன் 2014

# துக்கத்தை வெளிப்படுத்துவதில் பல்வேறு விதங்கள்

**மொசப்பத்தேமியா** நாட்டு மக்களிடையே ஒரு வழக்கம் உள்ளது. ஒருவர் மரணித்துவிட்டால் அவருக்காக அழும்போது சிந்தப்படும் கண்ணீரை ஒரு பாத்திரத்தில் சேகரிப்பார்கள். அவ்வாறு சேகரித்த கண்ணீரை ஒரு போத்தலில் அடைத்து சடலத்தை புதைக்கும் போது அந்த கண்ணீர் போத்தலையும் சடலத்தோடு வைத்து அடக்கம் செய்வதன் மூலம் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்துவார்கள்.

**இஸ்ரேல்** நாட்டு மக்களிடையே ஒரு வழக்கம் உள்ளது ஏதாவது ஒரு துக்கம் நேர்ந்து விட்டால் அல்லது ஒரு துக்க செய்தியை கேள்விப்பட்டால் தாங்கள் அணிந்திருக்கும் உடைகளை கிழித்துக் கொண்டு சாம்பலில் உட்காந்து அழுது புலம்புவார்கள். இவ்வாறு தங்களின் துக்கத்தை வெளிப்படுத்துவார்கள்.

**பி. ரேணுகா** பழைய மாணவி 2015

# அன்னை



உலகிலே தோன்றும் அனைத்து உயிரினங்களுமே தாயினிடத்திலேதான் உருவாகின்றன. கருவைத் தருவதற்கு காரணமான இன்னுமொரு உயிர் வேண்டுமாயின் கருவிலே உருவாகும். புது உயிரை சுமந்து உடல் தந்து உலகத்தில் உலவவிடும் தகைமையும் பொறுப்பும் அன்னையுடையதே.


இந்த வகையில் தாய் தான் ஒருவருடைய முதல் கண் கண்ட தெய்வம். நாம் அன்னையை வணங்கிப் போற்ற வேண்டும். **"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"** என்பது முதுமொழி. பிறவியிலே அரிய பிறவியாகிய மனிதப்பிறவியை பெற்ற எம்மை ஈன்று அனைத்தும் தந்து அன்புடன் வளர்ப்பவர். எம்மை பத்து மாதம் சுமந்து பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்து பெற்றவள் அன்னை தான். பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்து உலகிலே உயர்ந்த பண்பையும் ஊட்டுபவள் எங்களைப் பெற்ற தாய்.

பிள்ளைக்கு நோய் வந்தால் தான் பத்தியம் காத்து, கொட்டும் மழையிலும் கொழுத்தும் வெயிலிலும் எம்மைப் பாதுகாத்து வளர்ப்பவர், பள்ளிப் பருவம் வந்ததும் எம்மைப் பக்குவமாய் பாடசாலைக்கு அனுப்பி வைப்பவர், பாடசாலையில் ஆசிரியரையும் ஏனைய பிள்ளைகளையும் மதித்து பண்போடு வளர வழி காட்டுபவர் எமது அன்னையே. இப்படியான பாச நெஞ்சுடைய அன்னையை விட இந்த உலகத்தில் எமக்கு அன்பு பாராட்டுபவர் வேறொருவரும் இருக்க முடியாது.

நம் சுக துக்கங்களில் பிறந்த நாள் முதல் இறக்கும் வரை பங்கு கொள்பவர் தாய். **"பெற்றவள் அறிவாள் பிள்ளையின் அருமை"** என்றொரு பழமொழி உண்டு. தாய்க்கு முன்னால் அவளின் பிள்ளைகள் எவ்வயதினை அடைந்தாலும் குழந்தைகளைப் போலவே தெரிவர். பெண் பிள்ளைகள் புத்தி தெரிந்து பெரியவர் ஆகும் போதெல்லாம் அவர்களுக்கு அருகில் இருந்து ஆலோசனைகளை தந்து அரவணைத்து வாழும் வழியை கற்பித்துத் தருபவள் தாய்.

பிள்ளைகள் ஆகிய நாம் செய்யும் குற்றங்கள் குறும்புகள் எல்லாம் சகித்து தனக்கே உரித்தான கருணை உள்ளத்தோடு எம்மை ஆதரித்து வளர்க்கும் தாய்க்கு நிகராக எதைத்தான் கூற முடியும். தாய் நமக்கு செய்த உதவிக்கு நம்மால் எதையுமே ஈடாக தர முடியாது. ஆகவே அன்னையிடத்திலே நாம் என்றும் அன்பும் பணிவும் உடையவர்களாகவே இருத்தல் வேண்டும். **"மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்"** என்று அருந்தமிழ் அம்மை ஔவைப்பிராட்டியார் சொன்ன வார்த்தைகளின் பிரகாரம் அன்னையை கண் கண்ட முதல் தெய்வமாக மதித்து வாழ்வோம்.

**S.லோஜன்**
பழைய மாணவன் 2014



# இலக்குகளை தீர்மானிப்பது இலகு! ஆனால் இலக்கை அடைவது என்பது இலகு அல்ல!

இலக்கு என்பது அடைய வேண்டிய மையத்தைக் குறிக்கும். இலக்கு பல்வேறு வகையில் அமையும். ஒவ்வொரு மனிதனும் இலக்கு உள்ள வரை வாழவேண்டும். இலக்கு ஒன்றினை முன் வைத்தே மனிதன் வாழ்வில் படிப்பினை வளர்ச்சியினை எய்து கொண்டிருக்கிறான். இலக்கினை எவராலும் தீர்மானிக்க முடியும் ஆனால் அதன் வெற்றி என்பது இலகுவானதொன்றல்ல. இலக்கினை அடைய கடுமையான உடல் உழைப்பும், நீண்ட நேரமும் தேவைப்படுகின்றது. தடைகள், இடர்கள் ஏற்பட்டாலும் இலக்கினை அடைவதில் முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் தான் இலக்கினை அடைய முடியும்.

இலக்கினை அடையும் போது ஏற்படும் முரண்பாடுகள் பிரச்சினைகளால் ஏற்படும் தடைகளால் மனச் சோர்வடையாமல் எதையும் சவாலாக ஏற்றுக் கொண்டு வெற்றியடையும் சிந்தனையை வளர்த்துக் கொள்ளவேண்டும். மேலும் நோக்கினை அடைய திட்டமிடல் முக்கியமானது. ஒரு திட்டமிடல், முன்னாயத்தத்துடன் செயற்படுதல் வேண்டும். திட்டமிடல் இல்லாமல் எந்தவொரு காரியத்தில் ஈடுபட்டாலும் அதை நிறைவாக பூர்த்தி செய்ய முடியாது.

எனவே ஒவ்வொரு மனிதனும் தனக்குப் பொருத்தமானதும் தன்னால் சமாளிக்க கூடியதுமான இலக்குகளை தீர்மானித்து அதன்படி திட்டமிட்டு வாழ்வோமானால் இலக்கினை ஒவ்வொரு மனிதனாலும் அடைய முடியும்.

**சு.மதுசாழினி** - பழைய மாணவி 2015

# මගේ පාසල

1. මගේ පාසල මඩ/කකු/පේත්තාලයි චන්ද්‍රකාන්දන් විද්‍යාලය.
2. මගේ පාසලේ ළමයි තුන්සිය අසූහතර දෙනෙක් ඉගෙන ගනිති.
3. මගෙ පාසලේ ගුරුවරු එකොළස් දෙනෙක් උගන්වති.
4. මෙහි එක ශ්‍රේණිය සිට පහ ශ්‍රේණිය දක්වා පන්ති පැවැත් වෙනවා.
5. මගේ පාසලේ විදුහල්පති කේ.කදිර්භාමනාදන් මහතාය.
6. මගේ පාසල හරිම ලස්සනයි.
7. ඒ වගේම පිරිසුදුයි.
8. මම මගේ පාසලට ඉතා ආදරෙයි.

එස්.නිදුර්ශිකා - ශ්‍රේණිය - 05 B




ஆடிக்காற்றின் அகோரமாய் செல்லம்மாவின் மனதும் உள்ளூரக் கனத்துக் கொண்டிருந்தது. சோகத்தில் வாடி வதங்கிய அவள் நிலையை பார்க்க, கச்சான் காற்றில் கிளைகள் முறிந்து அலங்கோலமாகக் காணும் அவள் முற்றத்து நாவல் மரமாய் நிலை குலைந்து போயிருந்தது. சொறுவாமுனைக் கிராமத்தின் அழகை கரவெட்டியாறு மெருகூட்டியபோதும் செல்லம்மாவின் குடிசை மட்டும் தன்னந்தனியே ஒளியிழந்து கிடந்தது. ஆனால் அவளின் பேரக்குழந்தைகளான அனுவும், மதுவும் எந்தவித சலனமும் இன்றி முற்றத்தில் ஓடியாடி விளையாடி திரிந்தனர்.

முற்றத்து நாவல் மரத்தடியில் குந்தியிருந்த செல்லம்மாவின் எண்ணம் அந்த இரண்டு குழந்தைகளையும் பற்றி ஓடிக்கொண்டிருந்தது. தான் இறப்பதற்கு முன் எப்படிப் படிப்பித்து மனிதர்களாக்க வேண்டும்? என்ற ஏக்கப் பெருமூச்சொன்றை வெளியிட்டவளாக ஆற்றின் கரையை வெறிச்சுப் பார்த்துவிட்டு ஈர்க்குத்தடியை எடுத்து முற்றத்தை சீய்த்துக் கூட்டத் தொடங்கினாள்.

ஒன்றரை வருடங்களுக்கு முன் தன் ஒரே மகள் தேவிகா குடும்ப கஸ்டம் காரணமாக வீட்டுப் பணிப்பெண்ணாக மத்திய கிழக்கு நாடான குவைத்துக்குப் போனதும் அவள் கணவனான மருமகன் வேலாயுதம் ஒரு வருடத்தின் பின்னர் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு தனிக்குடித்தனம் சென்று விட்டார். இடி விழுந்தாற்போல் செல்லம்மா உள்ளத்தால் கருகிப் போனாள். விதி அவளை விடவில்லை போலும் கடந்த ஆறு மாதத்தின் பின் தன் மகள் குவைத் வீட்டு எஜமானி பெண்ணால், தள்ளி விழுத்தப்பட்டு பின் தலை அடிபட்டு இரும்புக் கம்பியில் விழுந்து, மூன்று நாட்களின் பின் மரணத்தை தழுவிய செய்தி கேட்டு சுக்கு நூறாக மனதாலும் உடலாலும் உடைந்து போனாள். ஒரு மாதமாகியும் இறந்த மகளது உடல் இன்னும் வீடு வந்து சேராததும் அவளது இறந்த உடலையாவது பெறுவதற்கு வேலை வாய்ப்பு

அமைச்சு வேலைவாய்ப்பு பணியகம் போன்றவற்றின் அதிகாரிகளையும் உள்ளூர் அரச அதிகாரிகளையும் சந்திக்கச் சென்று அலுத்துப்போன வாழ்க்கையையும் எண்ணி செல்லம்மா இப்படியாகியிருக்கிறாள்.

இளமையிலேயே கணவனை இழந்து தன் ஒரே மகளை வளர்ப்பதற்காக வயல் வெட்டைகளில் கதிர் பொறுக்கி, களை பிடுங்கி, ஆற்றில் இறால் பிடித்து, சீவித்த அந்த வாழ்க்கை, தனது ஒரே மகளுக்கு வந்துவிடக் கூடாதென எண்ணியிருந்தவளுக்கு இன்று அந்த மகளுமின்றி ஆசையாய்க் கட்டி வைத்த தன் மருமகனும் வேறு திருமணம் முடித்து சென்றுவிட இரண்டு பேரக் குழந்தைகளுடன் மீண்டும் ஒருமுறை தன் வாழ்வை செல்லம்மா பின்நோக்கி நகர்த்துகிறாள். மகள் குடும்பத்தை உயர்த்த வெளிநாடு சென்று, கல்வீடு கட்டி கரண்ட் எடுத்து, பிள்ளைகளைப் படிப்பிப்பது என்று கட்டிய மகளின் கனவுகளெல்லாம் இன்று கச்சான் காற்றோடு அள்ளுண்ட சொப்பின் பைகளாக வானத்தில் பறக்க, மீண்டும் வயல் வெளிகளையும் கரவெட்டி ஆற்றின் கரைகளையும் மாறிமாறிப் பார்க்கிறாள். வயலிலும் ஆற்றிலும் அவள் கண்கள் தேடும் பச்சை நிறம் இரு கண்களிலும் பட்டும் குளிர்ந்து போகிறது....

**திருமதி.ம.தயாளகுணதாஸ்** – உப அதிபர்

# ගුරුවරයෝ

පුංචි අපට අකුරු උගන්නලා

අනාගතයට මග පෙන්නලා

රටේ හොඳ පුරවැසියක් වෙන්න

නිතර අපට උදව් කරලා

මහන්සිවෙන ගුරුවරයෝ

මග පොළවේ අප දෙවියෝ

ජේ.අක්ශායිනි - ශ්‍රේණිය - $04^B$

# எதிர்காலம்

எதிர்காலம் என்னவாகுமோ?
எண்ணும் போதே நெஞ்சம் துடிக்கிறது
நினைக்கும் போதே நிலை குலைகிறது
பேசும் போதே ஆழம் தெரிகிறது...

உழைக்கும் மனிதன் உல்லாசம் தேடுகிறான்
பழக்க வழக்கம் பாழாய் போகிறது
உறவின் நெருக்கம் சருகாய் போகிறது
பிதாமகள் உறவு தவறாய் ஆகிறது
கணவன் மனைவி அன்பு
கானல் நீராய் ஆனது

சகோதரர்கள் பாசம் சச்சரவாய் ஆனது!
பணத்தின் மோகம் பண்பாட்டை விற்கிறது
குணத்தின் சீலம் சுடுகாடாய் போனது
ஒவ்வொரு மனிதனும்
தனித்தனி துருவங்கள்
பந்தமும் பாசமும் நெருப்பாய் சுழல்கிறது
இரக்கம் என்பது எங்கோ போனது!
இல்லற வாழ்வு நொறுங்கிக் கிடக்கிறது
குடும்ப சொர்க்கம் மின்சாரம் ஆனது
விலையின் கொடுமை ஏழையைக்
கொன்றது...

திருந்திடு மனிதா திருந்திடு!
சிந்தையுள் நல்லெண்ணத்தை விதைத்திடு
சீரும் சிறப்புமாய் வாழ வழி தேடு
ஏங்கிய உள்ளத்துக்கு இதமாய் நீ இரு
ஏற்றத் தாழ்வை அடியோடு அறுத்தெறி
தூய கொள்கை நீ கொண்டால் மட்டுமே!
துயரமில்லா வாழ்வை
எதிர்காலம் மீளப் பெறும்
இல்லையேல் என்னவாகுமோ...?

**திருமதி.ஜெ.முரளி**
ஆசிரியை

# எனது வீடு

சின்னச் சின்ன வீடு
சீராய் கட்டிய வீடு – எம்
சிறிய குடும்பம் வாழ்ந்து
சினேகம் வளர்க்கும் வீடு

அன்னை தந்தையோடும்
அன்புத் தம்பியோடும்
அரணாய் விளங்கும் வீடு
அகமகிழ்ந்து வாழ்வேன்

**பா.தர்மினி** – பழைய மாணவி 2016

# அணில்

உலகில் பல நாடுகளில் அணில்கள் வாழ்கின்றன. அவை மரங்களில் உள்ள துளைகளில் வாழ்கின்றன. அணில்களில் பல விதமான அணில்கள் உள்ளன. அவை பழங்கள், தானியங்கள் போன்றவற்றை உண்கின்றன. இவற்றின் முன்னங்கால்கள் சற்று குட்டையாக இருக்கும். பின்னங்கால்கள் சற்று நீளமாக இருக்கும். இதனாலே இவற்றால் மரங்களில் தாவிக்குதித்து ஏற முடிகின்றது.



அணிலுக்கு பெரிய வால் உண்டு. அணில்களின் பின்னங்கால்களில் ஐந்து விரல்கள் உள்ளன. முன்னங்காலில் நான்கு விரல்கள் மாத்திரம் உள்ளன. விரல்கள் கூரான வடிவில் அமைந்துள்ளன. அதனால் அணில்களால் மரங்களில் சுலபமாக ஏற முடிகின்றது.

**சி.நுஜானு** – தரம் 1A

# பெற்றோரின் பொறுப்பும் பிள்ளையின் கடமையும்



உலகம் இன்று சகல விதத்திலும் விரிந்து செல்கிறது. தேவைகள் அதிகரிக்கின்றன. பல் கலாசார சமூகம் பரந்து கிடக்கிறது. உறவுகள் சுருங்கி பார்வைகள் அனலாய் பாய்கிறது. எது எப்படி இருந்தாலும் பெற்றோர் அவர்களுடைய பொறுப்புக்களை சரிவரச் செய்தல் வேண்டும். அதே போல் பிள்ளைகளும் தங்கள் கடமையில் நின்று நிலை மாறக்கூடாது.

**"நல்லதொருகுடும்பம்பல்கலைக்கழகம்"** என்பது சினிமா பாடலடி. இதற்கமைய குடும்பம் என்ற நதியிலிருந்துதான் பல கிளை நதிகள் பிரிந்து செல்கின்றன. அந்த நதியில் ஊற்று நல்லதாக அமைந்தால்தான் பாயும் நதியும் தூய்மையானதாக அனைவருக்கும் பயன்படக்கூடியதாக இருக்கும்.

இந்த வகையில் பெற்றோர்கள் தமது பொறுப்புக்களை எவ்வித குறையுமின்றி செயல்படுத்த வேண்டும். பொறுப்புக்களை விஸ்தரிக்கையில் தம்முடைய பிள்ளைகள் யாவரும் சம பயனைப்பெறும் வகையில் ஒரே பார்வையில் நோக்கப்பட வேண்டும்.

பிள்ளை பெற்றோரின் தோள் மீது நின்று கொண்டு உலகைப் பார்க்கின்றது. அப்பிள்ளை அநேக விடயங்களை உள்வாங்கிக் கொள்கிறது. பெற்றோர் பிள்ளையின் பார்வையில் வேறுபாடு காணப்படுகிறது. எம் தோள்மீது நிற்கும் போது நாம் பிள்ளையை விட குறைந்த சுருங்கிய விடயங்களை உள்வாங்குகின்றோம் என்பதை உணர வேண்டும். பிள்ளையின் விருப்பு வெறுப்பை நெருப்பாக நோக்காமல் தேனிலும் இனிமையாக எண்ணி செயற்படுத்துவது மிகவும் அவசியம். பிள்ளை விரும்புவதை பெற்றுக்கொடுப்பதும் காப்புடன் கூடிய கண்டிப்பு வழங்குவதும், ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரைக்கும் கற்றலை மேற்கொள்ள துணைபுரிவதும், உயர்தரத்தில் தாங்கள் விரும்பும் துறையை தெரிவு செய்ய பிள்ளைக்கு சந்தர்ப்பம் வழங்குவதும் பிள்ளை சுயமாக சிந்திக்க வாய்ப்பளிப்பதும் அவசியமாகும்.

குறிப்பாக பெற்றோரின் ஆசைகளை பிள்ளை வாயிலாக நிறைவேற்றிக் கொள்ள முனைவது முட்டாள்தனமான செயலாகவே அமையும். அதாவது **"முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல்"** ஆகிவிடும்.

எனவே பெற்றோர் சிறப்பான ஆலோசகராக, வழிகாட்டியாக, நல்ல நண்பராக இருக்கவேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும். சமூகத்தில் தலை நிமிர்ந்து சவாலை எதிர்கொண்டு வெற்றி வாகை சூடும் பிள்ளைகளை உருவாக்க பெற்றோர் துடிப்புடன் செயற்படவேண்டும்.

பெற்றோர்கள் தமது பொறுப்புக்களை சரிவர செய்கின்ற போது பிள்ளைகளும் தமது கடமைகளை சரிவரவும் திறன்படவும் செய்தல் வேண்டும். குடும்பத்தின் நிலை அறிந்து செயற்படல், அன்பு செலுத்துதல்,


பெற்றோரை மதித்தல், நாவடக்கல், ஒத்துழைப்பு வழங்குதல், விட்டுக் கொடுத்தல், ஏற்றுக் கொள்ளுதல், உதவி செய்தல், சுதந்திரத்தை எல்லைக்குட்படுத்தல், சுயமாகக் கற்றல், பாடசாலை சமூகத்தை மதித்தல், பாடசாலையில் முன் வந்து செயற்பாடுகளில் பங்கு கொள்ளல், எதிர்காலத்தில் முகங்கொடுக்க தம்மை தயார்படுத்துதல் போன்ற விடயங்களில் பிள்ளைகள் முழு மூச்சுடனும், முழு மனதுடனும் செயற்படுதல் வேண்டும்.

பிள்ளைகள் தாம் செய்யும் தவறுகளால் தமது எதிர் காலமும், எதிர்கால சமூகமும் பாதிக்கப்படும் என்பதனை உணர்ந்து மனதிற் கொண்டு நல்லதொரு சந்ததியினரை வளர்த்தெடுக்கவும், வளம் பெறச்செய்யவும் தவறான பாதைகளை உடைத்தெறிந்து சரியான பாதையில் பயணத்தை தொடர வேண்டும். எனவே பெற்றோர்களும் பிள்ளைகளும் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர செய்தால் மாத்திரமே வீட்டின் ஆனந்த விருத்தியையும் நாட்டின் விருத்தியையும் ஏற்படுத்தும். இல்லையேல் வாழ்க்கை சீரழிந்து சின்னாபின்னமாகக் கப்பட்டு சிதறிப்போகும் நிலை ஏற்படும்.

இதனை தடுக்க ஒவ்வொருவரும் தமது பணிகளை மனமுவந்து உறுதிப்பாட்டுடன் நிறைவேற்றுவதற்கு செயற்பட்டால் வளமான வாழ்வினையும் தரமான அபிவிருத்தியினையும், சாந்தி மிக்க சமூகத்தையும் உருவாக்கி தரணியில் தலை நிமிர்ந்து வாழலாம்.

**திருமதி. தவலெட்சுமி யோகேந்திரன்**
ஆசிரியை

# கோயிலை வலம் வருவது எதற்கு?



கோயில் தரிசனத்துக்கு போகும் மக்களிடம் பெரியவர்கள் **"கோயிலை வலம் வர மறந்து விடாதே"** என்று கூறுவதுண்டு. கோயிலை வலம் வர வேண்டும் என்பதே இப்போதனை. இதன் பின்னால் ஒரு சிறப்பான அர்த்தமும் சாஸ்திரமும் உண்டு. காலையிலும் மாலையிலும் பொதுவாக உடற்பயிற்சி வேளையாக நாம் பழக்கப்படுத்தியுள்ளோம். இது இயலாதவர்களுக்கு கோயில் தரிசனமும் கோயிலை வலம் வருவதும் நல்ல உடற்பயிற்சியாக அமையும். சிறியவர்களும் பெரியவர்களும் எளிதில் செய்யக்கூடிய ஓர் உடற்பயிற்சியே கோயிலை வலம் வருதல். காலணிகளை கழற்றி வலம் வருதல், தோப்புக்கரணம் போடுதல், கும்பிடுதல் முதலியவை உடற்பயிற்சியின் சக்தியை அதிகரிக்கின்றது. இவ்வாறு நாம் அறியாமலே உடலில் உள்ள எல்லா மூட்டுக்களும் தசைகளும் நன்றாக அசைவடையும். கோயில் தரிசனம் மூலம் இறையருளும் கிடைப்பதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும்.

**ஸ்ரீ. அதுர்ஷன்**
தரம் 5 B

# GOOD TEACHER

*A teacher is the precious gift from God to us. A teacher is like a God as God is the builder of whole universe however a teacher is considered to be the builder of a good nation. Teachers are very prestigious people in the society who take responsibility to raise the mind status and living standard of the common people through their magic of teaching. Parents have lots of expectations from the teachers of their kids. The role of teachers varies from classroom to playground and from student to student. A teacher is very important in the life of everyone.*

*Before coming to the classroom, a good teacher ensures his /her goals of education on daily basis. Every teacher has different qualities of teaching their students. They vary in their knowledge, skills, and attitudes in teaching specific subjects. They try their best and do all efforts in helping us to achieve our goals in life. School life is considered as the best time of everyone's life as this is the time when everyone learns basis things about life and different subjects. All of us set our goals in the school time which decides the development of our nation. Each and every student gets open their mind in the school time and enhances their skills and knowledge by participating in the co-curricular activities such as sports, games, quizzes, group discussion, debates, essay writing, speech recitation, tours , field trips and more.*

*A good teacher has a very good personality. Students always get attached to teachers with good personality which leads to better communication, understanding and ultimately good results. Everyone can have a good, decent, likable and presentable personality. Just dress sensibly well, smell good and be a little gentle and kind.*

*Good teachers are also the best friends of their students who help them in deciding true path in their life. There are many teachers in any schools but only one of them becomes favourite of any student. Teachers set our goals of education through their collective roles of unique teaching and learning process. Our teachers motivate us to always work in harmony. Our teachers understand the problems of us and deal with us in both ways personally and professionally. They teach us to have positive attitudes towards life.*

*A good teacher is one who only gives his /her students but nothing accepts whole life instead he/she become happy with the success of students. A best teacher is the one who provides a best model of future generation to his/her nation.*

**T***ruthful*
**E***loquent*
**A***bility*
**C***haracter*
**H***umour*
**E***fficient*
**R***esponsible*



*Mrs. Janani Satheeskumar - Teacher*

# வாசிப்புத்திறனை அதிகரிப்போம்.

1. கற்றல் என்ற விடயத்தில் வாசிப்பு என்பது முக்கிய இடத்தைப் பெறுகிறது.
2. வாசிப்பு திறனை மேம்படுத்த பாடப்புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், செய்தித்தாள் போன்றவற்றை தினமும் வாசித்தல் அவசியமாகும்.
3. எழுத்துக்களின் உச்சரிப்புடன் கிரகித்து வாசித்தல் வாசிப்பை அழகு படுத்தும்.
4. நிறுத்தக்குறிகளை அனுசரித்து வாசித்தல் அவசியம்.
   உதாரணம்: முற்றுப்புள்ளி, காற்புள்ளி, விளிப்புக்குறி, கேள்விக்குறி, வியப்புக்குறி
5. ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு மணித்தியாலமாவது வாசிப்பதற்கென்று ஒதுக்குதல்.
6. கற்றலையோ வாசிப்பதையோ விருப்புடன் செயற்படுத்துதல் வேண்டும்.
7. வாசிப்பது மட்டுமன்றி வாசிக்கும் விடயத்தை விளங்கி கொள்வது அவசியமாகும்.
8. வாசிப்பு என்பது வாயால் உச்சரிக்கப்படுவது மட்டுமல்ல கண்களினாலும் மூளையாலும் கணிக்கப்படுவது.
9. "வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்கும்" என்பது அறிஞர் கூற்று.
10. "நூல்கள் பல கல்" என்பது ஔவையார் வாக்கு.

**"கற்பதற்கரிய விடயங்களை வாசிப்போம், கற்போம், ஒழுகுவோம், உயர்வோம்"**


**ம. சப்தமி** – தரம் 3A

# விஞ்ஞான அறிவு



- மனித உடலில் மிக நீளமாக என்பு தொடை என்பு ஆகும்.
- பச்சையத்தை கொண்டிராத தாவரம் காளான் ஆகும்.
- சீமெந்து உற்பத்தியின் மூலப்பொருட்கள் சுண்ணாம்புக் கல், களி மண், ஜிப்சம்.
- புவி அதிர்வு ரிச்டர் அளவிடையில் அளக்கப்படும்.
- ஹம்மிங் பறவை உலகிலே மிக சிறிய பறவையாகும். இதன் நீளம் 5cm ஆகும்.
- பூச்சிகளை உண்ணும் தவரங்களாவன யூற்றிக்குலோரியா, துரோசியா, நெப்பந்தசு ஆகும்.
- செவ்வாய் செந்நிறமாக ஒளிர்வதனால் அது 'செங்கோள்' என அழைக்கப்படும்.

**சு.அம்சிதா**
தரம் 5A






# உயர்ந்து நில்லுங்கள்



உங்கள் ஆளுமையை விருத்தி செய்து கொள்ள மூன்று நிலைகளில் உயர்ந்து நிற்பது அவசியமாகின்றது.

1. உடல் அளவில் உயர்ந்து நிற்றல் (நில்லுங்கள்)
2. மன அளவில் உயர்ந்து நிற்றல் (நில்லுங்கள்)
3. ஆன்மிக அளவில் உயர்ந்து (நில்லுங்கள்)

உங்களுடைய ஆளுமையின் மூன்று நிலைகளிலும் உயர்ந்து நிற்கும் போது வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளையும் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய முழுமையான தோற்ற அமைப்பு உங்களுக்கு கிடைத்து விடுகின்றது.
உடல் அளவில் உயர்ந்து நில்லுங்கள் என்பது கூனிக்குறுகி நிற்காமல், விறைத்த நிலையில் நிற்காமல் தோள்களை உயர்த்தி, இலகுவாக உடல் பாரத்தால் கால்களை அழுத்தாமல் காற்றில் நடப்பது போன்று நிற்பதற்கும், நடப்பதற்கும் கற்றுக் கொள்ளுங்கள். தாடையை உயர்த்தி நடக்க வேண்டாம். அவ்வாறு நடப்பதால் கர்வம் கொண்ட மனிதர்கள் என்றாகிய தோற்றம் கிடைக்கும்.

உடல் அளவில் உயர்ந்து நிற்கும் போது அடையாளம் தொலைந்து விடுகின்றது. நிமிர்ந்து நிற்பது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. நரம்புகளின் இறுக்கம் குறைகின்றது. தசைகளின் அழுத்தம் விலகுகின்றது. இரத்த ஓட்டம் சீராகிறது. மார்பு விரிவதால் சுவாசம் நன்கு நடைபெறுகிறது.

மன அளவில் உயர்ந்து நில்லுங்கள் என்பது "எப்போதும் முதல் தரமாகவே இருங்கள்", "முதல் தரமாகவே சிந்தியுங்கள்" என்பதாகும். சிறியவற்றை சிந்திப்பது போன்றே பெரியவற்றையும் சிந்திப்பது சுலபமானதுதான். நீங்கள் உங்கள் எண்ணங்களின் விளைவாகவே உருவாகிறீர்கள். "ஒருவன் ஆழமாக எதைச் சிந்திக்கின்றானோ அதுவே அவன் ஆகின்றான்". அச்சிந்தனை நல்லவையாக அமையட்டும். சாதனைக்கு உங்களுடைய எண்ணம் தான் எரிபொருள். உங்கள் மனதில் அச்சம், கோபம், வெறுப்பு, பொறாமை, குற்ற உணர்வு ஆகியவற்றை நிரப்பி அது செயல்படுவதை அனுமதிக்காதீர். சிறிய எண்ணங்களால் சிறுமைப்படுத்த வேண்டாம். உங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள். "நான் எப்படி மேலும் சிறப்படைய முடியும்?", "நான் எப்படி இன்னும் அதிகமாக செய்ய முடியும்?" இந்த இரண்டும் மதிப்பையும் அளவையும் அதிகமாக்கின்றன. பொருள் இல்லாமல் எதையும் கட்ட முடியாது. ஆகவே கற்றுக்கொள்ளுங்கள். கற்றதை வைத்து பெரிதாக சிந்தியுங்கள். அப்போது நீங்கள் மன அளவில் உயர்ந்து நிற்க முடியும்.

ஆன்மிக அளவில் உயர்ந்து நில்லுங்கள் என்பது ஒழுக்கத்தால் கடவுள் நம்பிக்கையுடன் வாழ்தல் ஆகும். ஆன்மிக அளவில் உயரமாக இல்லாத எவரும் மற்றவர்களின் மதிப்பீட்டில், உங்கள் மனச்சாட்சிப்படியே உயர்ந்து நிற்க முடியாது. இவ் உணர்வானது உங்களை உயர்த்துவதோடு, அமைதியையும் உயர்வையும் தருகின்றது. வாழ்கையின் ஏற்றத்தாழ்வுகள் உங்களை பாதிக்காத நிலையை பெற்றுத் தருகிறது.

இந்த பிரபஞ்சத்தின் விஸ்திரத்தை, காலத்தின் முடிவில்லாமையை மரியாதைகளுக்கும் புனிதத்தை ஏதோ ஒரு ஆன்மிக வழியில் நீங்களும் அவற்றில் ஓர் அங்கம் என்பதை அறியும் போது, மட்டுமே தான் ஆன்மிக அளவில் உயர்ந்து நிற்க முடியும். அதுவே எல்லா நிலை பேதங்களுக்கும் காரணமாகின்றது.

- உடல் அளவில் உயர்ந்து நில்லுங்கள்- தன்னம்பிக்கையை ஏற்படுத்தலாம்.
- மன அளவில் உயர்ந்து நில்லுங்கள் - ஞானத்தை அடையலாம்.
- ஆன்மிக அளவில் உயர்ந்து நில்லுங்கள் - வெற்றி பெறலாம்.

**திருமதி. லோகினி ஜெயாபரன் - ஆசிரியை**

# உங்கள் பருவங்கள் தெரியுமா?

**ஆண்**

| | | |
|---|---|---|
| பாலன் | - | குழந்தைப்பருவம் - 15 வயது வரை |
| காளை | - | 16 வயது - 18 வயது வரை |
| குமாரன் | - | 19 வயது - 25 வயது வரை |
| ஆடவன் | - | 26 வயது - 40 வயது வரை |
| மூத்தோன் | - | 40 வயது - 60 வயது வரை |
| விருத்தன் | - | வயோதிபர் ( 60 வயதிற்கு மேல் ) |

**பெண்**

| | |
|---|---|
| பேதை | - 05 வயது - 07 வயது வரை |
| பெதும்பை | - 08 வயது - 11 வயது |
| மங்கை | - 12 வயது - 13 வயது |
| அரிவை | - 20 வயது - 25 வயது |
| தெரிவை | - 26 வயது - 31 வயது |
| பேரிளம் பெண் | - 32 வயது - 40 வயதிற்கு மேல் |

**யோ.அரண்ராஜ்**
பழைய மாணவன் 2013



# பாட்டி சொன்ன விடுகதைகள்

1. எட்டுக்கால் ஊன்றி இரு கால் படமெடுத்து வட்டக் குடை பிடித்து வந்தாராம் வன்னியனார். அவர் யார்?
2. கறிய கறி தின்ன, கறியுடையாள் மகள் சூ..சூ..என்றாள், கறி முறிய பாய்ந்தாம் கறி. அது என்ன?
3. ஒரு அடிக்கு அழுவாள், அடுத்தடிக்கு சிரிப்பாள். அவள் யாது?
4. பயங்கரமான ஆயுதம் என்ன ஆயுதம்?
5. துள்ளும் முயல் குட்டி செம்பட்டை வால் குட்டி, நெய் உண்டு, இரத்தம் இல்லை. அது என்ன?
6. ஒன்றொன்றாய்க் காய்த்து ஒருமித்து பழுக்கும் பழம் என்ன பழம்?
7. அண்ணன் ஆற்றிலே, தம்பி புற்றிலே, சாத்திரி வீட்டிலே அவை எவை?
8. இரவில் பார்த்தால் பூப்பெட்டி, விடியப் பார்த்தால் வெறும் பெட்டி அது என்ன?
9. பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்த பூலோகம் ஆண்ட ராசாவே பூவிலும் சிறிய இரண்டிதழ்ப் பூ என்ன பூ?
10. சொண்டு சிவந்த கிளி. தோகை வால் நீண்ட கிளி. தொங்கும் பறக்கத் தெரியாது. அது என்ன?
11. நீரோடி நிலம் பிளந்து நிலைத்து வாழ குருத்து விட்டு காரோடிய மணலிலுள்ள கருவில்லாத முட்டை என்ன முட்டை?
12. என் தாயோ கடல், தந்தையோ சூரியன், என்னை விரும்பாத வீடே இல்லை நான் யார்?



**விடைகள்**

1. நண்டு
2. ஆடு கீரை
3. தேங்காய்
4. நாக்கு
5. இறால்.
6. சட்டி, பானை
7. முதலை, பாம்பு, பல்லி
8. நட்சத்திரங்கள்
9. விடத்தல்ப் பூ
10. கிண்ணம் பழம்.
11. காளான்
12. உப்பு

**திருமதி. ஜெ.அருளப்பு** - ஆசிரியை

# இலங்கையின் ஜனாதிபதிகள்

1வது ஜனாதிபதி - வில்லியம் கோபல்லாவ (22.05.1972 - 04.02.1978)
2வது ஜனாதிபதி - ஜீனியஸ் ரிச்சட் ஜயவர்தன (04.02.1978 - 02.01.1989)
3வது ஜனாதிபதி - ரணசிங்க பிரேமதாசா (02.01.1989 - 01.05.1993)
4வது ஜனாதிபதி - டிங்கிரி பண்டா விஜயதுங்க (02.05.1993 - 12.11.1994 )
5வது ஜனாதிபதி - சந்திரிக்கா குமாரதுங்க (12.11.1994 - 19.11.2005)
6வது ஜனாதிபதி - மகிந்த ராஜபக்ஷ (19.11.2005 - 09.01.2015)
7வது ஜனாதிபதி - மைத்திரி பால சிறிசேன (09.01.2015 - இன்று வரை)

**ர.டிக்ஷன்** - பழைய மாணவன் 2014

# ஒரு மழலையின் விண்ணப்பம்

இந்த
மொட்டு மலர்களின்
உலகை - நான்கு குட்டிச்
சுவர்களுக்குள்
கட்டிப் போட்டு விடாதீர்கள் !

பட்டுச் சிறகடித்துப்
பறக்க நினைக்கும்
எங்கள் கற்பனைப் பறவையின்
இறக்கைகளை வெட்டிப் போட்டு
விடாதீர்கள் !

நாங்கள்
வெறும் காகித மலர்களல்ல
ஜீவமலர்கள்! எங்களுக்கு
இயற்கை மணமுண்டு முயன்று
எங்கள் ஜீவனை மாசுபடுத்தி
விடாதீர்கள்.

இயற்கையின்
பரிசுத்த காற்றை
எங்கள் எண்ணம் போல்
சுவாசிக்க விடுங்கள்!
மாசு படுத்தப்பட்ட
செயற்கை காற்றை
எங்கள்
சுவாசப் பைகளில் ஏற்றி
அதன் ஆரோக்கியத்தைக்
கெடுத்து விடாதீர்கள்.
நாங்கள்
திரிகையில் வைக்கப்பட்ட
மண் திரள் அல்ல
விண்ணைக்
கை நீட்டித்
தொடத் துடிக்கும்
விருட்ச வித்துக்கள்

நாங்கள் உருவாக
உங்கள்
கைபடத் தேவையில்லை
கருணை மட்டும் போதும் !

எங்களை
நாங்களாகவே
உருவாக விடுங்கள் !
உங்கள்
வலிய நினைவுகளை
எங்கள்
மெல்லிய இதயத்தில் ஏற்றி
அதனை
இரும்பாக்கி விடாதீர்கள்!

திருமதி. றஜனி சுபேந்திரகுமார்
ஆசிரியை

# கிழமைகள் உருவாகிய விதம்

கிழமைகளுக்கு பெயர் வந்த வரலாறு ஒரு சுவையான கதை. மனிதனின் வரலாறு ஆரம்பமான காலத்தில் கிழமைகளுக்கு பெயர் கிடையாது. அந்த நாட்களில் காலங்களை மாதமாகவே பிரித்திருந்தனர். ஒவ்வொரு மாதத்திலும் எத்தனையோ நாட்கள் உள்ளன. அத்தனை நாட்களுக்கும் பெயர் வைப்பது சாத்தியப்படவில்லை.

மனிதர்கள் நகரங்களை அமைத்த பிறகு வணிகம் செய்வதற்கு அதாவது சந்தை கூடி பொருட்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் தனியாக ஒரு நாள் தேவைப்பட்டது. அதற்கு அவர்கள் 10 நாட்களுக்கு ஒரு நாள் ஒதுக்கினார்கள். சில சமயங்களில் 7 நாட்களுக்கு ஒரு நாள் ஒதுக்கப்பட்டது. அதாவது 7வது நாளே அந்த நாளாக அமைந்தது.

பண்டைய காலத்து பாபிலோனியர்கள் ஒவ்வொரு 7வது நாளையும் வணிகத்திற்கும் மத விடயங்களுக்கும் ஒதுக்கினர். யூதர்கள் ஒவ்வொரு 7வது நாளையும் மத விடயங்களுக்கு மட்டுமே ஒதுக்கினர். இவ்வாறு "வாரம்" பிறந்தது. வாரம் என்பது இரு வணிகத்திற்கு இடைப்பட்ட காலமாகும். இவர்கள் ஒவ்வொரு நாட்களுக்கும் எண் பெயர்களையே வைத்தனர். ஞாயிறு முதல் நாளாகவும் சனி ஏழாவது நாளாகவும் அமைந்தன.

வாரத்திற்கு ஏழு நாட்கள் என்ற முறையே எகிப்தியர்கள் கடைப்பிடித்தனர். வாரத்திற்கு 5 நாட்களுக்கு கிரகணங்களின் பெயரைச் சூட்டினர். ரோமானியர்களும் இதையே பின்பற்றினர். சூரியனின் பெயர் ஞாயிறு, சந்திரனின் பெயர் திங்கள், "மார்ச்" அல்லது "டியூ" ரோமானியர்களின் போர்த் தெய்வமாகும். இது செவ்வாய் கிழமையாயிற்று. "மெர்க்குரி" என்பதற்கு பதிலாக மற்றோர் தெய்வத்தின் பெயர் "ஓடன்" அது புதன் கிழமையாயிற்று.

"தர்" என்பது ரோமானியர்களின் இடித்தெய்வமாகும். அந்தப் பெயர் "தர்ஸ்டே" வியாழக்கிழமையாயிற்று. ரோமானியர்களின் மற்றோர் தெய்வத்தின் மனைவியின் பெயர் "ப்ரைடே" இது வெள்ளிக் கிழமையாயிற்று. சனிக்கிரகத்தின் பெயர் சனிக்கிழமையாயிற்று.

இவ்வாறே வாரத்தின் பெயர்கள் உருவாக்கப்பட்டது. இவற்றையே நாம் இன்றுவரை பின்பற்றி வருகின்றோம்.

**திருமதி. தனுசியா ஜீவானந்தம்** - ஆசிரியை




## MOTHER

There is no one like a mother
And no mother quite likes you…
You are so very thoughtful and earring,
And I just want to thank you Mother,
For making my life brighter.

***P.Thisoniyena - Grade : 4B***

# சத்தியம் காத்த பசுவின் கதை



பசு மாடு கத்துகின்ற சத்தம் கேட்டு இடையன் ஒருவன் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்றான். அங்கே பசு ஒன்று கன்றை ஈன்றெடுப்பதற்கு கத்தியது. அதன் வலியைப் போக்க அவன் இறைவனை வேண்டினான். பசுவும் அழகிய கன்றை பெற்றெடுத்தது. அவனும் மகிழ்ந்து இரவைக் களித்தான். பசுக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர் வைத்து அழைத்து வந்தான். அப்பசுக்களில் ஒன்று தான் நாச்சியம்மை என்னும் பசு. ஒரு நாள் இடையன் பசுக்களை அருகில் உள்ள வனத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு பசுக்களை மேயவிட்டு விட்டு அவன் சென்று விட்டான்.

அந்தக் காட்டின் குகையில் வசித்து வந்த புலி ஒன்று கொடூரப் பசியுடன் அலைந்து திரிந்தது. அது மேயும் பசுக்களைக் கண்டது. உடனே பசுக்கூட்டத்தை பாய்ந்து பாய்ந்து துரத்த ஆரம்பித்தது. புலியைக் கண்ட பசுக்கள் மிரண்டு ஓடின. இந்த வேளையில் புதிதாக கன்றை ஈன்ற நாச்சியம்மையினால் வேகமாக ஓடமுடியாமல் போனது. அது ஓடும் போது தனது கூட்டத்தை விட்டுப் பிரிந்து தனது கன்றை நினைத்தபடி வேறு திசையில் ஓடியது. இதனைக் கண்ட புலியும் நாச்சியம்மையை துரத்தியது. நாச்சியம்மையும் திக்குத்திசை தெரியாமல் ஓடியது. ஓட முடியாது சுவரைக் கண்டது, அது புலியின் குகையில் மாட்டிக் கொண்டதை உணர்ந்தது. பின்னால் திரும்பியது, அங்கே "உன்னை கொன்று சாப்பிடுவேன்" என்ற வெறியுடன் துஷ்ட புலி உறுமிக் கொண்டு நிற்பதைக் கண்டு பயந்தது.

"கொஞ்சம் பொறுமையுடன் புலியே! என் கதையை கேளு, மாட்டுத் தொழுவத்தில் இருக்கின்ற என் கன்றுக்கு பாலூட்டி வந்து சேருவேன்" என்று கெஞ்சியது. "கோரப் பசியுடன் இருக்கும் நான் உன்னை எப்படி நம்புவது?" என்ற புலி கேட்டது. "சத்தியமே என் தாய் தந்தை, சத்தியமே என் சொந்தபந்தம், சத்திய வாக்கை தட்டி நடந்தால் தண்டிப்பான் பரமாத்மனே" என்று பசுவும் கூறியது. அதனை நம்பி புலியும் நாச்சியம்மை செல்வதற்கு தலையை அசைத்தது. பசுவும் தன் இருப்பிடம் சென்று நடந்த கதையை தன் கன்றிடமும் ஏனைய பசுக்களிடமும் சொல்லி அழுதது.

பின்னர் "யாரிடம் பால் கேட்பதம்மா, யாரிடம் பால் குடிப்பதம்மா?" என்று கன்று அழுது கொண்டு கேட்க, பசு சொல்ல முடியாத துன்பத்தால் அழுது, புலம்பி, பாலூட்டி, தனது கன்றை நல்லபடியாக வளர்க்க வேண்டும் என்று கூறி மீண்டும் புலியின் குகைக்குச் சென்றது. அங்கு பசு "தன்னை கொன்று தின்னும் படி" கூறியது. நாச்சியம்மையின் வார்த்தையையும் வரவைக் கண்டு அதிர்ந்த புலி, சத்திய வாக்கினைக் காத்த இவ்வன்னையை கொன்று தின்றால் சபிக்கப்படும் என் ஜென்மமே என உணர்ந்து, "சத்திய வாக்கை காத்த தாயே உன்னைக் கொன்று எதனை அடைவேன்" என்று புலி மனதை மாற்றி காட்டில் சென்று மறைந்தது. சத்தியமே பகவான் என்று எண்ணும் நாச்சியம்மை மிகுந்த சந்தோசத்துடன் தன்னிருப்பிடம் சென்று தன் கன்றுக்கு ஆசை தீர பாலூட்டி, இடையனை கத்தியழைத்து தான் பிழைத்து வந்த கதையைக் கூறியது.

**"சத்தியம் உயிர் காக்கும்"**

**சி. கியூரிகா** – தரம் 2A

நிலாவொளியில், முற்றத்தில் அமர்ந்திருந்து கதைத்துக் கொண்டிருந்த பாட்டி, தன் பேரப் பிள்ளைகளிடம் விடுகதைகளைக் கேட்டார். பேரப்பிள்ளைகளும் அந்த விடுகதைகளை விடுத்தனர். நாமும் அதை அறிவோமா?




பாட்டி :- தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?
ராஜா :- அன்னாசிப்பழம்.

பாட்டி :- நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல்லாது. அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம் அது என்ன?
மாலா :- நத்தை

பாட்டி :- சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம். அது என்ன?
ரதி :- நுளம்பு

பாட்டி :- ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது. அவை யாவை?
கமல் :- எறும்புகள்

பாட்டி :- பேசாத வரைக்கும் நான் இருப்பேன் பேசினால் நான் உடைந்து விடுவேன். நான் யார்?
மாதவி:- அமைதி

ராஜா :- பாட்டி நீங்கள் சொன்ன விடுகதைகளை நாங்கள் விடுவித்தோம். இனி எங்கள் விடுகதைகளை விடுவிப்பீர்கள் தானே.

பாட்டி :- ம்........... விடுகதைகளை சொல்லு சொல்லு .............

மாதவி:- தாறுமாறாய் சுற்றினாலும் இவனுக்கு தலை சுற்றாது. அவன் யார்?
பாட்டி :- இது புது விடுகதையாகவுள்ளதே........ மாதவி நீயே சொல்லம்மா.

மாதவி:- இந்த விடுகதையை யார் விடுவிப்பீர்கள்?
ராஜா :- எனக்குத் தெரியும். டீச்சர் சொல்லித்தந்திருக்காங்கள். அது காற்றாடி

ராஜா :- பாட்டி, இந்த விடுகதையை விடுவியுங்கள் பார்க்கலாம். கண்டது இருவர், எடுத்தது பத்துப் பேர், உண்டது ஒருவர், யார் அவர்கள்?

பாட்டி :- கண், விரல்கள், வாய்

**சு.சதுர்த்திக்கா** - தரம் 5 A

# பறவை


கா....கா.... என கரையும்
கறுப்பு வண்ணக் காகம் ஒரு பறவை
கூ.....கூ...... என கூவி
கானம் பாடும் குயிலும் ஒரு பறவை

கொக்கரக்கோ.... என கூவி
துயில் எழுப்பும் சேவலும் ஒரு பறவை
கொக்.... கொக்.... என கொக்கரித்து
முட்டையிடும் பேட்டுக் கோழியும் ஒரு
பறவை

அழகு தோகை விரித்தாடும்
ஆண் மயிலும் ஒரு பறவை
அங்குமிங்கும் இருட்டில்
அலையும் ஆக்காண்டியும் ஒரு பறவை

ஆற்றங் கரையோர ஆலமரத்தில்
அடையும் கொக்கும் ஒரு பறவை
ஆனந்தமாக நீர் விடுத்து பாலுண்ணும்
அன்னமும் ஒரு பறவை தான்

எத்தனை விதமான பறவைகள்
இவ்வுலகில்
எவ்வளவு நல்ல பண்பை சொல்லும்
அத்தனையையும் தெரிந்து கொள்
அகத்தினை மாற்றக் கற்றுக் கொள்



**சி.கிசோபாலன்** - தரம் 5A



# மாணவர் மாண்பு

அன்புடன் நானும் வளர்ந்திடுவேன்
அன்னை தந்தையைப் போற்றிடுவேன்
அறங்கள் செய்து வாழ்ந்திடுவேன்
அனைவரும் போற்ற வாழ்ந்திடுவேன்

ஆசான் சொல்லைக் கேட்டிடுவேன்
அகிலம் போற்ற வாழ்ந்திடுவேன்
ஆலயம் சென்று வணங்கிடுவேன்
ஆண்டவன் அருளும் பெற்றிடுவேன்

கற்பதைக் கசடறக் கற்றிடுவேன்
கற்றபடி நானும் வாழ்ந்திடுவேன்
இன்சொல் கேட்டு மகிழ்ந்திடுவேன்
இன்னல் கலைந்து வாழ்ந்திடுவேன்

இல்லாதோருக்கு இரங்கிடுவேன்
இன்பமுடன் வாழ்ந்திடுவேன்
உண்மை பேசி வாழ்ந்திடுவேன்
உத்தமனாய் உலகில் வாழ்ந்திடுவேன்

**ஜெ.கர்ஜிதன்**
பழைய மாணவன் 2015


# வருட நிறைவு விழாக்கள்

| | |
|---|---|
| ★ முதல் வருட நிறைவு விழா | - காகித விழா |
| ★ இரண்டு வருட நிறைவு விழா | - பருத்தி விழா |
| ★ மூன்று வருட நிறைவு விழா | - தோல் விழா |
| ★ நான்கு வருட நிறைவு விழா | - மலர் மற்றும் பழ விழா |
| ★ ஐந்து வருட நிறைவு விழா | - மர விழா |
| ★ ஆறு வருட நிறைவு விழா | - சக்கரை இரும்பு விழா |
| ★ ஏழு வருட நிறைவு விழா | - செம்பு விழா |
| ★ எட்டு வருட நிறைவு விழா | - வெண்கல விழா |
| ★ ஒன்பது வருட நிறைவு விழா | - மண்கல விழா |
| ★ பத்து வருட நிறைவு விழா | - தகரம் / அலுமினிய விழா |
| ★ பதினொரு வருட நிறைவு விழா | - உருக்கு விழா |
| ★ பன்னிரண்டு வருட நிறைவு விழா | - லினன் விழா |
| ★ பதின்மூன்று வருட நிறைவு விழா | - பின்னல் விழா |
| ★ பதின்நான்கு வருட நிறைவு விழா | - தந்த விழா |
| ★ பதினைந்து வருட நிறைவு விழா | - பளிங்கு விழா |
| ★ இருபது வருட நிறைவு விழா | - பீங்கான் விழா |
| ★ இருபத்தைந்து வருட நிறைவு விழா | - வெள்ளி விழா |
| ★ முப்பது வருட நிறைவு விழா | - முத்து விழா |
| ★ நாற்பது வருட நிறைவு விழா | - மாணிக்க விழா |
| ★ ஐம்பது வருட நிறைவு விழா | - பொன் விழா |
| ★ அறுபது வருட நிறைவு விழா | - வைர விழா / மணி விழா |
| ★ எழுபத்தைந்து வருட நிறைவு விழா | - பவள விழா |
| ★ எண்பது வருட நிறைவு விழா | - அமுத விழா |
| ★ நூறு வருட நிறைவு விழா | - நூற்றாண்டு விழா |
| ★ ஆயிரம் வருட நிறைவு விழா | - மிலேனியம் விழா |

**சு.கிதுர்ஷன்**
பழைய மாணவன் 2013

# ஒருவரை ஒருவர் ஏளனம் செய்ய கூடாது

புலி ஒன்று தனது நண்பர்களுடன் உலாவிக் கொண்டிருந்தது.



அப்போது அங்கு ஒரு யானை வந்தது. அது மிகவும் சோகமாக சோர்ந்து வந்தது. இதனைக் கண்ட புலிகள் யானையை பார்த்து ஏளனம் செய்தன. யானை கோபமுற்றது. புலி ஒன்று யானையைப் பார்த்து "என்ன கோபம் வருகின்றதா?" என கேட்டது.

"நாங்கள் உண்மையைத்தானே கூறினோம். நீ சோர்ந்து வருகை தந்ததனால் தான் நாங்கள் உன்னை கேலி செய்தோம்" என்றது. அதனை கேட்ட யானை நான் ஒன்றும் சோர்வடையவில்லை என்றது. அவ்வாறு சோர்வடையவில்லை என்றால் எங்களோடு ஒரு ஓட்டப்போட்டியில் ஓடி முதலிடத்தை பெறவேண்டும் என்றது புலி. யானையும் தன்னோடு விளையாட நண்பர்கள் கிடைத்துவிட்டார்கள் என மகிழ்சியடைந்தது. அதன் பின் அந்த யானை தனக்கும் விளையாட்டுப் போட்டியில் சேரவேண்டும் என ஒரு ஆசை இருந்ததாகவும் தான் அவ் ஓட்டப்போட்டியில் கலந்து முதலிடம் பெறுவதாகவும் கூறியது. அதனைக் கேட்ட புலிகள் சிரித்தன. அவ்வாறே போட்டியும் ஆரம்பமாகியது. புலிக்கூட்டத்தின் ஒரு புலி போட்டியை தொடக்கி வைத்தது.

புலிகள் அனைத்தும் விரைவாக விரைந்தோடிச் சென்றன. ஆனால் யானையோ ஆறுதலாக அமைதியாக ஓடிவந்து கொண்டிருந்தது. இதனால் புலிகள் அனைத்தும் முடிவிடத்தை அடைய சற்று முன்னால் உள்ள ஓர் இடத்தில் மரம் ஒன்றின் கீழ் களைப்பாறினர். அதன் பின் ஒரு புலி கூறியது அந்த பெரிய யானை வருமுன் நாம் ஆற்றிற்கு சென்று நீர் அருந்தி விட்டு வரலாம் என்றது. இதனை ஏனைய புலிகளும் ஏற்று நீர் அருந்தச் சென்றன. அந்த வேளையில் யானை மெதுமெதுவாக ஓடி முடிவிடத்தை அடைந்து வெற்றி பெற்றது. யானையின் வெற்றிக்கு காரணம் அதனை "ஏளனம் செய்தமை"என்பதை புலிகள் உணர்ந்தன.

*மாணவர்களாகிய நாமும் பிறரை ஏளனம் செய்யாது கல்விப் பாதையில் செல்லும் போது களைப்படையாது வெற்றி இலக்கை அடைவோம்.*

**கா.பர்மிகா** - தரம் 2A

# அறிந்து கொள்ளுங்கள்

1. ஓரறிவு - புல், மரம்
2. ஈரறிவு - சங்கு, சிப்பி
3. மூன்றறிவு - கறையான், எறும்பு
4. நான்கறிவு - தும்பி, வண்டு
5. ஐந்தறிவு - மிருகங்கள்
6. ஆறறிவு - மனிதன்

**பி.சனுசிகா** - தரம் 4 A




- ஆசியாவில் மிகச் சிறிய நாடு – சிங்கப்பூர்
- ஆஸ்கார் விருது வழங்கும் நாடு – அமெரிக்கா
- கடல் பிராணி ஆக்டோபஸின் இரத்தம் – நீல நிறம்
- குளிர்சாதன பெட்டியில் பயன்படுத்தப்படும் வாயு – அமோனியா
- இங்கிலிஸ் கால்வாயைக் கடந்த முதல் பெண் – ஆர்த்தி சாஹா
- திரவ வடிவில் இருக்கும் உலோகம் – பாதரசம்
- பழைய ஏற்பாடு எந்த மொழியில் உள்ளது – ஹீப்ரு (எபிரேயம்)
- ஆங்கில அகராதியை முதல் முதலில் தயாரித்தவர் – ஜான் ஆடம்ஸ்
- குழந்தை பிறந்தவுடன் போடப்படும் ஊசி – பி.சி.ஜி
- நீர் அருந்தாத ஜீவராசி – பல்லி
- பறவைகளில் அதிக நாட்கள் உயிர் வாழ்பவை – கிளி
- ஐந்து கண்கள் உடைய பூச்சி – வெட்டுக்கிளி
- கரு உருவாகும் போது முதலில் தோன்றும் உறுப்பு – இருதயம்
- அதிக மொழி பேசப்படும் நாடு – இந்தியா

**ந.அபிநயா** - தரம் 5A

# ஔவையாரின் நீதி நூல்கள்



தன்னிகரில்லாப் புகழ் கொண்ட புலவர் வரிசையிலே தண்ணிலவாய் ஒளிவீசிய தமிழ் மூதாட்டி ஔவையார் என்றுமே மறக்க முடியாத மாண்புமிகு பெண்பாற் புலவராவார். ஔவையார் கவிச்சக்கரவர்த்தி கம்பன் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தார். நாட்டை ஆண்ட மன்னர்களோடு மட்டுமன்றி சாதாரண ஏழை உழைப்பாளிகளுடனும் குறிப்பாக குழந்தை சிறார்களுடனும் சேர்ந்து பழகி எளிமையான வாழ்வு வாழ்ந்தார். தமது வாழ்வில் நீதியையும் நியாயத்தையும் நிறைவாக கடைப்பிடித்தவர். தான் வாழும் சமூகத்தாரும் நல்ல ஒழுக்கம் மிக்கவர்களாக ஒழுக்க விழுமியங்களுடன் வாழவேண்டும் என்பதற்காக நல்ல பல நீதி நூல்களை ஆக்கி அருளியுள்ளார். அவற்றிலே ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பன என்றுமே தமிழர் தம் நெஞ்சில் இடம் பெற்று கற்றார், கல்லாதார் என்ற பேதமின்றி அனைவரும் போற்றும் அரும்தமிழ் பொக்கிசங்களாகத் திகழ்கின்றன.

ஆத்திசூடியானது "அறம்செய விரும்பு" எனத் தொடங்கி "அஃகம் சுருக்கேல்" வரை அகர வரிசைப்படியும் "க" முதல் "ன" வரை உயிர்மெய் எழுத்து வரிசைகளிலும் சுமார் 109 ஓரடி வாசகங்களால் இது ஆக்கப்பட்டுள்ளது. இரத்தினச் சுருக்கமாக நீதிக்கருத்துக்களை நேரடியாகக் கூறும் பாங்கு, எவர் மனதிலும் இலகுவாகப் பதிந்துவிட ஏதுவானது. இதன் பெருமையை புதுமைக் கவிஞன் பாரதி கூட புதிய ஆத்திசூடி எனும் படைப்பை ஆக்கித்தந்துள்ளார்.

ஔவையாரின் கொன்றை வேந்தனை நோக்குமிடத்து இதுவும் ஓரடி வசனங்களான 91 சிறு சொற்றொடர்களாக இயற்றப்பட்டுள்ளது. அவ்வாறே மூதுரையானது 30 பாடல்களையுடையது. வெண்பா யாப்பில் விளங்கும் இப்பாடல்கள் ஒவ்வொன்றும் முத்துப் போல் ஒவ்வொரு நீதிகருத்துக்களை உவமானங்களால் எடுத்துக் கூறுகின்றன.

"நல்வழி" என்பது ஔவையார் எழுதிய இன்னுமொரு நீதிநூலாகும். இதிலும் 40 செய்யுள்கள் உள்ளன. இவையும் வெண்பா யாப்பில் அமைந்து நல்ல பல நீதிக்கருத்துக்களை இயம்புகின்றன. "சாதிகளிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதி வழுவா நெறி முறையின் - மேதினிலே இட்டார், பெரியோர், இடாதோர், இழிகுலத்தோர் பட்டங்கில் உள்ளபடி" எனக் கூறுவதன் மூலம் பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். நாமும் ஔவையார் கூறிய நல்லொழுக்கங்களை பின்பற்றி வாழ கற்றுக் கொண்டால் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

**திருமதி. பவானி சின்னத்தம்பி** - ஆசிரியை

# மனிதன் மனிதனாக வாழ 18 அம்சங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மிகவும் மதிக்க வேண்டியது | - | தாய் தந்தை |
| 2. | மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| 3. | மிக பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 4. | மிகவும் வேண்டியது | - | பணிவு |
| 5. | மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 6. | மிகப் பெரிய தேவை | - | நம்பிக்கை |
| 7. | மிகப் பெரிய நோய் | - | பேராசை |
| 8. | மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| 9. | கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| 10. | நம்பக்கூடாதது | - | வதந்தி |
| 11. | ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 12. | செய்யக்கூடியது | - | உதவி |
| 13. | விலக்க வேண்டியது | - | சோம்பேறித்தனம் |
| 14. | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 15. | நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |
| 16. | பிரியக்கூடாதது | - | நட்பு |
| 17. | மறக்கக்கூடாதது | - | நன்றி |
| 18. | செய்யக்கூடாதது | - | நம்பிக்கை துரோகம் |

**அ.அக்ஷதன்** - தரம் 3A




- ☆ See your goal
- ☆ Understand the obstacles
- ☆ Create a positive mental picture
- ☆ Clear your mind of self doubt
- ☆ Embrace the challenge
- ☆ Stay on track
- ☆ Show the world you can do it.

S.Tharaniya - Grade 5C

# புதிர்கள்

1. ஐந்து மாவிலை, ஐந்து பலா இலை, மூன்று கொய்யா இலை இவற்றைக் கூட்டினால் என்ன வரும்?
2. அமெரிக்காவில் பிறந்த குழந்தைக்கு பல் எந்த நிறத்தில் இருக்கும்?
3. பொங்கலுக்கு ஏன் மாவிலை கட்டுகின்றோம்?
4. கொக்கு ஏன் ஒற்றைக்காலில் நிற்கின்றது?
5. தேனீர் கப்புக்கு எந்தப்பக்கம் கைபடி உள்ளது?
6. பூனை ஒன்றிற்கு முன்னால் ஒரு சட்டியில் பாலும் இன்னுமொரு சட்டியில் மீனும் உள்ளது. அந்த பூனையின் கண் எதில் இருக்கும்?
7. ஒரு மதிலில் சேவல் ஒன்று நிற்கின்றது அது முட்டையிட்டால் எந்தப்பக்கம் விழும்?

**விடைகள்**

1. குப்பை வரும்.
2. பிறக்கும் பிள்ளைக்கு பல் இருக்காது.
3. மாவிலை கட்டவில்லையென்றால் விழுந்து விடும்.
4. கொக்கு மற்றக் காலையும் எடுத்தால் விழுந்துவிடும்.
5. வெளிப்பக்கம்.
6. பூனையின் தலையில்.
7. சேவல் முட்டையிடாது.



**மோ.தஸனிகா** - தரம் 2A

# ஆரோக்கிய வாழ்விற்கான சில தகவல்கள்

☞ சூரிய உதயத்திற்கு முன்னால் எழுந்திருப்பது சிறந்தது. ஏனென்றால் அப்பழக்கம் சுகத்தையும், செல்வத்தையும், மெய்யறிவையும் தரவல்லது.

☞ சாப்பிட்டவுடன் உட்கார்ந்திருப்பவனுக்கு சோம்பல் வருகின்றது. சாப்பிட்டவுடன் நித்திரை கொள்பவனுக்கு உடல் பருக்கின்றது. உண்ட பின் உலாவும் மனிதனுக்கு ஆயுள் நீடிக்கின்றது.

☞ தியானம் செய்வது மன அமைதியை கொடுப்பது மட்டுமல்ல இரத்த அழுத்தத்தையும் குறைக்கின்றது. ஜீரணத்தையும் சரி செய்கின்றது. தினமும் அரைமணி நேரம் தியானம் செய்வது ஆயுளை நீடிக்கச் செய்கின்றது.

☞ எங்கே அழுக்குண்டே அங்கே அபாயமும் உண்டு.


☞ ஒரு மனிதனின் வயிறு பசித்திருப்பதால் அவனது சிந்தனை வலுவடைகின்றது. உள்ளமும் வாய்மையும் கூர்மையடைகின்றது.

☞ மனதில் ஒன்றை புதைத்து வைத்தால் அது நஞ்சு. மனம் திறந்து பேசி அதை ஏற்றுக்கொண்டால் அதுவே மருந்தாகின்றது.

அ.ருதுஷன் - தரம் 5B

# கடலை மா லட்டு

### தேவையான பொருட்கள்




| | | |
|---|---|---|
| கடலைமா | – | 1 சுண்டு |
| அப்பச்சோடா | – | 1 தே.கரண்டி |
| சீனி | – | 250 g |
| நெய் | – | 100g |
| தண்ணீர் | – | 2 கப் |
| கற்கண்டுத்தூள் | – | 2 மே.கரண்டி |
| முந்திரிப் பருப்பு | – | 25g |
| முந்திரி வற்றல் | – | 25g |
| ஏலப் பொடி | – | 2 தே.கரண்டி |
| உப்பு | | தேவைக்கேற்ப |
| தே. எண்ணை | – | 500ml |

### செய்முறை

- மாவுடன் அப்பச்சோடா கேசரிப் பவுடர் உப்பு சேர்த்து தண்ணீர் விட்டு கரைத்து அரை மணி நேரம் வைக்க வேண்டும்.
- நன்றாக கொதித்த எண்ணையின் மேல் துவாரமுள்ள கரண்டியைப் பிடித்து அதன் மேல் மாவை வார்த்துக் கொள்ளவும்.
- பூந்தி ஒரளவு பொரிந்ததும் எடுத்து எண்ணையை வடிய விடவும்.
- பின் உரலிலிட்டு மெதுவாக இடித்து சீனியை இடையிடையே சேர்த்து இடித்து எடுத்துக் கொண்டு கற்கண்டு, நெய்யில் பொரித்த முந்திரிப் பருப்பு, வற்றல் வாசனைப் பொருட்களையும் சேர்க்கவும்.
- நெய்யைச் சூடாக்கி சிறிது சிறிதாக விட்டுக் கலந்து சூட்டுடன் உருண்டையாகப் பிடித்துக் கொள்ளவும்.
- தட்டில் லட்டு தயார் உண்டு மகிழலாமே!

**திருமதி.லோகினி ஜெயாபரன்** - ஆசிரியை



# கீதாசாரம்



- சோம்பலும் செயலிழந்த நிலையும் கோழைகளுக்கே உரியது. அவை உனக்கு வேண்டாம்.
- பலவீனங்களைத் தூக்கியெறிந்து வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆயத்தமாகு.
- துக்கங்கள் ஏற்படுவது விதியென்று கருதி அடிபணிகிறவன் பாவம் செய்கிறான்.
- எதிர்ப்பை கண்டு அடி பணியாதே. போராடக் கற்றுக்கொள்.
- ஓடி ஒளிந்து கொள்வது பிரச்சினைக்கு தீர்வு ஆகாது. எது வந்தாலும் முனைப்போடு எதிர்கொள்.
- உலகத்தை தலைகீழாக மாற்றக்கூடிய சக்தி உனக்கு உண்டு. அதை வெளியே கொண்டுவா.
- இந்த தர்ம யுத்தத்தை விட மேன்மை தரக்கூடியது வேறு எதுவும் இல்லை. இதில் உயிரை விட நேர்ந்தாலும் உயர்வேதான்.
- தர்ம யுத்தத்தில் இறக்கக் கூடியவனுக்கு உலகில் எல்லாம் கிடைக்கும்.
- கடமையிலிருந்து நழுவுகின்றவன் அனைத்தையும் இழக்கிறான்.
- செயலில் இறக்க ஆயத்தமில்லாத தனிமனிதனும், சமுதாயமும் ஆபத்தை வரவழைத்துக் கொள்கின்றன.
- எனவே எழுந்து நில் எதிரிகளைத் தோற்கடித்து வளமான இராஜயோகத்தை அனுபவி.அழிவில்லாத வெற்றியை அடைவாய்.

**த.திலக்சன்** - தரம் 2A

# நகைச்சுவைக் கதை

ஓர் ஊரில் வைத்தியர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் அவரைச் சந்திக்க ஒருவர் வந்தார். வந்திருந்தவர் வைத்தியரிடம் "டொக்டர் நான் எந்த நேரமும் கவலையுடன் இருக்கின்றேன். எனது மனதில் எவ்வித மகிழ்ச்சியும் இல்லை இதனைத் தீர்ப்பதற்கு வழி ஒன்று சொல்லுங்கள்" என கேட்டார். இதற்கு வைத்தியர் "இவ் ஊருக்கு கோமாளி ஒருவர் வந்துள்ளார். அவரது கோமாளித்தனத்தைக் கண்டு சிரிக்காதவர் எவருமில்லை. எனவே நீங்கள் ஒரு நாள் சென்று அக்கோமாளியின் நடிப்பை ரசியுங்கள் அப்போது உங்கள் கவலை தீர்ந்து நீங்கள் புதிய மனிதராக முடியும்" என்று வைத்தியர் கூறினார். அந்த கோமாளியின் நடிப்பை எல்லோரும் பார்த்து மகிழ்ச்சி அடையலாம். ஆனால் அந்த அதிஷ்டம் எனக்கு இல்லை. அதற்கு காரணம் அந்த கோமாளியே நான்தான் என கூறினார்.

**ர.துர்ஷா** - தரம் 5B

# மூலிகைகள் சிறந்த வீட்டு வைத்தியர்கள்

வீட்டில் தாமாக வளர்கின்ற, நாம் நட்டு வளர்க்கின்ற சில செடிகளும், மரங்களும் நம் வீட்டு வைத்தியர்களாக செயற்படுகின்றன. இயற்கையாக வீட்டில் வளர்கின்ற துளசி, அறுகம்புல், வேம்பு, குப்பைமேனி, முடக்கொத்தான், எருக்கலை, கீழ்காய் நெல்லி, தொட்டாச்சுருங்கி என்பனவும் நாம் வளர்க்கின்ற வல்லாரை, கற்பூரவள்ளி, இஞ்சி, கற்றாளை, வசம்பு, மாம்பாஞ்சான், அகத்தி, முருங்கை, கொடித்தோடை என்பன சிலவாகும்.

- ☆ கற்பூரவள்ளி :- குழந்தைகளிற்கு சளி ஏற்படும் போது இதன் இலைகளை சாறாக்கி கற்கண்டு சேர்த்து கொடுக்கலாம்.
- ☆ இஞ்சி:- உணவு சமிபாடு அடையாத நிலையில் இதன் சாற்றை தேனுடன் கொடுக்க வேண்டும்.
- ☆ எலுமிச்சை:- தண்ணீர் தாகம் தீர இச்சாற்றுடன் சீனி சேர்த்து சிறிது சிறிதாக அருந்த வேண்டும்.
- ☆ கடுகு:- இதனை உணவில் சேர்க்கும் போது உணவு ஜீரணமாகும்.
- ☆ முருங்கை :- இதன் இலையை சுண்டல் செய்து உண்டால் குருதிச்சோகை நீங்கும்.
- ☆ துளசி:-இதன் சாற்றை சளி உள்ளபோது அருந்தினால் சளி குணமாகும்.
- ☆ தூதுவளை:- இதன் இலையை சம்பல் செய்து சாப்பிட்டால் இருமல் குறையும்.
- ☆ செம்பருத்தி:- இதன் பூவின் இதழ்களை தேங்காய் எண்ணெயில் சேர்த்து சுண்டி காய்ச்சி தலையில் தடவி வர மயிர் கறுத்து செழுமையாக வளரும்.
- ☆ வல்லாரை :- இதன் இலைகளை உண்பதால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.
- ☆ வேம்பு :- இதன் இலைகளுடன் மஞ்சள் தேசிப்புளி சேர்த்து அரைத்து தோல் நோய்களுக்குப் பூசலாம்.

கி.லஷானி - தரம் 2B

# பாடசாலையின் முதல் நாள்

சிட்டுக்குருவி போல் சிறகடித்து - வீட்டில்
சுற்றித் திரிந்த நாள் விடுத்து
சிலந்தி வலையில் இருந்த - பூச்சி
சிக்கிய தன் வாழ்வை - எண்ணி
விடுபட முயன்று அழுதது போல்
முதல் நாள் கால்களை வைத்தேன் - அங்கு
அறிவுரை சொல்லும் அதிபருடன்
அன்பைத் தந்த ஆசிரிய அன்னைகள்
தோள் கொடுத்துதவிய தோழர்கள் - கண்டு
பறந்து திரிகின்றேன் பட்டாம் பூச்சியாய் - இன்று



பா.அவிலக்ஷா - தரம் 1A



# அதிக சுதந்திரம் ஆபத்தில் முடிந்தது


ரமேஸ் மிகவும் ஒழுக்கமான பையன். மிகுந்த அறிவாளி! புத்திசாலி மற்றவர்களது மனம் புண்படாது நடப்பவன். அது மட்டுமின்றி பாடசாலையிலும் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றுவான். வெற்றி தோல்வியைச் சமமாக கருதி எல்லோரிடமும் நன்றாக பழகக் கூடியவன். இதனால் அவனது பெற்றோர் அவனை நினைத்து மிகப் பெருமையடைந்தார்கள் அது மட்டுமன்றி அவனது பாடசாலையிலும் அவன் சாதாரண தரப்பரீட்சை எழுத இருந்ததால் எல்லோரும் அவனது பெறுபேற்றை பெரிதும் எதிர்பார்த்தனர்.

எல்லோரும் எதிர்பார்த்தது போலவே அவன் ஒன்பது பாடத்திலும் விசேட சித்தி பெற்றான். சந்தோசம் தாங்கமுடியாத பெற்றோர் அவன் எதைக்கேட்டாலும் வாங்கிக் கொடுத்தனர். அவனும் தன் நண்பர்களின் பேச்சைக் கேட்டு விலையுயர்ந்த கையடக்கத் தொலைபேசியும் மற்றும் மடிக்கணினி போன்றவற்றை வாங்கினான். அது மட்டுமன்றி அவன் சாதாரண தரப் பரீட்சையில் பெற்ற பெறுபேற்றை அடிப்படையாக வைத்து அவனது பெற்றோர் அவனுக்கு முழு சுதந்திரம் அளித்தனர். அதை பயன்படுத்திக் கொண்ட ரமேஸ் எப்போதும் தொலைபேசியிலும் மடிக்கணினியிலும் வேலையாகவே இருந்தான். அவன் பெற்றோர் கேட்டால் நான் கணினி மூலம் படிக்கின்றேன். கல்வி விடயமாகவே நண்பர்களுடன் பேசுகின்றேன் என கூறிக்கொண்டு படிப்பை கவனத்திலெடுக்காது தன் உயர்தரப் படிப்பை தொடர்ந்தான்.

இவ்வாறு காலம் காற்றாய் பறந்தது. ரமேஸ் உயர்தரப் பரீட்சை எழுதினான் அவனால் பரீட்சையில் முகங் கொடுக்க முடியாத மனநிலை இறுதியில் ரமேஸ் உயர்தரப்பரீட்சை எழுதிய பின் அவனது பெறுபேறு மிகக் குறைவாக வந்ததுடன் அவனது வாழ்க்கையே கேள்விக் குறியாகிப்போனது.

**திருமதி. ஜெமினேஸ்வரி அருளப்பு - ஆசிரியை**

# Seasons



*Spring is a time*
*When children play,*
*Flower bloom*
*And all is gay.*
*Summer is hot,*
*To stay cool,*
*Everyone wants a dip*
*In the pool.*
*Monsoon clouds*
*Filled with rain,*
*Make you feel,*
*Cool again*
*Autumn is short*
*And the leaves begin to fall,*
*Playing in the open*
*Is fun for all?*
*Winter is cold.*
*On sunny days*
*People bask*
*In the sun's rays.*

*J.Akshayini*
*Grade 4B*

# அறிந்து கொண்டதை பகிர்ந்து கொள்வோம் உறவுகள் மேம்பட..

☐ நானே பெரியவன், நானே சிறந்தவன், என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

☐ அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose talk) .

☐ எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள் (Diplomancy) விட்டுக் கொடுங்கள். (Compromise)

☐ சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Tolerance)

☐ எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

☐ உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexbility )

☐ மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)

☐ புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

☐ பிரச்சனை ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

**திருமதி.க.வசந்தகுமார்**
ஆசிரியை

# ஆசிரியர் தினம்



“எழுத்தறிவித்தவன் இறைவன்” என்பது முதுமொழி எமக்கு கல்வியை புகட்டி நல்வழியில் நின்று ஒழுகச் செய்பவர் ஆசிரியரே. மாதா, பிதா, குரு, தெய்வம் என தாய்க்கும் தந்தைக்கும் அடுத்தபடியாக விளங்குபவர் ஆசிரியரே. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை மாணவர்களை ஒழுங்கான வழியில் இட்டுச் சென்று நல்லொழுக்கங்களை கற்பித்து மாணவர்களை சமுதாயத்தில் சிறந்தவர்களாக மாற்றுவதும் ஆசிரியரே. தன் நலம் கருதாது இராப்பகலாய் பாடுபட்டு உழைப்பவர் ஆசிரியர் என்றால் மிகையாகாது.

ஒருவன் வைத்தியனாகவும், பொறியியலாளனாகவும் இருக்கிறான் என்றால் அதற்கு வித்திட்டவர் ஆசிரியரே இன்றி வேறொருவருமில்லை. ஒரு குழந்தையை பெற்றெடுப்பதில் எவ்வளவுக்கு அன்னையவளின் பங்கு இருக்கின்றதோ அதை விட அக்குழந்தையை நல்லவனாக்குவதிலும் சமுதாயத்தில் அவனை உயர்ந்த நிலையில் இட்டுச் செல்வதிலும் ஆசிரியரின் பங்கு பல மடங்காகின்றது. கடமை உணர்வோடு செயற்படும் ஆசிரியர்கள் மகத்தானவர்கள். போற்றப்பட வேண்டியவர்கள்.

எனவே நாம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 6ம் திகதியில் ஆசிரியர்களை கௌரவிப்போம்.

க. ஜனாக்ஷனன் - தரம் 4c






## AATHICHUDI WITH ENGLISH MEANING

| | |
|---|---|
| அறம் செய விரும்பு | *Have desire to do good deeds* |
| ஆறுவது சினம் | *Anger should be reduced / controlled* |
| இயல்வது கரவேல் | *Help to your best possible extent* |
| ஈவது விலக்கேல் | *Don't stop doing charity* |
| உடையது விளம்பேல் | *Do not boast about your possession* |
| ஊக்கமது கைவிடேல் | *Do not give up hope/self-confidence* |
| எண் எழுத்து இகழேல் | *Do not underestimate the power oflearning* |
| ஏற்பது இகழ்ச்சி | *To accept alms is a shameful act* |
| ஐயமிட்டு உண் | *Before eating share food with those Whoneed* |
| ஒப்புரவு ஒழுகு | *Act with high moral standards* |
| ஓதுவது ஒழியேல் | *Never stop learning* |
| ஔவியம் பேசேல் | *Never envy/ talk bad about others* |

கி. கிஷி ஜெகியேல் - தரம் 3*A*

## அவசர தொலைபேசி இலக்கங்கள்




- அரசாங்க தகவல் திணைக்களம் - 1919
- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலக்கம் - 1929
- சந்தேகத்திற்கிடமான பொருளொன்று பற்றி அறிவிக்க வேண்டிய இலக்கம் - 119
- மின்சாரத் துண்டிப்பு தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலக்கம் - 1987 & 1910
- சட்டவிரோத மின் பாவனை தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலக்கம் -1901
- தீயணைப்பு தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலக்கம் - 110
- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை - 1984
- சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலக்கம் - 1991, 011888999
- தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இலக்கம் - 1939
- மகளிருக்கு எதிரான வன்முறை பற்றி அறிவிக்க வேண்டிய இலக்கம் - 1938
- அதிவேக வீதியில் விபத்து எற்பட்டால் அறிவிக்க வேண்டியஇலக்கம் - 1969
- தரமற்ற பொருள் தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலக்கம் - 1977
- பரீட்சை தொடர்பாக தகவல் பெறவும் முறைப்பாடுகள் செய்யவும் தொடர்பு கொள்ள வேண்டிய எண் 1911

த.ஆ.பவிலக்ஷனா - தரம் 3*A*


# பலூன்கள்

வண்ண வண்ண பலூன்கள்
வடிவான பலூன்கள்
கடையில் உள்ள பலூன்கள்
கண்ணைக் கவரும் பலூன்கள்

அப்பா வாங்கிய பலூன்கள்
அழகான பலூன்கள்
சிறுவர் வாங்கும் பலூன்கள்
சின்ன சின்ன பலூன்கள்

காற்றடைத்தபலூன்கள்
எங்கள் கையில் பலூன்கள்
ஐந்துரூபாய் பலூன்கள்
அசத்தலான பலூன்கள்

**ச.பிறையாழினி** – தரம் 4B



# பசு


பச்சைப் புல்லை மேய்ந்து வரும்
படுத்திருந்து அசை போடும்
பாலை நிறையப் பொழிந்து தரும்
பசுவை நன்றாய் வளர்த்திடுவோம்.

நாலு காலில் சிலம்போடு
கழுத்தில் ஒலிக்கும் மணியோடு
தாவிப்பாய்ந்து ஓடிவரும்
பசுவை நன்றாய் வளர்த்திடுவோம்.

நெற்றியிலே சுட்டி ஒன்று
நேரான கொம்பிரண்டுடன்
எட்டி நடை போட்டு வரும்
பசுவை நன்றாய் வளர்த்திடுவோம்.

வீட்டினிலே பாலுடனே
வெண்ணெய் தயிர் மோருடனே
நாட்டமுடன் அருந்திடுவோம்
நலமாக வாழ்ந்திடுவோம்.

**ர.சனுசிகன் – தரம் 1B**



# சிந்திப்போம் சீர்திருந்துவோம்

இந்த பூமியிலே மனிதர்களை விட ஆற்றல்களிலும் அறிவிலும் குறைந்த பல பிராணிகள் காணப்படுகின்றன. அவற்றில் சில பிராணிகள் ஞானமாகவும் மனிதனுக்கே முன்மாதிரியாகவும் வாழ்கின்றன. என்பதை கீழ் வரும் நீதி மொழிகள் மூலம் நாம் அறிய முடிகின்றது. "பூமியில் சிறியவைகளாக இருந்தும் மகா ஞானமுள்ளவைகள் நான்கு உண்டு" அவையாவன.

- அற்பமான ஐந்துவாகயிருந்தும் கோடைகாலத்தில் தங்கள் ஆகாரத்தைச் சேமிக்கின்ற எறும்பும்.
- சத்துவமற்ற (சிறிய) ஐந்துவாயிருந்தும் தங்கள் வீட்டைக் கல் மலையிலே தோண்டி வைக்கும் குழிமுயல்களும்.
- ராஜா இல்லாதிருந்தும் பஞ்சு பஞ்சாய் புறப்படுகின்ற வெட்டுக்கிளிகளும்.
- தன்கைகளினாலே வலையைப் பின்னி அரசர் அரண்மனையில் இருக்கும் சிலந்திப் பூச்சியுமே.

பார்த்தீர்களா? மாரிகாலத்தில் தங்களுக்கு தேவைப்படும் உணவை கோடை காலத்திலே சேர்த்து அதனை சேமித்து வைக்கும் எறும்பு தனது சுறுசுறுப்பையும், சேமிப்புப் பழக்கத்தையும், முன்னாயத்த யோசனையையும் எமக்கு எடுத்துக் காட்டுகிறது. நம்மில் எத்தனை பேர் இப்படியான ஞானத்துடன் செயல்படுகின்றோம்.சிந்திப்போம் சீர்திருந்துவோம்

**தே.டிலுக்ஷிக்கா** - தரம் 3B




# படிப்பது எப்படி

- தூங்கி எழுந்ததும் புத்துணர்வு கிடைக்கும் அந்த அதிகாலை வேளையில் படித்தால் மனதில் நன்கு பதியும்.
- புரியாமல் மனப்பாடம் செய்தால் மறந்து போய் விடும். அதனால் பாடத்தை நன்கு புரிந்து கொண்டு படித்தால் எவ்வளவு காலம் ஆனாலும் மறக்காது.
- ஆங்கிலம், கணிதம், அறிவியல், சூத்திரங்கள், செய்யுள் பகுதிகளை படித்த பின் உடனே எழுதிப் பார்க்க வேண்டும். எழுதியவற்றை புத்தகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.
- மனதுக்குள் படிப்பதோ வாய்விட்டுப் படிப்பதோ உங்கள் பழக்கத்தைப் பின்னற்றுங்கள்.
- கடினமான பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படிக்க வேண்டும். ஆனால் அதில் மட்டும் கவனம் செலுத்தி சுலபமானவற்றை மறந்துவிட வேண்டாம்.

**ச.டியோனா** - தரம் 4A

## அம்மா

உயிரினங்களின் உத்தம பீடம்
அன்புக்கூடங்களின் சிகரம்
ஆறுதல் என்பதில் அத்திவாரம்
நீதி வகுப்பதில் நடுமதி
தீயதை தவிர்ப்பதில் அன்னம்
குடும்பத்தை காப்பதில் செங்கோல்
குழப்பத்தை தீர்ப்பதில் ஆலோசகர்
பழக்கவழக்கத்தில் பத்திரம்
வாழும் காலத்தில் தண்மதி
உதிரத்தை பாலாக்கி உணவாய்
தந்தவள்
துயிலை எமக்கு அரணாய்
அமைத்தவள்
கண்ணுக்கு இமையாய் காப்பவள்
கடமை என்பதை அவளிடம்
கற்றுக்கொள்
நேர்மை என்பதை நிதமும்
பெற்றுக்கொள்
தியாகம் என்பதற்கு அர்த்தம் தேடினாள்
அன்னை என்பதன் ஆழம் புரியும்...

**திருமதி. கிரிசாமல்லிகை ஜெகதீஸ்வரன்**
ஆசிரியை

## அறிந்து கொண்ட விளையாட்டு வினாமாலை

என்ன? அன்னம்
என்ன அன்னம்? சோற்று அன்னம்
என்ன சோறு? பழஞ்சோறு
என்ன பழம்? மாம்பழம்
என்ன மா? அரிசி மா
என்ன அரிசி? குத்தரிசி
என்ன குத்து? வயிற்றுக் குத்து
என்ன வயிறு? பேத்த வயிறு
என்ன பேத்த? வால்ப் பேத்த
என்ன வால்? நரி வால்
என்ன நரி? குள நரி
என்ன குள? வாழைக் குள
என்ன வாழை? திரி வாழை
என்ன திரி? விளக்குத் திரி
என்ன விளக்கு? குத்து விளக்கு
என்ன குத்து? இந்தக்குத்து
(என்று எதிர் பாராத விதமான ஒரு குத்து மெதுவாக கொடுக்கலாம்)

**பு.அனாயா** - தரம் 3A

# சிறுவர் உரிமைகள்

18 வயதிற்கு குறைந்த சகலரும் சிறுவர்களாக கருதப்படுவர். சிறுவர்களைப்பாதுகாப்பதற்காகவும் சிறுவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஐக்கிய நாடுகளில் சிறுவர் உரிமை சமவாயம் உருவாக்கப்பட்டு, 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன் 1991 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினாலும் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.



## சிறுவர் உரிமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில உரிமைகள்.

- ☆ பிறப்பின் போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை
- ☆ பெற்றோரைத் தெரிந்து கொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்குமான உரிமை
- ☆ பெற்றோரிடமிருந்து தம்மை தனிமைப்படுத்தாதிருப்பதற்கான உரிமை
- ☆ வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை
- ☆ தமது கருத்தை வெளிப்படுத்தும் உரிமை
- ☆ சிந்திப்பதற்கும் மனச்சாட்சிப்படி நடப்பதற்கான சமயமொன்றைப் பின்பற்றுவதற்கான உரிமை
- ☆ போதிய கல்வி பெறும் உரிமை
- ☆ சமூக உரிமை
- ☆ சுகாதார வசதிகள் பெறும் உரிமை
- ☆ ஓய்வெடுக்கவும் விளையாடவும் உரிமை
- ☆ சித்திரவதை, கொடூரமான தண்டனைகளில் இருந்து தவிர்த்ததுக்கொள்ளும் உரிமை
- ☆ சாதாரண வழக்கு விசாரணைகளுக்குள்ள உரிமை
- ☆ சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை

போன்ற பல்வேறு உரிமைகளை அனுபவிக்கும் உரிமை சிறுவர்களுக்குண்டு. சிறுவர்களாகிய எமது உரிமைகள் பாதுகாக்கப்படும் போது நாட்டில் ஆங்காங்கே நடக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறைவடைவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும்.

**ச.லுஜானி**
பழைய மாணவி 2014

# கற்றலினூடாக எதிர்பார்ப்பு

மாணவர்களுக்கு நாம் பல விடயங்களைக் கற்பிக்கின்றோம். கற்பிக்கும் போது மாணவர்கள் நாம் கற்பிக்கும் விடயங்களை நன்கு கூர்ந்து கவனிக்க வேண்டும். அதனைக் கிரகிக்கவேண்டும். அதனூடாக மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியடைவேண்டும். கிரகித்தவற்றை ஞாபகத்தில் வைத்திருந்து பரீட்சை எழுதும் போது பிரயோகிக்க வேண்டும். அதன் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அதிகரிக்க வேண்டும். மாணவர்களின் வாழ்வு உயர்வடைய வேண்டும் என்பதெல்லாம் எமது எதிர்பார்ப்புக்களாக அமைகின்றன. பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்கள் அமைந்த போதிலும் எந்தளவு நிறைவேற்றம் அடைகின்றது? என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக நாம் கற்பிக்கும் போது பதினைந்து சொற்களை மாணவருக்குக் கூறி அதனைக் கிரகித்து, ஞாபகத்தில் நிறுத்தி, அந்த சொற்களை மாணவர்களை எழுத வழிப்படுத்துகின்ற போது, சொற்கள் அனைத்தையும் எழுத முடியாதபடி மாணவர்கள் தடுமாறுவதையும் சில சொற்களை மாத்திரம் அவர்களால் எழுத முடிவதையும் நாம் அவதானிக்கின்றோம். ஆனால் பதினைந்து சொற்களும் குறிக்கும் பொருட்களை ஒரு சில நிமிடம் காட்சிப்படுத்திய பின் அதனை அகற்றி விட்டு இப்போது பார்த்த பொருட்களின் பெயரை எழுதுங்கள் என்று கூறும் போது கேட்டு கிரகித்து எழுதிய சொற்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையான சொற்களை மாணவர்கள் எழுதுவதை அவதானிக்க முடியும்.

மேலும் அதே பதினைந்து சொற்களுக்குமான பொருட்களை ஒரு பாடவேளை முழுவதும் கையாண்டு கருமமாற்றவோ, அல்லது அவைகளைக் கொண்டு விளையாடவோ செய்த பின்னர் பொருட்களை அகற்றி விட்டு அப்பொருட்களின் பெயர்களை எழுத வழிப்படுத்தும் போது மாணவர்கள் அனைத்துச் சொற்களையும் எழுதுவதை நாம் காணமுடியும். இதனை கொண்பியுசியஸ் என்ற அறிஞர் “எனக்குச் சொல்லுங்கள் நான் மறந்து விடுவேன், எனக்குக் காட்டுங்கள் நான் நினைவில் வைத்திருப்பேன், என்னை ஈடுபடுத்துங்கள் நான் கற்பேன்” என்ற கூற்றின் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

நம்மில் அனேகர் கல்விக்காக அதிக காலத்தைச் செலவு செய்து கல்வியில் ஈடுபட்டு சான்றிதழ்கள், டிப்ளோமா, பட்டங்கள், பட்டப்பின் படிப்பு, கலாநிதிப்பட்டங்கள் பெற்றவர்களாவோம். எனினும் நாம் பெற்ற கல்வியில் 10% இற்கு மேல் நினைவூட்ட முடியுமா? நாம் அவ்வாறு செய்யமுடியாமைக்கான காரணம் நாம் கல்வி எனப் படித்து எமது பாடங்களை பரீட்சையின் பின் சான்றிதழ் பெற்றதோடு மறந்து விடுதலாகும். எனினும் நாம் துவிச்சக்கர வண்டியினை செலுத்திச் செல்லப் பழகினோம். இன்றைக்கும் அதனை எம்மால் செய்யமுடிகிறது. மோட்டார் சைக்கிள் ஓட்டிச் செல்லப் பழகிக் கொண்டோம். இன்றும் அதனை செய்யமுடிகிறது. இதற்கு காரணம் யாதெனில் இவ்விரண்டு விடயங்களையும் நாம் ஈடுபடுவதன் மூலம் கற்றமையே ஆகும்.

அரிஸ்ரோட்டல் என்ற தத்துவவியலாளர் கற்றல் பற்றிக் கூறும் போது “ஒன்றினை செய்வதற்காக கற்றல் வேண்டும். ஒன்றினை செய்வதன் மூலம் கற்க

முடியும்" எனக் கூறுவதன் மூலம் அனுபவக்கல்வியை சுட்டிக்காட்டுகின்றார்.

மேலும் டேனின் அனுபவக் கூம்பின் மூலம் கற்றலின் செயற்திறனை அறியலாம்.

வாசிப்பன 10%
கேட்கின்றன 20%
காணுகின்றன 30%
கேட்கின்ற மற்றும் காணுகின்ற 50%
பேசும் மற்றும் எழுதும் 70%
பேசும் மற்றும் ஈடுபடுவனவற்றால் 90%

அதாவது மனிதர்கள் வாசிப்பதன் மூலம் 10% கேட்பதன் மூலம் 20%,காண்கின்றவற்றினால் 30%, கேட்கும் மற்றும் காணுகின்றவற்றினால் 50% சொல்லுகின்ற மற்றும் எழுதுகின்றவற்றினால் 70% சொல்லுகின்ற மற்றும் ஈடுபடுகின்றமையினால் 90% கற்கின்றார்கள்.

தன்சானியா என்ற நாட்டிலே பாடசாலைகளில் முற்பகல் வேளைகளில் கற்கும் விடயங்களை பிற்பகல் வேளைகளில் விவசாய நிலங்களில் பிரயோகித்து விவசாயச் செய்கைகளை மேற்கொள்ளும் செயன்முறை மூலம் ஈடுபடுத்தப்படுகின்றது. இது வெற்றிகரமான செயற்பாடாகவும் சிறந்ததோர் கல்வி முறையாகவும் இருப்பதைக் காணமுடிகிறது.

மேற்கூறப்பட்ட விடயங்களை மனதில் கொண்டு சிறந்த முறையில் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு எமது மாணவர்களினதும் பெற்றோர்களினதும் சமூகத்தினதும் அரசினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வெற்றிப்பாதையில் செல்வோம்.

**திருமதி. எஸ்.வாணிஸ்ரீ - ஆசிரியை**



# விடுகதைகள்

1. ஆண்டுதோறும் வரும் வரி அடுத்தடுத்தது வரும் வரி அது என்ன?
2. பச்சைத் தோழனுக்கு சிவப்பு ரத்தம் அவன் யார்?
3. நீரும் இல்லை நிலமும் இல்லை கரை மட்டும் உண்டு அது என்ன?
4. வெள்ளை சீமாட்டிக்கு தலை மேல் விளக்கு அவள் யார்?
5. அண்ணன் இனிப்பு, தம்பி புளிப்பு, தங்கை மணப்பாள் அவர்கள் யார்?

விடைகள்

1. ஜனவரி, பெப்ரவரி
2. தார்பூசணி
3. சக்கரை
4. மெழுகுவர்த்தி
5. பால், தயிர், நெய்

நி.ஹிஷோனிக்கா - தரம் 2A

# திரு.மு.நல்லதம்பி புலவர்



**"பாரதி என்றொரு தாமரை பூத்தது**
**பாரத நாடெனும் வாவியிலே – அதன்**
**சீரிதழ் ஆயிரம் செங்கதிர் போலொளி**
**செய்து விளங்குது பூமியிலே"**

என்று பாரதியின் புகழ் பாடியவர் முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி புலவர். சிறந்த கவிஞரான இவர் கவித்துவம் மிக்க பல பாடல்களை இயற்றியவர். இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர். குழந்தைகளுக்கான பாடல்கள் பலவற்றை எழுதியவர். எடுத்துக்காட்டாக, உறங்கும் குழந்தையைத் தாய் துயில் எழுப்பும் வகையில் "துயில் எழுவாய் கிளியே" என்ற பாடலை எம் பாட்டிமார் முணுமுணுத்ததை மறுக்கமுடியாது.

வட்டுக்கோட்டையில் பிறந்து கொழும்பு சாஹிராக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராய் அமர்ந்து இருபத்தெட்டு ஆண்டுகள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தழிழ் ஆர்வத்தை வளர்த்தவர் முதுதமிழ் புலவர். தழிழ் திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தால் 1948 ஆம் ஆண்டிலே முதுதழிழ்ப்புலவர் என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கப் பெற்ற கவிஞர் இவராவார்.

இவர் பாடநூல் பலவற்றையும் வெளியிட்டுள்ளார். இவரது புலமைத்திறனை இளைஞர் விருந்து என்னும் கவிதை நூலில் நன்கு காணலாம். சிறுவர்களுக்கான பல்வேறு பாடல்களை இவர் படைத்துள்ள போதிலும் அவற்றில் பெரும்பாலானவற்றைப் பெறமுடியாதுள்ளமை கவலைக்குரியதாகும்.

**ஈ.திராவிடன்** - பழைய மாணவன்

# சூரியன்

இருண்டு காணப்படுகின்ற வீட்டுக்குள் ஒரு சிறிய மெழுகுதிரி எரிந்தால் அவ்வீடு பிரகாசமாக காணப்படும். அதே போல் இவ்வுலகமானது இருள் நீங்கி ஒளியாக சுடர் விட்டு பிரகாசமாக காணப்படுவதற்கு காரணமாக அமைவது சூரியன் ஆகும். பிரபஞ்சத்திலுள்ள கோடான கோடி நட்சத்திரங்களில் ஒன்று தான் சூரியன் ஆகும். இது ஞாயிறு, ஆதவன், பரிதி, பகலவன், கதிரவன், அருணன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி இந்து மத மக்கள் இயற்கைத் தெய்வமாக போற்றுகின்றனர். சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக தைப்பொங்கல் விழாவை கொண்டாடுகின்றனர். தாவர வளர்ச்சிக்கு தேவையான காரணிகளுள் சூரிய ஒளியும் ஒன்றாகும்.

சூரியனைப் பற்றி விஞ்ஞானிகளின் கருத்துப்படி புவியைப் போல 109 மடங்கு விட்டத்தைக் கொண்டது. சுய ஒளியுடையது. சூரியனைச் சுற்றி கோள்கள் வலம் வருவதாகவும் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர். இவ்வுலகில் நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தது. அதிக பெறுமதி வாய்ந்த வெளிப்புறத்தில் வெப்பநிலையை எல்லாத்திசைகளுக்கும் வாரி இறைக்கின்ற புகழ் மிக்கது சூரியனாகும்.

வி.பவிஷானி - தரம் 1A


# MY HOBBY

A hobby is nothing but to have a change in the routine work. It is a happy union of a profit and pleasure. There are varieties of hobbies. Gardening as my hobby, derives great pleasure for me. I love planting flowers, especially some vegetables of the particular season in my garden. Besides the pot planting, I got a numerous flower –pots which help me in budding some very green plants and some flowering plants. When the plants bear blossoms, I feel a thrill of joy in my mind.

The plants give out a sweet scent in the evening. Morning gardening really makes me feel so fresh and active. I love being in the garden and I watch the butterflies. I water the plants and enjoy the nature of the pure air in the evening. I water the plants twice a day during the summer. I talk with the plants and sing to them. It helps me in relieving stress and tension and makes my day far better and healthier to a morning without gardening. I carry on gardening only in my spare time. My hobby gives me happiness and some exercise for my body. My hobby satisfies my inner urge and gets an emotional response. Gardening as a hobby is a great fun. Keep you environment healthy and green.

**Miss.K.Yuvakshana - Old student – 2013**

# MY COUNTRY




My country is Sri Lanka. It is an island situated in the Indian Ocean. It is known as the 'Pearl of the Indian Ocean'. The capital of my country is Sri Jayawardanapura kotte and commercial capital is Colombo. The President of my country is Hon.Maithripala Srisena and the prime minister is Hon.Ranil Wickramasinghe. The island has a tropical climate. Two monsoons coming from the north east and south west bring rain to to all parts of the country. The largest river in Sri Lanka is the Mahaweli and the highest mountain is Piduruthalagala. The highest waterfall is Bambarakanda.

Our national flag is called the Lion flag. Our national flower is Blue water Lily, national tree is Na tree, national animal is Giant Squirrel and our national sport is Volleyball. But Sri Lanka is famous for cricket. The economy of Sri Lanka is both agricultural and trade based. Tea, rubber and coconuts products are important exports. The world's best tea comes from Sri Lanka. Rice is our staple food. The golden beaches of Sri Lanka are very much enjoyed by the tourists. Sri Lanka has always been famous for its precious stones.

On February 4, 1948 Sri Lanka gained independence. Our national anthem is 'Sri Lanka Matha'. The official languages are Sinhala, Tamil and English in Sri Lanka. My country is a peaceful country where all the religions such as Buddhist, Hindus, Christians and Muslims all live in harmony. I am so proud to be a Sri Lankan. I love my motherland Sri Lanka a lot.

**S.Nithursikka - Grade 5 B**


கஜானந்த் அச்சகம்




(Book சொப் & ஸ்ரூடியோ)

சகல விதமான அச்சக வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் விபுலானந்தர் வீதி, வாழைச்சேனையில் அமைந்துள்ள கஜானந்த் அச்சகம்

ஒப்செட் பிரின்டிங்
திருமண அழைப்பிதழ்
ஆலய உற்சவ பிரசுரம்
கடிதத் தலைகள்
பற்றுச்சீட்டு புத்தகம்
சான்றிதழ்கள்
விசிடிங் காட்
துண்டுப் பிரசுரங்கள்

டிஜிட்டல் பிரின்டிங்
வெனர் பிரின்டிங்
ஸ்டிக்கர் பிரின்டிங்
ID காட் பிரின்டிங்
Mug பிரின்டிங்

ஸ்கிறீன் பிரின்டிங்
கலர் பிரின்டிங்
போட்டோ எடிட்டிங்
போட்டோ பிறேமிங்
டைப் செட்டிங்
Book வைன்டிங்
கிராபிக்ஸ் டிசைனிங்
றப்பர் ஸ்டம் மேக்கிங்





சகல விதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் புகைப்படப் பிடிப்பு, புகைப்பட வேலைகளையும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்.

விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.
077-691-5080, 075-2263340

# சிறுவர்களின் சிந்தனை

சின்னப் பட்டு நாங்களே
சிரித்து மகிழ்வோம் வாருங்கள்
எண்ணம் போல நாளுமே
எல்லையற்ற ஆனந்தம்

ஆடிப்பாடி மகிழலாம்
பண்பாய் நாமும் வளரலாம்
அச்சம் இன்றி நாளுமே
அன்பை அள்ளிச் சேர்ப்போம்

சோகம் சோம்பல் இன்றியே
சுகமாய் வாழப் பழகுவோம்
சொந்தம் பந்தம் இணையவே
இன்பம் பெற்று வாழுவோம்

உறுதி என்பது மனதிலே
உண்மை என்பது உணர்விலே
ஒழுக்கம் என்பதைப் பேணியே
உயர்வை நாமும் பெற்றிடுவோம்.

**வி.திசோறிக்கா – தரம் 1 A**

# புதுமை போற்றிடு பாப்பா

அன்பை வளர்த்திடு பாப்பா – நீ
அறிவை வளர்த்திடு பாப்பா
உறவை வளர்த்திடு பாப்பா – நீ
உலகம் போற்ற வாழ்ந்திடு பாப்பா

கல்வி கற்றிடு பாப்பா – நீ
கனிவுடன் பேசிடு பாப்பா
புதுமைகள் புனைந்திடு பாப்பா – நீ
புலமை பெற்றிடு பாப்பா

உண்மை உரைத்திடு பாப்பா – நீ
உத்தமனாய் வாழ்ந்திடு பாப்பா
தாய் தந்தையரை பேணிடு பாப்பா – நீ
தர்மம் செய்து வாழ்ந்திடு பாப்பா

**வ.அபிர்ஷா – தரம் 5B**

# இயற்கை முறை வீட்டுத்தோட்டத்தின் பயன்கள்

இயற்கை முறை வீட்டுத்தோட்டம் என்பது இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட சேதனப்பசளைகளை பயன்படுத்தி பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் முறையே இயற்கைமுறை வீட்டுத்தோட்டம் எனப்படும். இதன் மூலம் நாம் பல பயன்களைப் பெறுகின்றோம். அந்த வகையில் புத்தம் புதிய காய்கறிகளைப் பெறலாம். நாம் நஞ்சற்ற உணவுகளை உண்ணலாம், நஞ்சற்ற உணவுகளை உண்பதனால் ஆயுள் நீடித்து சக்தியும், பலமும் நிறைந்தவர்களாக மாறமுடியும். இது நமது வருமானத்தை உயர்த்துவதாகவும் காணப்படுகின்றது. ஆகவே சின்னஞ் சிறுவர்களாகிய நாமும் நம் பெற்றோரின் உதவியுடன் நமது வீடுகளிலும் வீட்டுத்தோட்டத்தினை அமைத்து நஞ்சற்ற உணவுகளை உண்டு இவ்வுலகில் பலம் மிக்கவராக மாறுவோம்.

**ச.பவிலக்ஷன் - தரம் 2 B**

# 'அ' முதல் 'ஔ' வரை பழமொழிகளும் கருத்துக்களும்





- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
  - ஒற்றுமையே பலம்.
- ஆழமறியாமல் காலை விடாதே
  - எதையும் ஆராய்ந்தே செய்தல். வேண்டும்.
- இரக்கப்போனாலும் சிறக்கப் போ
  - வறுமையிற் செம்மை.
- ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும் - பணத்தின் வலிமை.
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை - நன்றி மறவேல்.
- ஊசி போகுமிடம் பார்ப்பார் உலக்கை போகுமிடம் பாரார் - சிறு விடயத்தில் கவனமும் பெரிய விடயத்தில் கவலையீனமும்.
- எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை.
- ஏழை அழுத கண்ணீர் கூரிய ஏக்கும் - ஏழ்மையின் வலிமை.
- ஐயர் வருகிற வரை அமாவாசை காத்திருக்குமா? - காலத்தின் வலிமை.
- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. - ஒற்றுமை.
- ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி - சுயநலம்

சு.திஸ்மிகா - தரம் 3A


# யாழ் சைவ உணவகம்

ஆலய விழாக்கள், வீட்டு வைபவங்கள்,
பொது நிகழ்வுகள் போன்ற தேவைகளுக்கான
உணவு வகைகள் ஓடர் செய்வதன்
மூலம் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.





பிரதான வீதி, வாழைச்சேனை.
தொடர்புகளுக்கு: 077 9950918

# கல்வி பற்றிய பொன் மொழிகள்

1. ஆயிரம் கோயிலைகள் கட்டுவதை விட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது சிறந்தது.
   - மகாகவி பாரதி

2. இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன், எதிர் கால வாழ்விலும் இறந்தவன்
   - யூரிபிடிஸ்

3. கல்வி என்பது ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று அடக்கம், ஒழுக்கம், அறம், நீதி இவற்றின் முன்மாதிரி ஆகும்.
   - எட் மண்ட் பர்க்

4. வாழ்க்கை அனுபமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது
   - பெர்னார்டஷா

5. சான்றோன் ஆக்காத கல்வி சாமார்த்தியமாய்க் கழித்த சோம்பலே ஆகும்.
   - போலிங் புரூக்

6. கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது ஏனெனில் அறியாமை தான் தீவினையின் மூலவேர்
   - பிளேட்டோ


7. தேர்வு என்பது அறியாமையை அளக்கிற அளவுகோல் தானே தவிர அறிவை அளக்கும் அளவு கோல் அல்ல
   - கவிஞர் வைரமுத்து

8. ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒரு வித உபயோகமும் கிடையாது
   - காந்தியடிகள்

9. கல்வி என்பது தெரியாததைச் தெரியச் செய்வதன்று, ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பமளிப்பதுமாகும்.
   - ரஸ்கின் பாண்ட்

10. தனி மனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றியமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி.
    - பெஸ்டலகி

செல்வி.செ.ஷர்மியா - VTC பயிலுனர்



# காந்தள் மலர்



“நீரயற் கலித்த நெறிமுகைக் காந்தள்
வார்குலை அவிழ்ந்த வள்இதழ் கிரை
தொறும் விடுகொடிப் பிறந்த மென்தகைத்
தோன்றி பவழத் தன்ன செம்பூத் தாஅய்”
- நப்பண்ணனார்-

தமிழர் தம் வாழ்விலும் பண்பாட்டிலும் இரண்டறக் கலந்தவை இயற்கையும் மலர்களும், அவற்றுள் சிறப்புக்குரியது செங்காந்தள், வெண்காந்தள் எனவிரு இனங்களாக விளங்கும் காந்தள் மலர். நமது பழந்தமிழ் இலக்கியப் பாடல்களில் சிறப்பித்துக் கூறப்படும் “காந்தள்” மலர் பற்றிய சில செய்திகளின் தொகுப்பு இது.

✦பண்டைய அரச காலம் முதல் இது போற்றப்படும் மலராக விளங்குகிறது. மன்னர்கள் போருக்குச் செல்லும்போது காந்தள் மலர் மாலைகளை அணிந்து சென்றதாக சங்கப்பாடல்களின் மூலம் அறிய முடிகிறது.

✦சங்க இலக்கியமான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றில் ஏழு இடங்களில் செங்காந்தள் மலர் இடம் பெற்றுள்ளது. இதில் 64 இடங்களில் காந்தள் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. செங்காந்தள் மலர் உயர்ந்த மலைகளிலும், மலை முகடு, சரிவுகளிலும் அதிக அளவு காணப்படும்.

✦அந்தக் காலத்தில் வேடுவர்களிடம் செங்காந்தள் மலர்களைச் சூடும் பழக்கம் இருந்துள்ளது. மற்ற பெண்களும் பிற மலர்களுடன் செங்காந்தள் மலரைக் கோர்த்து சூடி மகிழ்ந்துள்ளனர்.

✦தேன் மிகுதியாகக் காணப்படும் செங்காந்தள் மலரை எப்போதும் வண்டினங்கள் வட்டமிட்டுக் கொண்டே இருக்குமாம். பிற மலர்கள் பூத்து உதிரும். ஆனால், செங்காந்தள் மலர் வாடினாலும் உதிர்வது இல்லை.

✦தமிழர்களின் தமிழ்க் கடவுளாக போற்றப்படும் முருகப்பெருமான் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்று கார்த்திகேயன் எனும் பெயர் பெற்று விளங்குகிறார். அத்தகைய கார்த்திகை மாதத்தில் மலரும் மலர் என்பதனால், காந்தள் விசேட சிறப்புப் பெறுகிறது. இதனால் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் மாநில மலராகவும் காந்தள் விளங்குகிறது.

✦காந்தள் மலரின் பூ தீச்சுவாலை போல் காணப்படுவதால் அக்கினி கலசம் என்றும் இலைகளின் முனை சுருண்டு காணப்படுவதால் தலைச்சுருளி என்றும் பற்றி ஏறுவதால் பற்றியென்றும் வளைந்து பற்றுவதால் கோடல், கோடை என்றும் அழைக்கப்படுகிறது.

✦மாரி காலத்தில் முதன் முதலில் வனப்புடன் தோன்றுவதால் “தோன்றி” என்றும் அழைக்கப்படுகிறது. மூலிகை மருத்துவத்தில் இதனை “வெண்தோண்டி” என அழைப்பர்.

✦இதன் தாவரவியல் பெயர் குளோரியோசா சூப்பர்பா (Gloriosa Superba) லில்லி இன மலர் வகையைச் சேர்ந்தது.

✦காந்தள் மலர் உருவாகி தளை அவிழ்ந்த ஏழு நாட்கள் வாடாமல் இருக்கும்,

இதழ்களில் நிறம் முதலில் பச்சை, பிறகு வெண்மை கலந்த மஞ்சள் பிறகு செம்மஞ்சள், பிறகு துல்லியமான சிவப்பு, நீலம் கலந்த சிவப்பாக மாறும் இதனால்தான் இதனை வெண்காந்தள், செங்காந்தள் என இருவேறு வகைகளாக குறிப்பிடுகின்றனர்.

✦கார்த்திகைத் திங்களில் முகிழ்விடும் இம்மலர்க் கொடி இலங்கை, இந்தியா, சீனா, மலாக்கா தீபகற்பம், அயனமண்டல ஆபிரிக்கா முதலான பகுதிகளிலும் காணப்படும்.

✦கிழங்கு பிரிந்து கணுக்கள் உள்ளதை ஆண்காந்தள் என்னும் கணுக்கள் இல்லாததை பெண்காந்தள் என்றும் குறிப்பிடுவர்.

✦காந்தள் மலரின் அனைத்து பகுதிகளும் கோல்சிசினே (colchicine) எனும் அல்கலோயட்கள் நிறைந்தது. அதனால் இவற்றை உட்கொண்டால் மரணம் சம்பவிக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக இதன் வேர் மிகுந்த நச்சுத் தன்மை கொண்டது. இதன் இலை மற்றும் தண்டு நம்மேல் பட்டால் தோலில் அரிப்பு உண்டாகும்.

✦சிங்களம்: நியன்கலா, சமஸ்கிருதம்: லன்கலி, இந்தி: கரியாரி, மராட்டி: மெத்தொன்னி, ஈந்தை, காதியநாக், கன்னடம்: கண்ணினஹத்தே, கரதி என பலமொழிகளிலும் பலவாறாக அழைக்கப்படுகிறது.

✦செங்காந்தள் (Gloriosa) அல்லது கார்த்திகைப்பூ ஜிம்பாவ்வே நாட்டின் தேசிய மலராகும்.

✦செங்காந்தள் மலர் புற்றுநோயைத் தீர்க்கக் கூடிய அரிய மருத்துவ குணம் கொண்டது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புற்றுநோய் பரவாமல் தடுக்கக் கூடிய கால்சிசின், குலோரியோசின் மருந்துகள் செங்காந்தள் செடியில் உள்ள விதை களிலும், கிழங்குகளிலும் அதிக அளவு உள்ளது. இதில் இருந்து மருந்துகளை எடுத்து, ஹீமோ தெரபி மூலம் புற்றுநோய் பரவாமல் தடுக்கலாம் என சொல்லப்படுகிறது. செங்காந்தள் செடியின் விதையை ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டு மருந்து நிறுவனங்களும் அதிகஅளவு வாங்குகின்றன.

இத்தனை சிறப்புக்களுடன் விளங்கும் "காந்தள்" மலரின் பெயரிலேயே எங்கள் பாடசாலையில் இருந்து கார்த்திகை மாதத்தில் மலரும் சின்னஞ்சிறார்களதும் ஆசிரியர்களதும் ஆக்கங்கள் அடங்கிய சிறப்பு மலரும் மலர்வது எல்லோருக்கும் சிறப்புச் சேர்ப்பதாகவே உள்ளது.

**ஸ்ரீ.தருண் சஞ்ஜெய்** - தரம் 2B




திருமதி.
பு. ஈவெரா



திருமதி.
உ.துரைராசா

## "வாழ்த்துகின்றோம்"



"தாழையூர் தனில் கார்த்திகை மாதமதில்
சந்திரகாந்தன் வித்தியாலயத்தில் மலரும்
கோலமுறு பாலகரும் ஆசான்களும் சேர்ந்துநறு
மாலையெனக் கோர்த்த தமிழ் காந்தள் மலர்
வீசுநறு மணமெங்கும் பரவட்டும்"



திரு.
சு.சின்னத்தம்பி

**பாடசாலை அபிவிருத்திக் குழுவின்
முன்னாள் செயலாளர்கள்**

# தமிழர்களின் நுண்ணிய கணித அளவுத்திட்டம்

உலக மொழிகள் தோன்றி 2000 ஆண்டுகள் தான் ஆகின்றது. தமிழினமும் தமிழ் மொழியும் 20000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிவிட்டது. குமாரிக்கண்டம் மற்றும் லேமானியக் கண்டங்களையும் 13 பிரதேசங்களையும் கட்டியாண்ட தமிழன் எந்த மொழியிலும் இல்லாத தசமக் கணக்கீட்டையும் (decimal calculation) கையாண்டான். தமிழ் கோயில்களின் சிற்பங்களில் உள்ள நுணுக்கமான வேலைப்பாடுகள் இருக்கட்டும் தூண்களில் ஒரு நூல் இடை கூட கோணல் இல்லாமல் கட்டப்பட்ட 1000கால் மண்டபமாக இருக்கட்டும் இன்னும் ஆதித் தமிழர்கள் செய்த அற்புதங்களை வியப்புடன் செய்யும் நாம் அவன் செய்த அரிய பல சாதனைகளின் விளைவாகக் கிடைத்த மிக துல்லியமான கணக்கறிவினைப் பார்ப்போம்.

ஒன்று – 1
3/4 – 3/4
1/2 – 1/2
1/4 – 1/4
1/5 – நாலுமா
3/16 – மூன்று வீசம்
3/20 – மூன்றுமா
1/8 – அரைக்கால்
1/10 – இருமா
1/16 – மாகாணி (வீசம்)
1/20 – ஒருமா
3/64 – முக்கால் வீசம்
3/80 – முக்காணி
1/32 – அரை வீசம்
1/40 – அரைமா
1/64 – கால் வீசம்
1/80 – காணி
3/320 – அரைக்காணி முந்திரி
1/60 – அரைக்காணி
1/320 – முந்திரி
1/102400 – கீழ் முந்திரி
1/2150400 – இம்மி
1/23654400 – மும்மி
1/1490227200 – குணம்
1/7451136000 – பந்தம்
1/44706816000 – பாகம்
1/312947712000 – விந்தம்
1/5320111104000 – நாகவிந்தம்
1/74481555456000 – சிந்தை
1/489631109120000 – கதிர்முனை
1/9585244364800000 – குரல்வளைப்பிடி
1/575114661888000000 – வெள்ளம்
1/57511466188800000000– நுண்மணல்
1/2323824530227200000000–தேர்த்துகள்

இவ்வளவு நுண்ணியமான கணியம் அந்தக்காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளது. இந்த எண்களை வைத்து எத்தனை துல்லியமான வேலைகள் நடந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். கணினியும் கணிதப் பொறியையும்(Calculator) தொழிநுட்ப வளர்ச்சியென்று இன்றைய தலைமுறை கூறிக்கொண்டேயிருக்கும் போது அதைவிட 1000மடங்கு மேலாக அந்தக் காலத்தில் தமிழன் சாதித்து விட்டான். தமிழன் வாழ்க.

மட்டக்களப்பு தோழர்கள், whatsApp, இல் இருந்து பெறப்பட்டது.

ருக்‌ஷனா - பழைய மாணவி 2014

# புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளை பெற்ற மாணவர்கள்


ஆ.டிலக்சினி-168
2013


ஸ்ரீ.மேனுதரன்-168
2013


ப.தினோஜ் - 155
2013


கோ.விதுவக்ஷன்-167
2014


கு.ஜினோஜன் - 163
2014


ச.லுஜானி - 161
2014


பு.ஷாருக்ஷன்-160
2014


நா.இலக்கியன்-153
2014


க.துஷாந்தினி-153
2014


வி.அபிலக்ஷன்-153
2014


ச.லோஜிதா-152
2014


செ.சுவேந்திரன்-150
2014


ஜெ.சர்ஜிதன்-190
மாவட்ட நிலை-2 (2015)


ஜ.யோபிக்கா-169
2015


நி.அஜிஷேக்-165
2015


சி.தனுஜன்-163
2015


ஜி.துஷ்யந்தன்-157
2015


ர.லயனல்ராஜ்-154
2015


பா.தர்மினி-174
2016


து.லதுர்சினி-169
2016


ச.துசிக்கா-159
2016


சி.கிசோபாலன்-154
2017

# நன்றி நவில்கின்றோம்


எமது வித்தியாலயமானது கல்குடா கல்வி வலயத்தில் குறுகிய கால இடைவெளியில் ஆரம்பிக்கப்பட்டு எல்லோரும் விரும்பும் பாடசாலையாகவும் அனைவராலும் பேசப்படும் பாடசாலையாகவும் கவின் நிலைமிக்கதுவுமாக இப்பகுதியில் சிறப்புற்று விளங்குவது அனைவருக்கும் மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்தவகையில் இதற்கு அருள் பாலித்த இறைவனை இறைஞ்சி நன்றியைத் தொடர்கின்றேன்.

இந்நிறுவனமானது தனித்துவமிக்கதாக திகழ வேண்டுமென இதனை ஆரம்பித்து தொடர்ந்து உதவி புரிந்து வரும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் கௌரவ.திரு.சி.சந்திரகாந்தன் அவர்களுக்கு முதற்கண் நன்றிகள். குறிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் நிர்வாகத்திறன் கொண்ட தலைமைத்துவம் ஒன்று அவசியம். அந்த வகையில் இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் போக்கிற்காக பணிபுரிவதுடன், இம்மலர் வெளிவருவதற்கு நல் ஆலோசனைகளை வழங்கிய அதிபர் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் சிறக்க நல்லாசிகளை வழங்கிய மதகுருமார்களுக்கும், இம்மலர் சிறக்க வாழ்த்துரைகளை வழங்கிய கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், கல்குடா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், அபிவிருத்திச் சங்க செயலாளர், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவது எமது கடமையாகும்.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும், ஆக்கங்களை தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், மற்றும் இதழாக்க குழுவினருக்கும், அனுசரணையாளராக திகழ்ந்த மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, வர்த்தக உரிமையாளர்களுக்கும் மனமுவந்த நன்றிகள். அடுத்து கணனி வடிவமைப்பிற்கு மேலதிக உதவி வழங்கிய செல்வி.செ.ஷர்மியா (VTC பயிலுனர்), அட்டைப்படம் தயாரித்த திரு.ச.கஜந்தன் (ரிது பிரின்டர்ஸ்), விரைவாக அச்சிட்டு தந்த திரு. அ.ஸ்ரீதர் (தருண் பிரிண்டர்ஸ்) அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக் கன்னி மலரை ஆய்வு செய்த திருமதி.யோ.குணரெட்ணம் கல்குடா வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும் நன்றிகள். இம்மலர் சிறப்புற வெளிவர அனைத்து வழிகளிலும் நல்லுதவிகளை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.செ.வாணிஸ்ரீ - இணை இதழாசிரியர்**



"துன்பமுற வரினுஞ் செய்க – துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை"

வாழைச்சேனையில்...

அச்சுத்துறையின் புதிய தருணம்

எஸ்.ஏ.ஸ்ரீதர்
076 6763507

# தருண் பிரிண்டர்ஸ்

# THARUN PRINTERS








திருமண, நீராட்டு விழா, பிறந்த நாள்,
நினைவுநாள், வீடு குடிபுகுதல் போன்றவற்றுக்கான
அழைப்பிதழ்கள்! கோயில் பிரசுரங்கள், கையேடுகள்,
சஞ்சிகைகள், புத்தகங்கள்
இன்னும் பல விதமான...

அனைத்து வகையான அச்சு வேலைகளுக்கும்...



**141/B, 8TH CROSS STREET,**
**KARUNAIPURAM, VALAICHENAI.**
**T.P: 076 6763507, 076 8305555**
*E-Mail: sasridhar@ymail.com*



விரைவாகவும் நிறைவாகவும் விலை குறைவாகவும்





